விலை ரூபா 2-00 ★ 16 பக்கங்கள்

# ஈழநாடு
வாரமலர் THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர்: 25 கார்த்திகை 4 ஸபர் 14 இதழ் 279 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 20-11-83

## ஆசிரியர் பிரச்னை: தேசிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கை

(மானிப்பாய்)

சமீபத்திய வன்செயல் காரணமாக வடக்கு கிழக்குக்கு இடம்பெயர்ந்த தமிழ் ஆசிரியர்களின் பிரச்னைகள் தொடர்பாக அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் பிரச்னையை அணுகி இடம்பெயர்ந்துள்ள ஆசிரியர்களின் கோரிக்கைகள் நியாயமான அடிப்படையில் நிறைவேற்றப்படாவிட்டால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மாத்திரமன்றி ஏனைய மாகாணங்களிலுமுள்ள சிங்கள முஸ்லிம் ஆசிரியர்களையும் உள்ளடக்கிய தேசியமட்ட ரீதியிலான ஒரு தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படும் என நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

★ பிரிவினையைக் கைவிடுமாறு பார்த்தசாரதி வற்புறுத்து

# எதிர்நோக்கும் பிரச்னையை தமிழர்கூட்டணி விளக்கியது!

(புதுடில்லி)

தமிழர் விடுதலைக் கூட்டணியினர், பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு, புதியயோசனையான மாநில சபைத்திட்டத்தை ஏற்க வேண்டுமென்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் சிறப்புப் பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதி, அவர்களிடம் வற்புறுத்தியுள்ளதாக டில்லியிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் புதியயோசனையை ஏற்கும் பட்சத்தில், தங்களை எதிர்நோக்கும் பிரச்னைகளை திரு. பார்த்தசாரதியிடம் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் விளக்கிக் கூறியுள்ளதாகத் தெரிய வருகிறது.

புதுடில்லியில் இதுவரை இரண்டு தடவை திரு. பார்த்தசாரதியை திரு. அமிர்தலிங்கம் தலைமையில் சந்திதுப் பேசிய கூட்டணியினர், மீண்டும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

(16-ம் பக்கம் பார்க்க)

யாழ். செயலகத்திலுள்ள

## பிறப்பு இறப்பு புத்தகங்கள் உருக்குலைகின்றனவாம்!

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ்ப்பாணம் செயலகத்திலுள்ள பிறப்பு-இறப்பு பதிவாளர் பகுதியிலுள்ள பதிவுப் புத்தகங்களில் அதிகமானவை உருக்குலைந்தும், சீரழிந்துமுள்ளதால் பிறப்பு-இறப்பு அத்

(16ம் பக்கம் பார்க்க)

பயங்கர ஆயுதங்களுடன்

## மட்டக்களப்பில் 10 இளைஞர் கைது!

(இ. கந்தசாமி)

மட்டக்களப்பில் கடந்த வியாழக்கிழமை 10 தீவிரபயங்கரவாதிகளை பொலிசார் கைது செய்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கிவரும் ஒரு தீவிர

(16ம் பக்கம் பார்க்க)

## "இப்படிச் சொல்லும் இந்திரா

## இலங்கை விவகாரத்தில் ஏன் தலையிடுகிறார்?"

(கல்கத்தா)

"அகாலி கிளர்ச்சியில் பாகிஸ்தானின் கையோங்கியுள்ளதாக கூறும் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி இலங்கை விவகாரத்தில் ஏன் தலையிடுகிறார்?"

இவ்வாறு சீக்கியத் தலைவர் திரு பிந்தான்லாலே கல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'சூரியா' வார சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், 'ஸ்ரீலங்காவை பிளவுபடுத்த நினைப்பவர்களுக்கு இந்திரா ஒத்தாசை புரியலாமா? அங்கே இருக்கிறவர்களிடம் அனுதாபம் இருக்கிறது. இங்கே இருக்கிறவர்களுக்கு செவிசாய்க்கத் தயாராக இல்லை. இங்கே பாகிஸ்தான் கை ஓங்கியிருக்கிறதாம். ஸ்ரீலங்காவில் கிளர்ச்சியை தூண்டிவிட்டது யார்?" என்றும் கூறியுள்ளார்.

## "எந்த நிலைமையையும் சமாளிப்போம்"

### சபையில் ஹபரதுவ எம். பி.

(கொழும்பு)

"அரசாங்கத்தின் கட்டுப்பாடற்ற பொருளாதாரக் கொள்கையினால் இன்று நாட்டு மக்களிடம் முன்னெப்போதுமே காணப்படாத பல பொருட்களைக் காணக்கூடியதாய் இருக்கிறது ஆனால் இவை தமிழரிடம் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள் அல்ல".

இவ்வாறு ஹபரதுவ எம்.பி. திரு. ஜே. வி. எஸ். டி. சில்வா நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் வரவுசெலவுத் திட்ட விவாதத்தின் மீது பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் "நாம் பிரச்னைகளைக் கண்டு ஓடமாட்டோம். எந்த நிலைமையையும் எதிர்நோக்கிச் சமாளிப்போம் என்றார்.

நிதியமைச்சர் ஒரு சாதனையை நிகழ்த்தியுள்ளார். அவர் சமர்ப்பித்துள்ள 7-வது பட்ஜட் இதுவாகுமென்று அவர் நிதியமைச்சரைப் பாராட்டினார். [இ]

## மின்னேரியாவில் உபதேர்தல்!

(கொழும்பு)

மின்னேரிய தொகுதிக்கு உபதேர்தல் நடத்துவதென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இத்தொகுதியின் ஐ. தே. கட்சி உறுப்பினர் ராஜினாமா செய்ததினால் காலியாகவுள்ள இத்தொகுதிக்கு உறுப்பினரை நியமனம் செய்யாமல், உபதேர்தலை நடத்தப்போகிறோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு ஹரிஷா அபயவர்த்தன தெரிவித்துள்ளார். (இ)

இலங்கைப் பல்கலைக்கழக
வெளிவாரி பட்டப்படிப்புகள்
கல்வியாண்டு 1984 / 85

பாடநெறிகள்:-

G—A—Q......B. A கலைப்பீடம்
FIRST IN COM......B COM வர்த்தகபீடம்
FIRST IN LAW......L L. B சட்டபீடம்

தகுதிகள்:-

★ க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் G. A. Q., 1st in COM 1st in Law ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
★ பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிருவாகசேவை உத்தியோகஸ்தர்கள், டிப்ளோமாபட்டம் பெற்றவர்கள் G. A. Q, 1st in COM ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
★ G. A. Q., 1st in COM, 1st in Law சித்தியடைந்தவர்கள் முறையே B. A, B. COM, LL. B ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேற்படி பாடநெறிகளுக்கான விரிவுரைகள்
தை மாதம் 1-ந் திகதி (1-1-84) ஆரம்பமாகின்றன.
பாடநெறிக்கான விண்ணப்பப்படிவங்களையும்,
விபரத்திரட்டினையும் பெற விரும்புவோர்
REGISTRAR, ASTAN INSTITUTE, JAFFNA
என்ற பெயருக்கு ரூபா 10/- காசுக்கட்டளையுடன்
சுய முகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட
9"×4" அளவுடைய தபால் உறையை
அனுப்பிவைத்தல் வேண்டும்.
(விண்ணப்பப்படிவங்களை நேரிலும்
பெற்றுக்கொள்ளலாம்)
விண்ணப்ப முடிவு திகதி 30-12-83

ASTAN INSTITUTE
166/1, HOSPITAL ROAD, JAFFNA
(9989)

# வரி விளம்பரம்

## தேவை

பிறசியர் மற்றும் தையல் வேலையில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. நேரில்: அங்கலின் காமன்ஸ், 24/1, பெரியகடைவீதி, யாழ்ப்பாணம். 9985

மிக உன்னதமான நிலையிலுள்ள 404 கார் (73/74 Full Safari Model) தேவை விலாசம், டெலிபோன் நம்பர், கார் நம்பர், நிறம், Extras விலை விபரங்களை அறிவிக்கவும். ஸ்ரீதரன், 'நடராஜ கோட்டம்', வல்வெட்டித்துறை. (9991)

மின் ஒட்டுதல் (Electric Welding) வேலைக்கு அனுபவமுடையவர்கள் உடனே தேவை. விஸ்வரத்தினம், 138, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடிச் சந்தி, யாழ்ப்பாணம். (9996)

பிடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனையாளர் இருபாலாரும் தேவை. நேரில் வரவும்: த. சங்கரப்பிள்ளை அன் சன்ஸ், 21, புதிய மக்கள் நவீன சந்தை, யாழ்ப்பாணம். (9997)

பிளேற்றன் மெசின் மைன்டர், கொம்பசிற்றர், பைண்டர், மற்றும் மொனிற்ரேஸ் கொப்பி கட்டத் தெரிந்தவர்களும் பழக விருப்பமானவர்களும் தேவை. விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். தமயந்தி அச்சகம், மானிப்பாய் (9975)

பாண்வேலை தெரிந்தவர்கள் ஒருவரும், டெலிவரி செய்வதற்குச் சைக்கிள் ஓடத் தெரிந்த ஒருவரும் தேவை. உடன் நேரில் வரவும் நியூ பாரத் பேக்ஹவுஸ் பெற்றோலியக் கூட்டுத்ஸ்தாபன அருகாமை 86 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9956

மணமகள் தேவை. யாழ்ப்பாண இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த பாங்கில் உத்தியோகம் பார்க்கும் 2000 ரூபா வரை சம்பளம் பெறும் 36 வயதுடைய 12-ல் செவ்வாயுள்ள மணமகனுக்கு அதே குலத்தைச் சேர்ந்த அழகிய உயரமுள்ள படிப்பும் குணமுமுள்ள மணமகள் தேவை. லண்டன் அமெரிக்கா செல்ல விரும்புபவர்கள் விரும்பத்தக்கது. சீதனம் எதிர்பார்க்கப்படும். ஜாதகக்குறிப்பு, படம் என்பனவற்றுடன் உடனடியாக கடித மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல:9960 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9960

யாழ். நகரிலுள்ள நிறுவனமொன்றுக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை. தோடம்பழ இனிப்பு, கட்போல்ஸ் போன்ற இனிப்புவகைகள் தயாரிப்பதில் அனுபவம்பெற்றவர்கள்- கற்பூரவில்லைகள் தயாரிப்பதில் அனுபவம்பெற்றவர்கள்- சில்லறை வியாபாரத்தில் பில்போடக் கூடிய அனுபவம் பெற்றவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு 26-11-83க்கு முன் விண்ணப்பிக்கவும், விண்ணப்பங்களைத் தனித்தனியாக அனுப்பிவைக்கவும். விளம்பர இல: 9963 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 9963

மணமகன் தேவை. இந்து வேளாள குல அழகும் குணமும் உள்ள எஸ். எஸ். சி. படித்த பெண்ணுக்கு 33—36 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. அரச, கூட்டுத்தாபன, ஆசிரியர், தனியார்துறை, உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. சீதனம் நேரில் பேசலாம். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 9955 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9955

## தேவை

சகல வசதிகளுடனும் கூடிய வீடு உடனடியாக தேவை. பைப் Attached Bath-roomமுக்கியம் தொடர்பு: V. நல்லையா அலவத்தை அளவெட்டி வடக்கு, அளவெட்டி, 10015

யாழ்ப்பாண நகரில் அல்லது சுற்றுப்புறங்களில் ஒரு சிறிய வீடு அல்லது பகுதிவீடு வாடகைக்கு தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 9980 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9980

எலக்ரிக் வெல்டிங், காஸ் வெல்டிங், கம்மாலை வேலைகளில் மூன்றிலும் முன் அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். தங்குமிட வசதியும் செய்து தரப்படும். 25-11-83ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். முகவரி: து. சத்திவேல், வல்வை மெற்ரல் இண்டஸ்ரீஸ், காங்கேசன்துறை வீதி, வல்வெட்டித்துறை. 9936

மணமகள் தேவை. உயர் குல இந்துமத நற்பண்புள்ள மாதச் சம்பளம் 1800/- பெறும் தனியான அரச ஊழியருக்கு வாழ்க்கைத்துணை தேவை. வயது 45 - 52 தாரமிழந்தவர்கள் விவாகரத்துச் செய்தவர்கள் விரும்பத்தக்கது. வரதெட்சணை விரும்பப்படமாட்டாது. சாதி மதம் ஓரளவு கவனிக்கப்படமாட்டாது, முழு விபரமும் முதற்கடிதத்தில் எழுதவும். தொடர்பு விளம்பர இல. 9961, மே/பா, ஈழநாடு யாழ்ப்பாணம். 9961

## வாடகைக்கு

யாழ். பெரியகடை 142, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பிரபல வியாபாரஸ்தாபனத்தின் (அ. பேரம்பலம் அன் சன்ஸ்) மேல்மாடி, பெறுமதியுள்ள அலுவலகம் (Firm) போன்றவற்றிற்கு வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: 142, ஆஸ்பத்திரிவீதி. (10007)

## FOR SALE

9 Sri 589 Peugeot 304, for sale. Contact N. Dushyanthan, 4, Somasundaram Avenue, Chundikuli Jaffna. 9979

## SERVICE

Orders undertaken Cakes and Short Eats. Contact: R. T. Sinnadurai, 187, 4th Cross St., Jaffna. 9921

## சேவை

பரிசோதனைக்கேற்ற கணக்கியல் முறையில் எந்த ஸ்தாபனத்துக்கும் கணக்குப் புத்தகங்கள் பதிவு செய்து Trial Balance and Final Accounts தயாரித்துக் கொடுக்கப்படும். தேவைப்படுவோர் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 9732 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 9732

எம்மிடம் எல்லாச் சாதி சமயத்திலும் மணமக்கள் இருக்கிறூர்கள். கடிதமூலம் விண்ணப்பிக்கவும். புதன் கிழமை, ஞாயிற்றுக்கிழமை காலையில் நேரில் சந்திக்கலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். 9874

சகலவித நில அளவைக்கும் தொடர்பு கொள்க: ஆ. தம்பிராசா A. Thambirajah உதவி அளவை நாயகம் Asst. Surveyor General (Retd.) அளவெட்டி தெற்கு, அளவெட்டி. 9920

## விற்பனைக்கு

சமீபத்தில் இங்கிலாந்தில் இருந்து கொண்டுவரப்பட்ட Leyland Sherpa 240 Deluxe Diesel Delivery Van 1978ம் ஆண்டு மொடல். (கலனுக்கு 35 மைல் வேலை செய்யக் கூடியது) விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம். தொடர்பு கொள்ளும் முகவரி: ஆ. சுந்தரலிங்கம், 85, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். ரெலிபோன் யாழ்ப்பாணம் 23760 அல்லது 24019. 9967

மொறிஸ் மைனர் EL கார் நல்லநிலையில் உள்ளது. விற்பனைக்குண்டு. அ. குலநாயகம், இந்துக்கல்லூரி வீதி, உரும்பிராய். (9951)

அராலி கிழக்கு 'கப்பன வரவை' வீடுகட்ட உகந்த காணி கிணற்றுடன் 3பரப்பும், 'வீமசிட்டி' பனைவளவு 4 பரப்பும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு N. ராஜரட்ணம், 220, வீரணங்கல், வதிரி, கரவெட்டி. (9998)

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் இரண்டு பரப்புக் காணியுடன் ஐந்து அறை வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 12' புது வீதி, யாழ்ப்பாணம். 10014

டைட்பிஸ்ட் மேசை, கதிரை, Executive Table Conference Table, H. Iron Gurders விற்பனைக்கு உண்டு. Dr. N. உருத்திரசிங்கம், பொற்பதி வீதி, கோண்டாவில். (9983)

சங்கானை கிழக்கு தொட்டிலடியில், யாழ்ப்பாண ரோட்டிலிருந்து 200 யார் தூரத்தில் 9 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கோ, தோட்டம் செய்வதற்கோ உகந்த நிலம். விபரங்களுக்கு: தில்லையம்பலம், யாழ். வீரசிங்க மண்டபம். 9945

யாழ். நகரில் ஆட்டுக்கல், அம்மி, உரல், திருகை, மின் அரவை ஆட்டுக்கல் முதலியன கிடைக்குமிடம் S. S. அபூபக்கர் அன் கோ., 112, கே.கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். கைதேர்ந்த கலைஞர்களால் தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோர்ஸ், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. (9916)

காங்கேசன்துறையில் புகையிரத நிலையத்திற்கு முன்பாக கல்வீடும் கடையும் கொண்ட 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு என். சோதிலிங்கம், பருத்தித்துறை வீதி, தையிட்டி, காங்கேசன்துறை. 9910

பாவித்த கடைசிப்பதிப்பு 2nd MBBs புத்தகங்கள் விற்பனைக்குண்டு. (Gray's Anatomy EK). தொடர்பு: மெடிக்கல் ஹோல் டிஸ்பென்சரி, 224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22576. (9881)

37, ஸ்ரான்லி வீதிக் கட்டிடம், விற்பனைக்குண்டு. தொடர்பு: 142, ஆஸ்பத்திரி வீதி. (10008)

சங்கானை 7ம் கட்டையடியில் பிரதான வீதியில் சந்தைக்கு அண்மையில் வீடு கட்ட உகந்த ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், 9, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி. (10002)

அடைவு கடைகளுக்கும், வியாபார ஸ்தாபனங்களுக்கும் வீட்டுப்பாவனைக்கும் உகந்த இரும்புப்பெட்டிகள் விற்பனைக்குண்டு. பழுதான இரும்புப் பெட்டிகள் நல்லமுறையில் திருத்தியமைத்துத் தரப்படும். பழைய இரும்புப் பெட்டிகளும் வாங்கப்படும். இரும்புப்பெட்டி பழுதுபார்ப்பவர்களும், தயாரிப்பாளரும், எவர்சில்வர் மாளிகை நி.11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 9876

## விற்பனைக்கு

உடுவில் கிழக்கு அம்பலவாணர் வீதியில் 25 யார் K. K. S ரோட்டிலிருந்து வீடு கட்டுவதற்குரிய காணி 4½ பரப்பு விற்பனைக்குண்டு விபரங்களுக்கு பொ. தேவராசா, நாகவேல் அகம், K. K. S. ரோட், சுன்னுகம். 9981

மண்கும்பான் – மேற்கு பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் 32½ பரப்பு பனங்காணி உடனடி விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். விபரங்கட்கு:- மு. சுவாமிநாதன், மண்கும்பான் மேற்கு, (சங்கக்கடைக்கு முன்பாக), வேலணை. 9987

நல்லூர் கந்தசாமி கோவில் மேற்கு விதி அருகாமையில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- K. ராஜசுந்தரம், Y. M. H. A. முன்னுல், கொக்குவில் ரோட், திருநெல்வேலி வடக்கு, 9957

புனரமைக்கப்பட்ட டெலிக்கா வான் L 300 இல: 34 ஸ்ரீ 9761 விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். 'ஜம்பு லொட்ஜ்' மானிப்பாய். 10029

ஹோட்டேலுக்கும், பேக்கரிக்கும் உரிய தளபாடங்களும் டியூற்றரி பாவனைக்குரிய தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: 118, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (10024)

கொடிகாமத்தில் மின்சார வசதியுள்ள 25 பரப்பு தென்னங்காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்டவும் தொழிற்சாலை போடவும் உகந்தது சி செல்லப்பா, கண்டி ரோட், கொடிகாமம். 9932

## விற்பனைக்கு

பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதி பூங்காவனச் சந்தி (6 பரப்பு) ¼ ஏக்கர் ரோட்டு முகப்பு, குடியிருப்பு, நெற்களஞ்சியம் அமைப்பதற்கும், நெல் கொள்வனவு, சந்தைப்படுத்துவதற்கும் கேந்திரஸ்தானம் க. சுப்பையா: பிரதான வீதி, தெல்லிப்பளை. 9902

## கல்வி

வீடு வீடாகச்சென்று சிறந்த முறையில் இலக்கணத்துடன் ஆங்கிலம் போதிக்கப்படும். தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும். ச. ஈஸ்வரமூர்த்தி, மே/பா. பெ. சங்கரப்பிள்ளை, ஊரெழு மேற்கு, சுன்னுகம். (9976)

## குத்தகைக்கு

புன்னலைக்கட்டுவன் தெற்கில் 6000 கன்று (24 பரப்பு) தோட்டம் ஒற்றிக்கு உண்டு. திரு. சிவசப்பு, விசாலாட்சி வித்தியாசாலை ஒழுங்கை, மல்லாகம் என்பவருடன் தொடர்பு கொள்ளவும். 10004

### உடன் தேவை

டொபி, லொஸஞ்சர், பர்பி தயாரிப்பில் அனுபவமுள்ள

**TOFFEE MASTER**

(டொபி மாஸ்ற்ரர்)

உடன் தேவை.

25-11-1983இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல:10017, C/O ஈழநாடு யாழ்ப்பாணம். (10017)

### அச்சுயந்திரம் விற்பனைக்கு

"BREMNER" — Double Royal - சிலிண்டர் அச்சு யந்திரம் விற்பனைக்குண்டு. சுவரொட்டிகள் அச்சிடவும் மற்றும் தேவைகளுக்கும் பயன்படுத்தக் கூடியது.

தொடர்பு:

பொதுமுகாமையாளர்,
ஈழநாடு, யாழ்ப்பாணம்.

9992

### சட்டப் பரீட்சைகள்

யாழ்ப்பாணத்திலிருந்தே

**First In Laws Law Finals London**

சட்டப் பரீட்சைகளுக்குத் தோற்றுங்கள்

விபரம்:-

**திருமதி ரெஜினு ரைரெனி**

சட்டத்தரணி

SOLICITOR (LONDON)

121, இரண்டாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம் 9942

### உடனடி சேவை

உங்கள் சகல விதமான ஆங்கில, தமிழ் டைப்பிங் தேவைகட்கும், பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் ஆகியனவற்றின் அத்தாட்சிப்படுத்தப்படுத்திய பிரதிகளை உடனடியாகப் பெறவும் தொடர்பு கொள்க:

**இலங்கைத் தமிழியற் கழகம்**

121, 2ம், குறுக்குத் தெரு,

யாழ்ப்பாணம் 9941

### Wanted - Clerk

A hospital in Valligamam West division requires the services of a clerk. Should be able to handle correspondence independently. Knowledge of accounts and typing essential.

Canvassing in any form is a disqualification. Apply on or before 25-11-83.

Advt. No. 9958, - C/o, Eelanadu. Jaffna.

9958

வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

## ஈழத்தில் சிறப்பெய்திய

# கடல் கடந்த தமிழ்

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்று ஔவைப் பிராட்டியார் கூறிய உபதேசம் மிகப் பழைய காலந்தொட்டு தமிழ் மக்கள் கடைப்பிடித்து வந்த ஒரு கொள்கையை ஒட்டியதாகும். கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றூண்டுகளுக்கு முன்னரே தமிழ் வணிகம் கிழக்குத் திக்கிலும் மேற்குத் திக்கிலும் பல நாடுகளில் பரவியிருந்தது என்பது சரித்திர ஆராய்ச்சியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை.

தமிழ் மாலுமிகளும் வர்த்தகர்களும் சென்ற நாடுகளில் சில தமிழ்ச் சொற்கள் ஆங்காங்கு புகுந்து வழங்கப்படலாயின.

யூதர்கள் 'ஹீப்ரு' மொழியில் எழுதிய பைபிள் என்ற சமய நூலில் தோகை என்ற தமிழ்ச் சொல் தூக்கிம் என்று மருவிய வடிவில் காணப்படுகிறது. பாலஸ்தீன நாட்டை ஆண்ட சாலமன் என்ற அரசன் காலத்தில் தோகைகள் அங்கு இறக்குமதி செய்யப்பட்டன என்று அந்நூல் கூறுகிறது

என்ற பெயருடையதாயிருந்தது.

ஜாவா என்று இந்தக் காலத்தில் கூறப்படும் தீவில் இப்பொழுதும் 'மச்சான்' என்ற தமிழ்ச் சொல் வழங்கி வருகிறது. மலாய் மொழியில் 'மாப்பிள்ளை', 'பூங்கா' முதலிய தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன.

### அமெரிக்காவில் கட்டுமரம் என்ற சொல்...

அமெரிக்காவில் மெக்ஸிகோ நாட்டு மொழியில் கட்டுமரம் என்ற சொல் படகைக் குறிப்பதாக இன்றும் சொல்லப்படுகின்றது.

[தமிழக வார சஞ்சிகையான 'கல்கி' 1958-ம் ஆண்டு தீபாவளி மலரில் இலங்கை அமைச்சராயிருந்த தமிழறிஞர் அமரர் சு. நடேசபிள்ளை எழுதிய கட்டுரை.]

லேயர் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட தமிழ்க் குடிகளின் வழி வந்தோர்கள் வசிக்கின்றனர்.

### யாழ். அரச பரம்பரை தமிழைப் போற்றி வளர்த்தன

வடபகுதியாகிய யாழ்ப்பாணம் நெடுங்காலமாகத் தமிழ் இலக்கண இலக்கியப் பயிற்சியில் மேம்பட்ட இடமாக விளங்கிவருகிறது. இங்கு ஓர் அரச பரம்பரை ஆட்சி செய்து தமிழைப் போற்றி வளர்த்தமை இதற்கு முக்கிய காரணமாகும்.

**சு. நடேசபிள்ளை**

சங்க இலக்கியங்களில் ஈழத்துப்பூதன் தேவனுர் என்ற புலவர் இயற்றிய செய்யுட்கள் கணப்படுகின்றன. இவர் இலங்கையோடு தொடர்பு உடையவர் என்பது வெளிப்படை. யாழ்ப்பாணத்தினின்று இவர் மதுரைக்குச் சென்றிருக்கக் கூடுமென்று ஊகிப்பதற்கு இடமிருக்கிறது. பூதன்

(14ம் பக்கம் பார்க்க)

- ★ அரச மொழி
- ★ ஆட்சியாளர் மொழி
- ★ சாதனை மொழி
- ★ பௌத்த பிக்குகளும்

### கற்ற மொழி

அரிசி, இஞ்சி முதலிய தமிழ்ச் சொற்கள் பழைய கிரேக்க மொழியில் காணப்படுகின்றன. தமிழகத்துக்கு உரியதாக இருந்த யாழ் என்ற இசைக் கருவி கிரேக்க நாட்டில் பரவி 'ஹார்ப்' என்ற பெயர் பெறுவதாயிற்று.

சாவகத் தீவில் மாறன் என்ற பாண்டிய வம்சப் பட்டம் தரித்த மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். அவர்களுடைய நகரங்களில் ஒன்று மதுரை

தமிழகத்துக்கு அப்பால் வெகு தூரத்திலுள்ள நாடுகளில் இவ்வாறு புகுந்த தமிழ்ச் சொற்கள் சிலவேயாகும். ஆனல் தமிழகத்துக்கு அருகிலுள்ள இலங்கைத் தீவில் தமிழ் கடல் கடந்து பரவி நிலைபெற்ற மொழியாக இடம்பெற்றுள்ளது

### இலங்கையில் தமிழ் வளர்ந்த வரலாறு

இலங்கையில் தமிழ் வளர்ந்த வரலாற்றைப் பற்றித் தமிழ் மக்களிற் பலரும் இக்காலத்தில் ஓரளவு அறிந்திருத்தல் அவசியமாகும். இலங்கையில் யாழ்ப்பாணம், மன்னர், வன்னி என்ற வடக்குப் பகுதிகளிலும் திருகோணமலை, மட்டக்களப்பு என்ற கிழக்குப் பகுதிகளிலும் மிகப் பழைய காலந்தொட்டுத் தமிழ் மக்கள் வாழ்ந்துவருகின்றனர். இப்பகுதிகளிலுள்ள முஸ்லிம் மக்களும் தமிழையே தாய் மொழியாகக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மத்திய பகுதியாகிய மலை நாட்டில் தென்னிந்தியாவிலிருந்து தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக ஆங்கி

### ஹீ..ஹீ..

டாக்டர்: ஆகார விஷயத்திலே நீங்க ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். உங்கள் வீட்டில் 3வது குழந்தை எதைச் சாப்பிடுகிறதோ அதைத்தான் நீங்களும் சாப்பிட வேண்டும்.

நோயாளி: ஐயையோ சோக்கட்டி, மண்ணுங்கட்டி இதெல்லாம் நான் சாப்பிட வேணுமா டாக்டர்?

- கா. யோ. கிரிதரன்

நீண்ட இடைவெளிக்குப்பின்னர் - எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் இங்கு குறிப்பிட்டிருப்பதுபோல் - ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகளின்பின் - வாரமலர் மீண்டும் வெளிவருவதில் வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் எத்தனை குதூகலம். வாசகர்களுக்காகவே வாரமலர் என்பதால், வாசகர் அபிப்பிராயத்திற்கு நாம் செவிசாய்க்கக் கடமைப்பட்டுள்ளோம். அதனுல் அன்பான எமது வாசகர்களிடமிருந்து நிறைவும் குறைவும்பற்றிய கருத்துக்களை அவ்வப்போது எதிர்பார்க்கின்ருேம். [ஆ—ர்]

## வாசகர் பேனவிலிருந்து

டொமினிக்ஜீவா

'ஈழநாடு' பத்திரிகையில் திரு. மாணிக்க இடைக்காடர் கட்டுரைகளைத் தொடர்ந்து படித்துவருபவர்களுள் நானும் ஒருவன். தமிழகத்திலிருந்து வெளிவரும் பல சஞ்சிகைகளில் அனுபவக் கட்டுரைகள் பலவற்றைப் படித்த நான், இடைக்காடரின் கட்டுரைகளையும் ஒப்பு நோக்கிப் படிப்பது வழக்கம். தமிழக சஞ்சிகைக் கட்டுரைகளில் பலவும் உபதேசங்களாகவே இருப்பதுண்டு. ஆனல் 'ஈழநாடு' கட்டுரைகளில் அனுபவ வெளிப்பாடுகள் மிளிர்வதை அவதானிக்க முடிகின்றது. எளிமையையும் அதே சமயம் ஆழத்தையும் இடைக்காடரின் கட்டுரைகளில் நான் பார்க்கின்றேன்.

இன்றைய ஈழத்துத் தமிழுக்கு இப்படியான தன்னம்பிக்கை மிளிரும் கட்டுரைகள்தான் இன்றைய தேவை. தொடர்ந்து அந்த அனுபவ முதிர்ச்சியின் வெளிப்பாடுகள் தமிழ் மக்களுக்குக் கிடைப்பதுடன் அவை நாளடைவில் தொகுக்கப்பட்டு நூலுருப் பெறவேண்டும் என்பது எனது விருப்பம்.

கலைவாதி கலீல்

'ஈழநாடு' வாரமலர் பார்வையிட்டேன். 'ஈழநா'ட்டின் நெடுநாளைய வாசகன், எழுத்தாளன் என்ற வகையில் என் உள்ளம் பூரித்து உணர்ச்சிவசப்படுகிறது.

"வாரமலர் வாடாமலராய்" மணம் கமழ என் வாழ்த்துக்கள்."

மலர் சற்று புதுமையாக உள்ளது, பொலிவாகவும் உள்ளது. இன்னும் புதுமையைப் புகுத்தலாம்.

மண்டைதீவு
**கலைச்செல்வி**

**தேனருவிபோல.....**

வற்றிப்போன நிலப்பரப்பில் வந்து சேர்ந்த தேன் அருவிபோல, வாடி நின்ற எமக்கெல்லாம் 'வாரமலர்' தந்த மகிழ்ச்சியை என் சொல்வது! என்னை வளர்த்து ஆளாக்கிய இனிய பொன் ஏடே! நீ என்றும் தடையின்றித் தாமரைபோல் வாரம் தவருது மலர்வாயாக!

(13-ம் பக்கம் பார்க்க)

பவர்ஸ் உரம்
அதிக விளைச்சலுக்கும்
கூடிய இலாபத்துக்கும்
A B C
MASTERS ABC 4/82 (C)
ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 11, கொழும்பு - 1, தொலைபேசி: 20551-6

மக்கள் சொல்வதைக் கேளுங்கள்...



"பெயார் பிரான்ட் எனக்கு மிகச் சிறந்தது.

விரைவில் தாயாகவிருக்கும் நான் சத்துமிக்க பசுப்பாலை நிறைய அருந்த வேண்டும்...

பெயார் பிரான்ட் எனக்கு முற்றிலும் உகந்தது."




400 கிராம் ரூ. 20.80

250 கிராம் ரூ. 14.50

பெயார் பிரான்ட்

ஆடைநீக்காத பால் மா

Grant K & E 5139


## இன்றைய சீனு

செஞ்சீனுவின் கலாசாரப் புரட்சிக்கு வித்திட்டவர் மாசேதுங். ஆடையில்கூட முதலாளித்துவ உணர்ச்சி கூடாதென்பது மாவோசித்தாந்தம், புரட்சியின் சின்னமாக, பல ஆண்டுகள் சீனமக்கள், முரட்டுத் துணிகளாலானகனத்த கொலறையுடைய ஆடைகளையே அணிந்து வந்தனர். இன்று சீனுவின் நிலைமை மாறிவிட்டது. மக்கள் மாவோவின் கொள்கைகளை உதாசீனம் செய்து, அலங்காரமான ஆடைகளையும், டாம்பீக வாழ்க்கையையும்கைகொண்டு வருகின்றனர். இப்போது சீனுவில்ஆடையில் மட்டுமல்ல, முதலாளித்துவ அமைப்பிலும் நம்பிக்கை கொண்டுள்ளனர். வீட்டு வேலைகளுக்கு வேலைக்காரர்களையும் வைத்திருக்கின்றனர். மாசேதுங் காலத்து கெடுபிடிகளும், சித்தாந்தங்களும் மறையத் தொடங்கி, மாசேதுங்கை மறக்கும்நிலை உருவாகியுள்ளது. அண்மையில் இவரது ஏழாவது சிராத்த தினத்தன்று சமாதிக்கு யாரும் மலர்வளையம் வைக்கவில்லை.

## சசிகலாவும் விசாலாட்சியும்

இலங்கை வானொலிக் கலைஞர்களில் பி. எச். அப்துல் ஹமீட்டும், விசாலாச்சிஹமீட்டும் பிரபல்யமானவர்கள். தங்கள் குரல்வளத்தினுல் பல்லாயிரம் மக்களைக் கவர்ந்துள்ளனர். இருவரும் காதல் திருமணம் செய்துகொண்டவர்கள் தான். பி. எச். அப்துல் ஹமீட். சசிகலா என்ற இந்துப் பெண்ணை காதலித்து மணந்து கொண்டார். விசாலாட்சி, தொழிலதிபரான முஸ்லிம் இளைஞர் ஹமீட்டைக் காதலித்து மணந்து கொண்டார்.

## கைலாசமலைக்கு அண்மையில் இராவணன் ஆறு

முத்தியின்பம் பெறுவதற்காகக் கைலாசம் செல்வதாகப் புராணம் கூறுகிறது. சீன- இந்திய படையெடுப்பினுல் 'கைலாசம்' இன்று சீனுவின் வசமிருக்கிறது. இருந்தாலும், இருநாட்டு வெளியுறவு அமைச்சுக்களின் அனுசரணையுடன்: சுமார் 200 பேர்வரை இந்தியாவிலிருந்து கைலாச யாத்திரை சென்று வந்துள்ளனர்.

கைலாசம் செல்லும் வழியில் திபெத்மலைத் தொடரில், ராவணஸ் ரோவர் என்னும் ஆறு இருக்கிறது. இது சிவப்பு நிறமான நீராக ஓடுகிறதாம். இவ்வாறு சிவப்பாக இருப்பதற்கான காரணம் 'கைலாசத்தைப்பெயர்த்து இராவணன் இலங்கைக்கு எடுத்துவந்த போது ஏற்பட்ட இரத்தவியர்வை' என்று கூறப்படுகிறது.

# நவரசம்



சச்சி

## தனியார் செலவில் ஒலிம்பிக் போட்டி

அடுத்தாண்டு அமெரிக்காவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகள் முதல் முறையாக தனியார் செலவில் நடைபெறவுள்ளன. கடந்தகாலங்களில் போட்டிகளில் கலந்துகொள்ளும் நாடுகளே செலவுகளை ஏற்றுவந்தன. இம்முறை இப்போட்டிக்கான செலவு 480 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவில், 280 கோடியை ரெலிவிஷன் அஞ்சல் நிறுவனங்கள் கொடுத்துள்ளன. 210 கோடியை, 'ஒலிம்பிக்' சின்னத்தைப் போட்டுவிளம்பரம் செய்வதற்கான அனுமதியைப் பெற்ற வர்த்தக நிறுவனங்கள் வழங்கியுள்ளன.

## உலகசாதனை நூல் விற்பனையாம் உலகசாதனை!

உலகசாதனைகளைத் தொகுத்து வெளியிடும் ''கிர்ணர்'' புத்தகம் விற்பனையிலும் உலக சாதனையை எட்டியுள்ளது. அண்மையில் இதன் முப்பதாவது பதிப்பு வெளியிடப்பட்டது. 23 மொழிகளில் வெளியிடப்படும் இந்நூல்ஐந்து கோடி வரை விற்பனையாகியுள்ளது. முத்தம் கொடுப்பது முதல் 15000 சாதனைகள் இதில் இடம் பெற்றுள்ளன. நமது வீரர் ஆழிக்குமரன் ஆனந்தனின் பலசாதனைகள் இன்நூலில் பதிந்துள்ளன.

## கார்ட்டர் புதல்வியின் ஆசை

அமெரிக்கமுன்னுள் ஜனுதிபதி ஜிம்மிகாட்டரின் மகள் ஜென்சிக்கு. ஜனுதிபதியாக வேண்டுமென்ற கொள்ளை ஆசையாம். தனது 16 வது பிறந்தநாளை வெள்ளைமாளிகையில் கொண்டாடிய ஜென்சி, தனது சினேகிதிகளிடம் இதனைத் தெரிவித்தாளாம். எப்படியிருக்கின்றது ஆசை!

## பத்திரிகைச் சுதந்திரம்

''கத்திமுனையில் நடக்கும் சாமத்தியம். அரசுக்குகோபம் உண்டாகாமல் இருப்பது. முதலாளியை மகிழ்ச்சியோடு இருக்கச்செய்வது. பத்திரிகையின் விற்பனையும், வருமானமும், அதிகரித்துக் கொண்டு போகச் செய்வது'' இவ்வாறு பிரபல பத்திரிகையாளர் குஷ்வந்தசிங் ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளார்.

## வள்ளுவர் நீதி

'வள்ளுவர் நீதி' என்ற கைநூல் ஒன்றினைத் தொழிலதிபர் திரு. க. கனகராசா அவர்களின் ஐம்பத்தாறும் பிறந்த நாள் வெளியீடாக திரு. க. சி. குலரத்தினம் வெளியிட்டுள்ளார்.

திரு. க. கனகராசா அவர்களின் பிறந்தநாள் விழாக்களின்போது முன்னரும் பல நூல்கள் வெளியிடப்பெற்றுள்ளன.

முன்னர் அமர நீதி, பர்த்ருஹரி நீதி, மனுதர்ம நீதி, சுக்கிரநீதி முதலிய நீதி நூல்கள் வெளியிடப் பெற்றதுபோலவே ''வள்ளுவர் நீதி'' என்ற இந்நூலும் வெளியிடப் பெற்றுள்ளது. இது ஒரு இலவச வெளியீடு என்பது குறிப்பிடத்தக்கது.

— இளங்கோ


நம்பிக்கையின் ஒளிவிளக்கு 'SHABRA'

உங்கள் குழந்தையின் எதிர்கால நலனிற்காக இன்றே ''ஷப்ரு''வில் ஒரு சேமிப்புக் கணக்கை ஆரம்பியுங்கள். அவர்கள் வளர்ந்ததும் உயர் கல்வி பெற, பல்கலைக்கழக, தொழில் நுட்பக் கல்வி பெற்று பட்டதாரியாகத் திகழ அல்லது வெளிநாட்டில் வேலை வாய்புப்பெற இன்றிலிருந்தே சிறுதொகையாக எம்மிடம் சேமித்து 3 வருடகாலத்தில் ஒரு பெரும் தொகையை நீங்கள் அடையலாம்.

நிலையான வைப்பிற்கு
யாழ். நகரில்
அதிஉயர்
வட்டி வழங்கும் ஒரே
நிறுவனம்
'SHABRA'

தேவை
எதுவாஞலும்
நாடுங்கள்
SHABRA

உடன் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

61, நியூ புலர்ஸ் வீதி, கொழும்பு-4. 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல; 589310 தொலைபேசி இல: 22073

UNICO FINANCE LIMITED

(இலங்கை மத்தியவங்கியின் அனுமதிபெற்ற ஸ்தாபனம்)

நிதி உதவி:-

ரி.வி., குளிர்சாதனப் பெட்டி, தட்டச்சு, மின்விசிறி, துவிச்சக்கரவண்டி, மோட்டார்வண்டி, மோட்டார் படகுகள், இயந்திரப் படகுகள் மற்றும் மின்சார சமையல் உபகரணங்கள் முதலியவற்றை சுலபமான தவணை முறையில் பெற்றுக்கொள்ளலாம்.

எமது சேமிப்புத் திட்டம்

| மாதாந்தம் | 36 மாத கால முடிவில் |
|---|---|
| 100/- | 4,727/60 |
| 200/- | 9,455/19 |
| 300/- | 14,182/79 |
| 400/- | 18,910/38 |
| 500/- | 23,637/98 |

'நெஞ்சு பொறுக்குதில்லையே-
இந்த
நிலைகெட்ட மனிதரை
நினைந்துவிட்டால்,
கொஞ்சமோ பிரிவினைகள்?-
ஒரு
கோடி என்றால் அது
பெரிதாமோ?,
—பாரதியார்




அவர்கள் சூனிய வெளியையே நித்தமும் தரிசனம் செய்பவர்கள். நாளைய பொழுதை ஒரு போதுமே நினைத்துப் பார்க்காதவர்கள். இருட்டு உலகிலே வாழ்ந்து கொண்டிருந்தாலும் அவர்கள் மனம்-உறுதி கொண்டது-தெளிவானது - சலனமற்றது - ஒரு கட்டுக் கோப்பிற்குள் அடங்கியது.

பகலிலே அலைந்து திரிவார்கள். இரவிலே உறக்கவலையில் சிக்குண்டு தத்தளித்து, கடைகளுக்கு முன்பாகக் கூடுவார்கள். சிமெந்துத்தரை - இரவில் அவர்களின் கட்டில் அதற்காக அவர்கள் முதலாளிமாருக்கு ஒன்றுமே செலுத்துவதில்லை. மாறுக நிறைய வாங்கிக் கட்டுவார்கள்.

இன்று - வெள்ளிக்கிழமை.

வழக்கம்போல தனது இருட் போர்வையை இழுத்துப் போர்த்தி, பூமி தனது நிர்வாணத்தை மூடத் தொடங்கும் நேரம். கடைகளுக்கு முன்பாகவுள்ள பாடசாலையில் பாட்டுப்புலவன் பாரதிக்கு விழா. மறைந்து - மறந்து - போயிருக்கும் அவரது கருத்துக்கள், சிந்தனைகள், பாடல்களை மீள நினைவிற்குக் கொண்டு வரும் இன்ப நன்னாள்.

''விடுதலைக்காகப்பாடுபட்ட பாரதியார் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரண்டாம் ஆண்டு சின்னசாமி ஐயருக்கும் இலட்சுமி அம்மாளுக்கும் மகனாக '' - அரங்கத்தைச்சொற்கள் ஆட்சி புரிகின்றன.

இங்கே - ஒற்றைக் கையின் அரைப்பகுதியை இழந்த கைராசி, கால் ஒன்றினைக் காணாத சரவணன், விழிகளிலே நிரந்தர இருளைத் தேக்கி வைத்திருக்கும் கண்ணப்பன்- இவர்கள் மூவரும் ஒன்று சேர்கின்றனர். இவர்கள் தான் 'சிமெந்து அரங்கத்தின்' கதாநாயகர்கள். மூவரும் இன்று நடந்த நிகழ்வுகளை பங்கீடு செய்யப்போகிறார்கள்.

''...எனவேமுப்பத்தொன்பது வருடங்கள் இவ்வுலகிலே தங்கியிருந்து இறந்தும் இறவாத மனிதராக எம்முடன் தங்கி இருக்கும் கவிமணிக்கு விழா எடுப்பது சாலவும் பொருத்தமானதே!

கைதட்டல்களும் சீழ்க்கை ஒலிகளும் வானில் முழக்கமிட்டன.

''வண்டில் வந்துவிட்டது வண்டில் வந்துவிட்டது ... எங்கே கைராசி?''

'அதோ! பள்ளத்திற்குள் இறங்கி பழம் பாண் எடுக்கிறான்.'

,,எடேய்... ஒற்றைக்... இங்கே வாடா! மூட்டையைத் தூக்கி எறியன்ரா!'

குப்பைக்குள் கிளறி எடுத்த புதைபொருளை, ஒற்றைக் கைக்குள் ஒளித்து வைத்துக் கொண்டு கால்களை விசுக்கி விசுக்கிப் பாய்ந்து வருகின்றான் கைராசி. இன்னொருவன் வந்து மூடையைச் சுமக்க முன்னர் தான் அந்தவேலையைச் செய்துவிடவேண்டுமென்ற துடிப்பு அவனுக்கு. கைராசியின் ஓட்டத்தைப் பார்த்துவிட்ட முதலாளியின் எட்டு வயது மகன் நிலத்தை விட்டுஎழுந்து துள்ளித் துள்ளிக் குதித்துச் சிரித்தான்.

''பாணைத் திண்டிட்டு...''

''இல்லை முதலிலை தூக்கு..''

வாய் எல்லாம் எச்சில் ஒழுக பாண்துண்டைக் கதவடியில் வைத்துவிட்டுச் சுமக்கத் தொடங்கிவிட்டான்.

இப்பொழுது அவனின் 'ஊனம்' உடைந்து இரத்தம் உடைப்பெடுத்து ஓடியது.

''தம்பி, தூசு பறக்கும் எட்ட நில்'' - தன் மகனைப் பார்த்து முதலாளி கூறியவாறே தொடர்ந்து மனதிற்குள் மூடைகளை எண்ணத் தொடங்கினார்.

'எடேய் கைராசி, உனக்கு எண்ணத் தெரியுந்தானே...

''எத்தனை போட்டிட்டாய். எங்கை சொல்லு பார்ப்பம்''

''எட்டு ஐயா...''

''ஆ...பிறகென்ன, உனக்கு இது ஒரு தூசுதானே! கெதியிலை மிச்சத்தையும் போடு பாப்பம்.''

கைராசி களைத்துவிட்டான். முதுகு வியர்வைவெள்ளத்தில் திளைத்து மூடையை நனைத்ததுமல்லாமல் உள்ளுக்கிருந்ததைக் கரைக்கவும் தொடங்கிவிட்டது. கையில் குருதியூற்று சக்திபெற்று அருவியாகியது.

ஒன்பதாவது மூடையைக் கைராசி கொண்டு போகும்போது அந்தப்பாழும்குட்டை பிடித்த நாய் குறுக்கே வர - மூடைவிழுந்தது. நிலத்தின் மேல் அல்ல - சிறுவனின்மேல்.

''அங்கே பாருங்கோ முதலாளி, மூடையைக் குழந்தைக்கு மேலை எறிஞ்சு போட்டுது''

கடைக்குள் பொருட்கள் வாங்கவந்த அனைவரும் ஒருவரோடொருவர் மோதியபடியே வந்து - வந்தவிசையிலே செப்பமாகக் கைராசிக்குச் 'சாத்தினார்கள்.' ஒருகை உடலைப் பலகைகள் பதம் பார்த்தன. மல்லாந்து விழுந்த கைராசி, முதலாளியின் காலைக் கட்டிப்பிடித்துக் கும்பிடக் கும்பிட, குதறி இழுத்து அமுக்கிக்கொண்டே போனார் முதலாளி,

''ஐயா: நான் சத்தியமா வேணுமெண்டு செய்யேல்லை ஐயா!''

குட்டைநாய் இந்தக் காட்சியைப் பார்க்கச் சகிக்கமாட்டாமலோ என்னவோ அது அந்தப்பாண்துண்டையும் தூக்கிக் கொண்டு குடலற ஓட்டம் பிடித்தது.

''உனக்கு இண்டைக்குக் கூலி இல்லை. நீ போகலாம்'' - மகனைத்தூக்கித் தோளிலே வைத்துக் கொஞ்சியபடியே, துண்டு வெட்டிகைராசியை வெளியே அனுப்பினார் முதலாளி.

'நித்தமும் நாங்கள் எவ்வளவு பொதிகள் சுமக்கின்றோம். அதற்குள் இருப்பவற்றைப் பற்றி அறியவோ அல்லது அவற்றைப் பெற்றுக் கொள்ளத்தான் எங்காளாலை முடிகிறதா? அதற்கு எங்களுக்கு உரிமைதான் இருக்கிறதா?

அந்த ஒரு மூடையும் - அதுவும்கை தவறி விழுந்ததற்காக இப்படியெல்லாம் என்னை உதைத்தது சரியா? கண்ணு ...நீ சொல்லு.''

காலை அவனுக்கு விழுந்த அடிகள் இன்னமும் மறையாத வடுக்களாகி நின்று, ஈர்ப்பு வலிச் சுண்டல் சுண்டி வலிப்பதுபோல கைராசிக்கு இருந்தது. கண்ணப்பன் மெல்ல மெல்ல 'அட்டை ஊருதல்' ஊர்ந்து கைராசிக்கு அருகில் அமர்ந்தான். கைராசியின் உடல் மேலே கைகளை ஊன்றித் தடவி, முதுகுத் தோட்டத் தழும்பு வரம்புகளின்மேல் அங்கும் இங்கும் அசைத்து ஊனக்கை இருக்குமிடத்தைப் பிடித்துக்கொண்டான்.

''பஞ்சமோ பஞ்சம்
என்றே-நிதம்
பரிதவித்தே உயிர்
துடிதுடித்துத்
துஞ்சி மடிகின்றாரே-இவர்
துயர்களைத் தீர்க்கவோர்
வழியில்லையே
எண்ணிலா நோயுடையார்-
இவர்
எழுந்து நடப்பதற்கும்
வலிமையிலார்
கண்ணிலாக் குழந்தைகள்
போல்-பிறர்
காட்டிய வழியிற் சென்று
மாட்டிக் கொள்வார்''

## எமது சிறுகதை

—அதற்குள் நெஞ்சை அள்ளும் பாக்கள் இரண்டு நிறைவுற்று மூன்றாவது ஆரம்பிப்பதற்குத் தாள ஒத்திகை ஆரம்பித்தது.

புண்களிலிருந்து வடியும் குருதியை அவன் கைகள் தடவிக் கொடுத்தன.

''உனக்கு முதலாளி அடித்ததைச் சரவணன் எனக்குச் சொன்னபோது நான் எவ்வளவு துடிதுடித்துப்...''- விழிச் சிரட்டையிலிருந்து இறங்கிய நீர்ப்படை பள்ளத்திற்குள் நிற்காது பாய்ந்து ஓடிற்று. உண்மைப் பிதற்றல்களைக் கேட்கும் போதெல்லாம் எத்தனை தடவை அப்படி அது இறங்கி இருக்கின்றன. இரக்கமற்றவர்களின் மனக்கல்லைக் கரைக்க அதற்குச் சக்தியில்லைத்தான். வருவதும் மீளவும் காய்ந்து மறைவதையே தன் தொழிலாகக் கொண்ட கண்ணீரைத் தடுத்து நிறுத்த அவர்களால் முடியாதுதானே!

இரண்டு பற்றுக் கோடுகள் ஒன்றுடன் ஒன்று பின்னி ஆரத் தழுவியபடி அழுதன. அந்தக் காட்சியைப் பார்க்க உறங்கிக் கொண்டிருக்கும் மூன்றாவது ஜீவனைத்தவிர, வேறொருவரும் அங்கிருக்கவில்லை. எல்லோருக்கும் விழா-பாரதி விழா. விழா இல்லாவிட்டால் பார்த்துத் தான்விடுவார்களா? வெள்ளைத் திரையில் இப்படி வரும் காட்சிகளைப் பார்த்து அழவும் அனுதாபபடவுமல்லவா அவர்கள் பிறந்துள்ளார்கள்.

மூன்றாவது ஜீவன்-அவர்கள் இருக்கும் இடத்தில் இருந்து இரண்டாவது தூண் மறைவில் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் சரவணன். வரும்போது கொண்டுவந்த ஓட்டை விழுந்த காக்கிக் காற்சட்டையையும் மேல்ச் சட்டையையும் தனது எதிர்காலச் சொத்தாகக் கொண்டு, உறங்குகின்றான். 'கைகளைக் கோலி தலையணையாக்கிக்கொண்டு அப்படி நிம்மதியாக அவனைப்போல உறங்குவதற்கு இந்த உலகில் யார் இருக்கின்றனர்.

சரவணன் இந்த இடத்திற்கு வந்து ஆறு வருடங்கள் ஆகின்றன. அன்றிருந்த சூழல் வேறு; இன்றிருப்பது வேறு. ஆனால் எங்கும் ஒரே மனிதர்கள்தான். வீதியொன்றில் - உடம்பெல்லாம் பஞ்சுக் கொப்பளங்களுடன் முனகிக்கொண்டிருக்கையில்தான் சரவணனைக் கைராசி கண்டுபிடித்தான்.

வழக்கம்போல பால் கொடுக்கச் செல்கையில், கல் தடுக்கி ஊன்றுகோல் சறுக்கிவிடவே பால் போத்தல்களுடன் சரவணன் விழுந்துவிட்டான். பயந்து பயந்து வீடு சென்ற அவனுக்குப் போத்தல்களை உடைத்த குற்றத்திற்காக வீட்டுக்காரி ஊழித் தாண்டவம் ஆடி ஆவி பறக்கும் கொதி நீரைப் பன்னீர் தெளிப்பதுபோல உடம்பெல்லாம் தெளித்திருந்தாள். இதுதான் அவனை ஒரு கண்டத்திலிருந்து இன்னொரு கண்டத்திற்கு எடுத்துச் சென்ற ஏவுகணைப்படலம்.

'ஏய் ..ஏய்....சர்ர்...சர்ர்...'- இரண்டுவிதமான ஒலி பேதங்கள் பா முழக்கத்தையும் மீறிக் கொண்டு கைராசிக்கும் கண்ணப்பனுக்கும் கேட்டது, திரும்பி இருவரும் பார்த்தனர்.

மேல் மாடியிலிருந்து ஒரு கூடை குப்பையானது மூன்றாவது பாவச் சின்னத்தின் மேல் விழுவது அந்த இருட்டிலும் கைராசிக்குத் தெரிந்தது. கண்ணப்பனுக்கு எப்பொழுதும் தெரியும் அமாவாசை தெரிந்தது.

குப்பை விழுவதால் ஏற்பட்ட ஒலியல்ல என்பதைப் புரிந்துகொண்ட கைராசி, தேநீர்க் கடைப் பக்கமாகச் செல்லும் ஒடுங்கிய பாதை வழியாகப் பின் வளவிற்குள் சென்றான். பரக்கப்பரக்க விழித்த சரவணன் ஊன்றுகோலை எடுத்து தோள் பட்டைக்குள் செருகியவாறே தள்ளாடித் தள்ளாடிப் பின் தொடர்ந்தான்.

''எடேய் விடுங்கடா... யாரோ வருகிற சத்தம் கேட்குது.'' அலரிப்பக்கமாக மூவர் ஓடிக்கொண்டிருப்பதைச் சரவணன் கண்டுகொண்டான். அலரிமரத்தின் கீழே.....விசர்ப் பொன்னி நினைவிழந்து கிடந்தாள். இற்றைவரையும் 'விசரி' என அங்குள்ளவர்களால் சொல்லப்படும் பொன்னி இன்று இரவு....நான்கு வெறியர்கள்...பாரதி விழா- 'ரதி' விழாவாகிவிட்டது.

கைராசிக்கு ஒரே அதிர்ச்சியாயிருந்தது. அவன் மூளையைப் போட்டு உடைத்துக் கொண்டான். 'ஓடிய அந்த நாலுபேரில் நம்ம முதலாளி...'

நினைவிழந்த விசரியாக நாதியற்றுக் கிடக்கின்றாள் பொன்னி. 'ஓ' எனக் கதறி இருவரும் அழுகின்றனர்.

''மாதர் தம்மை இழிவு செய்யும் மடைமையைக் கொளுத்துவோம்.''

'' .........

''இன்றைய கூட்டம் இந்தப் பெண் விடுதலை கீதத்துடன்

(13ம் பக்கம் பார்க்க)

HOTEL CATERING &
MANAGEMENT
(THEORY and PRACTICAL)
BASIC COOKERY IN WESTERN DISHES AND RESTAURANT SERVICE
3 மாத கட்டணம் 825/-
ஆரம்பம் 9-1-1984
திங்கள் - புதன் - வெள்ளி 9மணி முதல் 11 மணி வரை
(இருபாலரும் கற்கலாம்)
16-12-1983 அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்
பதிவுக் கட்டணம்: Rs. 25/-
தொடர்பு: R. T. சின்னத்துரை,
187, 4-ம் குறுக்குத் தெரு - யாழ்ப்பாணம்.
(O. L. R. தேவாலயத்திற்கு அண்மையில்) 9919

### தொலைக்காட்சி யுகத்தில் ஒரு பெரும் பிரச்னை

# நிகழ்ச்சிகளைப் பார்த்து சிறுவர் பாவனை செய்வதால் ஏற்படும் பயங்கர விளைவுகள்!

இது தொலைக்காட்சி யுகம். மிகப் பிந்திய தொலைத் தொடர்புச் சாதனமாகிய இத் தொலைக்காட்சி மிகக் குறுகிய காலத்தில் பிரபலமாகிவிட்டது. செய்திகளும் காட்சிகளும் மிக வேகமான முறையில் இதன்மூலம் பரிமாற்றம் செய்யப்படுகிறது. கவர்ச்சிகரமான செயற்பாட்டின்மூலம் இன்று தொலைக்காட்சி மக்கள் மத்தியில் மற்றைய பொழுதுபோக்குச் சாதனங்களைவிட முக்கியத்துவம் பெற்றுவிட்டது.

தொலைக்காட்சிமூலம் பல அனுகூலங்கள் பெறப்பட்டபோதும், சமூகரீதியில் இதன் தீவிரமான பாதிப்பு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. இதன் தாக்கங்களைக் கண்டறியப் புகுந்த பல ஆய்வுகள் கவலை தரும் பல உண்மைகளைச் சுட்டிக்காட்டியுள்ளன. குறிப்பாக சிறுவர் மத்தியில் தொலைக்காட்சி பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

### பிஞ்சு உள்ளங்களைப் பாதித்த நிகழ்ச்சிகள்

கடந்த ஜனவரியில் மலேஷியாவில் நான்கு சிறுவர்கள் தொலைக்காட்சியில் தொடராகக் காட்டப்பட்டுவந்த 'த கிறேட்டஸ்ட் அமெரிக்கன் கீரோ' என்ற அமெரிக்கப் படத்தில் தோன்றும் 'அதி தீவிர மகா மனிதனைப்'போல் பாவனை செய்ததன்மூலம் மரணமானார்கள். அதில்வரும் கதாநாயகனைப் போல உடையணிந்து உயரமான மலையிலும் கட்டடத்திலும் இருந்து குதித்து தமது வாழ்க்கையை முடித்துக் கொண்டனர். இன்னுமொரு குழந்தை ஓடுகின்ற காரொன்றைத் தடுத்து நிறுத்த முயன்றதால் பலத்த காயத்துக்குள்ளானது. இன்னும் பன்னிரண்டு சிறுவர்கள் அந்தச் சாகச மனிதனைப் போல தீரச் செயல்களைச் செய்ய முயன்றதால் தமது கை கால்களை முறித்துக் கொண்டனர்.

## மனப் பாதிப்புகளிலிருந்து எதிர்காலச் சந்ததியினரை காப்பது யார்?

தொலைக்காட்சியைத் தொடர்ந்து பார்ப்பதால் சிறுவர்களுக்கு ஏற்பட்ட இந்தக் கவலைதரும் நிலைமைகளை 'பினுங்கின் நுகர்வோர் சங்கம்' (CAP) மக்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தது. இந்தச்சங்கம் தொலைக்காட்சி எவ்வாறு சிறுவர்களைப் பாதிக்கின்றது என்பதுபற்றி ஆய்வொன்றை மேற்கொண்டது.

இமென் என்ற மூன்று வயதுச் சிறுவன் மேல்மாடியிலுள்ள படுக்கை அறை யன்னலூடாகப் பாய முயன்றபோது அவனது தாயாரால் தடுக்கப்பட்டான்! 'த கிறேட்டஸ்ட் அமெரிக்கன் கீரோ'வைத் தவறுது பார்த்துவரும் அக்குழந்தையின் மனதில் படிந்துவிட்ட, பறப்பதும் மனிதனது ஒரு இயற்கை அபிலாஷை இவ்வித எண்ணமே அவ்வாறுன செயலைச் செய்யத் தூண்டியது என்பதை 'கப்' தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியது.

### படிப்பைவிட ரி. வி.யில் கவனம்

சராசரியாக மலேசியக் குழந்தைகள் ஒவ்வொன்றும் வார நாட்களில் சராசரி 2 தொடக்கம் 3 மணிவரையிலும் வார இறுதி நாட்களில் சராசரி 3 தொடக்கம் 4மணிவரையிலும் தொலைக்காட்சி பார்ப்பதற்காகச் செலவிடுகின்றனர். இதன்படி இக்குழந்தைகள் வருடத்தில் சராசரி 1200 மணித்தியாலத்தை தொலைக்காட்சி பார்ப்பதில் செலவிடுகின்றனர். ஆனல் அவர்கள் படிப்புக்காகச் செலவிடுவது வருடத்தில் 1040 மணித்தியாலங்கள் மட்டுமே.

'கப்' தனது ஆய்வறிக்கையில் ஐக்கிய அமெரிக்காவில் தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பு நிறுவனமொன்றிற்கு எதிராக மூன்று வயதுக் குழந்தையொன்றின் குடும்பம் வழக்குத் தொடர்ந்ததொரு சம்பவத்தையும் சுட்டிக்காட்டியுள்ளது. அக்குழந்தை தான் பார்த்துக்கொண்டிருந்த 'கார்ட்டூன்' படத்தில் தோன்றும் பாத்திரத்தைப் போல கதவுக் கண்ணுடியில் முஸ்டியால் குத்தியது. இதனல் ஏற்பட்ட காயத்தின் மூலம் அளவிற்குமிஞ்சிய இரத்தப் பெருக்கு ஏற்பட்டதால் குழந்தை இறந்துவிட்டது.

### பணமே குறிக்கோள்!

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் நிறுவனங்கள் பெரும்பாலும் பணம் சேகரிப்பதையே குறிக்கோளா

**சசி கிருஷ்ணமூர்த்தி**

கக்கொண்டன. இவை மக்களையும் குழந்தைகளையும் சந்தோஷப்படுத்துகின்ற பாவனையில் அவர்களது மனதைப் பாதிக்கக்கூடிய விதத்தில் நிகழ்ச்சிகளைத் தயாரிக்கின்றன. அதிதீரச் செயல்கள், வன்செயல்கள் மற்றும் பயங்கரம், திகில், பாலுணர்வு இவற்றை இவர்கள் பயன்படுத்திக்கொள்கின்றனர். 'கப்' பின் கணிப்பின்படி 'ஸ்ட்றைக் போர்ஸ் (Strike force) என்ற நிகழ்ச்சியில் 37 செகண்டுக்கு ஒரு வன்செயலும், 'த கிறேட்டஸ்ட் அமெரிக்கன் கீரோவில்' ஒவ்வொரு 42 செகண்டுக்கு ஒரு வன்செயலும், 'கோஜாக்'கில் ஒவ்வொரு 64 செகண்டுக்கும், 'த ஸ்ட்ரீட் ஒவ் சன்பிரான்சிஸ்கோ' வில் ஒவ்வொரு 93 செகண்டுக்கு ஒவ்வொரு வன்செயல்களும் இடம் பெற்றுள்ளன.

தொலைக்காட்சியில் சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகள் குறைவே. பெரியவர்களுக்காகத் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதினின்றும் சிறுவர்களைத் தடுப்பது இயலாத காரியம். அவ்வாறுன நிகழ்ச்சிகளின்போது பெற்ருேர்கள் கூடுமானவரை குழந்தைகளுடன் இருந்து உண்மையெது, பொய்யெது என்பதுபற்றி அவர்களுக்கு விளங்கப்படுத்தவேண்டுமென்று குறிப்பிட்ட நுகர்வோர் சங்கம் பெற்ருேருக்கு அறிவுறுத்துகின்றது.

### தடுப்பது யார்?

பொதுவாக தொலைக்காட்சி மூலம் ஏற்படும் பாரதூரமான விளைவுகளையிட்டு பல்வேறு சமூக அக்கறையுள்ள ஸ்தாபனங்களும், தனியார்களும் எச்சரிக்கை செய்கின்றனர். இந்த ஆபத்திலிருந்து எதிர்காலச் சந்ததியினரைக் காப்பது யார்? அரசாங்கங்களே செய்யவேண்டும்! ஆனல் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் முக்கிய நிறுவனங்கள் அநேக நாட்டு அரசாங்கங்களின் 'செல்லப்பிள்ளை' களாகவே இருக்கின்றன. இந்த நிலையில் இப்பிரச்னையைத் தீர்ப்பது எவ்வாறு என்பது கேள்விக்குறியாகவே இருக்கும்.

---

### மிளகாய்கள் பல இனம்

விவசாய ஆசிரியர்: மிளகாய்களில் பல இனங்கள் உண்டு எனப் படித்துள்ளீர்கள். எங்கே சொல்லுங்கள் பார்க்கலாம்.

மாணவன்: பிஞ்சு மிளகாய், பழ மிளகாய், செத்தல் மிளகாய்.

என். கே. துரை

---


## ரஸ்ற் ரவல் சேர்விஸ்

11/A, மொம்சாக் கட்டிடம்
ஸ்ரான்லி வீதி.
யாழ். நகர்
T. P. 24111

தலைமைக்கந்தோர்
65, சதாம் வீதி,
ஹைதிராமணி ஆர்காட்,
கோட்டை.

★ உங்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்கு நம்பகரமான ஸ்தாபனம். இடத்திற்கு முந்திக் கொள்ளுங்கள்.

★ பிராக் பெல்ஜியம் விசா ஒழுங்குகள் செய்து தரப்படும்

★ பெல்ஜியம் விசா இருவழிப்பாதையுடன் 21000/-

★ பேர்லின் ஒருவழிப்பாதை 9600/-

★ அதிகப்படியான டிக்கட்டுகளுக்கு ஒரு டிக்கட் இலவசம்.

★ குறைந்த கொமிசனில் ரவலர்ஸ் செக் செய்து தரப்படும்.

★ அதிகப்படியான மத்திய கிழக்கு டிக்கட்டுகளுக்கு 13% கழிவு தரப்படும்.


---

# வாழ்வும் மூச்சும் இலக்கியத்திற்காக வாழ்ந்த இரசிகமணி

'அபார ஞாபகசக்தியும் அயரா உழைப்பும் அளவிலா இலக்கிய ஆர்வமும் கொண்ட அற்புதமான எழுத்தாளர்' என இந்திய சஞ்சிகையான தீபத்தினுல் குறிப்பிடப்பட்டிருந்தவர் இரசிகமணி.

இவர் 1916ம் ஆண்டு கார்த்திகை 5இல் கனகசபைக்கும் பொன்னம்மாவிற்கும் மகனுகப் பிறந்தார். இயற்பெயர் திருச்செவ்வேல்.

முதன்முதலாக மகாதேவ வித்தியாலயத்தில் (பொன் பரமானந்த வித்தியாசாலை) கல்வி பயின்ருர். முத்துத்தம்பி வித்தியாசாலையில் கற்றுச் சிரேஷ்ட தராதரப்பத்திர பரீட்சையில் தேறினர். பின்பு திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலே 1937, 38களில் பயின்ருர். அங்கு ஏற்பட்ட ஆர்வமே இவரைச் சிறுகதைகளை எழுதத் தூண்டியது. இவர் தமது குருவாகப் பண்டிமணி கணபதிப்பிள்ளை அவர்களையும் வழிகாட்டிகளாக சோ. சிவபாதசுந்தரம், ஈழகேசரிப் பொன்னையா என்போரையும் குறிப்பிடுவார். எழுத்துலகில் பிரவேசித்ததும் சாமிநாதையர், மறைமலையடிகள் ஆகியவர்களிடம் ஆசி பெற்ருர்.

'எங்களுடைய நாடு, எங்களுடைய எழுத்தாளர்கள், எங்களுடைய படைப்புக்களை வெளியுலகிற்கு வெளிப்படுத்த வேண்டும்' என்ற நோக்கிலேதான் இவர் எழுத்துலகில் பிரவேசித்தார்.

1939இல் தையிட்டியில் தமிழ் ஆசிரியராக இரசிகமணி கடமையேற்ருர். இவர் தமது வீட்டிலே நூல்நிலையமொன்றையும் வைத்திருந்தார். இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட அப்புத்தகங்களை வைத்து எடுக்கும் சிரமமேற்பட்டதனுல் அவற்றைப்பின்பு வட்டுக்கோட்டை வளாகத்திற்குக் கொடுத்துவிட்டார்.

1938—55 வரை இவரது கதை, கட்டுரைகள் 'ஈழகேசரி'யில் வெளிவந்தன. அத்துடன் விமர்சனமும் செய்துவந்தார். சிறந்த மேடைப் பேச்சாளருமாவார்.

'பூச்சரம்' எனும் நூலில் உள்ள பதினறு நூல்களைவிடப்

**கதிரொளியான்**

பின்பும் பல நூல்களை இவர் இயற்றியுள்ளார். ஈழத்திலுள்ள எழுத்தாளர்கள் நாற்பது பேரை 'ஈழத்துப் பேனு மன்னர்கள்' மூலம் முதன் முதல் அறிமுகம் செய்தார். 1940இல் நாகம்மா என்னும் மங்கைநல்லாளை இவர் விவாகம் செய்தார். பின்னரும் இவர் இலக்கியத்தில் ஓய்ந்தாரில்லை. இவரது இலக்கிய ஆக்கங்களுக்கு ஊக்கமளித்து வந்தார் அம்மை நாகம்மை.

'இரசிகமணி' என்னும் பட்டத்தை 1964இல் கிழக்கு மாகாண எழுத்தாளர் சங்கமும், 'இலக்கியச்செல்வர்' என்ற பட்டத்தை அம்பனைக் கல்விக்கழகமும் இவருக்கு வழங்கிக் கௌரவித்தன.

1948இல் எழுத்தாளர் மறுமலர்ச்சிச் சங்கத்தை உருவாக்கியவர்களில் இரசிகமணியும் ஒருவராவர். பின்னர் யாழ். இலக்கியவட்டத்தை உருவாக்கினுர். குரும்பசிட்டி சன்மார்க்கசபையிலும் பல்வேறு பதவிகளை வகித்து அயராது உழைத்தார்,

இவர் எழுதிய 'செம்மண்' சிறுகதை ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மொழியெர்க்கப்பட்டது. 'ஒரு பிடி சோறு' என்ற கதை 'பரிசுச் சிறுகதைகள்' புத்தகத்தில் இடம்பெற்றதுடன் ரஷ்யாவில் வெளியான 'வண்ணத்தேயிலை' நூலிலும் இடம்பெற்றது. இக்கதை பின்னர் நாடகமாகவும் வெளிவந்தது.

விதியின்கை (வீரகேசரி நாவல்), இரண்டு பூக்கள் (காவடிவசந்தன்), ஈழத்து மணி விளக்குகள், ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்பவை இவர் எழுதியவற்றில் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

1975இல் இவருக்கு நோய் ஏற்பட்டு 1977இல் இறை அடி எய்தினுர்.

'நடமாடும் நூல்நிலையமாகத்' திகழ்ந்து இறக்கும்வரையும் இலக்கியமே மூச்சாகக் கொண்டு வாழ்ந்த இரசிகமணியின் நாமம் வாழ்க.

---

கலை, இலக்கியம், கல்வி, சமயம் என்பவற்றிற்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் இரசிகமணி கனக. செந்திநாதன். கார்த்திகை மாதம் 16ம் திகதியுடன் அவர் மறைந்து ஆறு ஆண்டுகள் ஆகின்றன.

# கிடுகு வேலி

## செங்கை ஆழியான்

### தொடர் நவீனம்

மாலை முற்றாகத் தன்னை இருளுள் ஆழ்த்திக்கொண்டது. நாவற்குழியைக் கடந்து மினிவான் விரைந்து கொண்டிருந்தது. சண்முகம் எதுவும் பேசவில்லை. வெளியே வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

கண்முன்னுலேயே இருள் கவ்விவிட்டது. வேகமாகஇருள் கவ்விவிட்டதை உணர்ந்தான்.

விமானத்திலிருந்துமண்ணில் கால் பதிக்கும் வரை உள்ளத்தில் கொப்புளித்த ஆவல் இப்போது அடங்கிவிட்டது. அவ்விடத்தில் கவலையும் ஏமாற்றமும் குடியேறியிருந்தன.

ஆனையிறவுத்தடை முகாமில் அவர்களை ஒன்றரை மணிநேரம் வரை இராணுவத்தினர் தாமதப்படுத்திவிட்டனர். பெட்டிகளைக் குடைந்து குடைந்து எதைஎதையோ தேடினர். பாஸ்போர்ட்டைத் துருவிதுருவி ஆராய்ந்தனர். பின்னரே அவர்களைச் செல்ல விட்டனர்.

அந்நிய நாட்டிற்குள் கால் பதிக்கின்ற ஓர் உணர்வினை அவர்களின் செய்கைகள் உண்டாக்கின. மனதில் ஒருவிதமான வெறுப்பும் வெட்கமும் ஏற்பட்டன. ஆனையிறவிற்கு இப்பால் வீதியில் பல கவச வண்டிகள் விரைந்தன ஆயுதம் ஏந்திய வீரர்கள் அவற்றில் இருந்தனர். ஆயுதம் ஏந்திய பொலிசாருடனும் ஜீப்கள் விரைவதைக்கண்டான். அவன் இங்கிருந்த போது இவ்வளவு தொகையான நடமாட்டத்தை அவன் கண்டவனல்லன். ஐந்தாண்டுகளில் நிலைமை மாறிவிட்டது. அவன் குவைத்தில் இருந்தாலும் இங்கு நடந்த சம்பவங்களை அறியாதவனுக இருந்துவிடவில்லை.

நாட்டு நிலைமைகளை உடனுக்குடன் அவனுல் அறிய முடிந்தது. வீட்டு நிலைமைகளைத்தான் உடனுக்குடன் அறிய முடியவில்லை.

உடனுக்குடனு? ஐந்தாண்டுகளாக நடந்துமுடிந்த சம்பவங்கள் எதுவும் அவனுக்குத் தெரியாது!

ஐந்தாண்டுகளில் யாழ்ப்பாண நகரம் முற்றாக மாறிவிட்டது போல அவனுக்குப் பட்டது. அத்தியடியில் முருகானந்தத்தை இறக்கிவிட்டு அவர்கள் புறப்பட்ட போது வீட்டிற்கு வந்துசெல்லுமாறு முருகானந்தன் அவர்களை அழைத்தான்.

''இன்னெரு நாளைக்கு வாறன்... நீரும் ஒருக்கா வீட்டிற்கு வாரும்..''

முருகானந்தத்தைக் கண்டதும் அந்த வீட்டில் எழுந்த ஆரவாரத்தையும், மகிழ்ச்சியையும் எண்ணிக்கொண்டான். அவனைக் கண்டதும் அவன் பெற்றேர், சகோதரங்களும் ஆரவாரப்பட்டுத்தான் வரவேற்பார்கள். யார் வரவேற்று என்ன?

'நிர்மலா... ரமணன்...?

அவன் வாழ்வில் பங்கு கொண்டவள். அவனின் இரத்தம் இரண்டும் அவனைவரவேற்க வராதபோது... அவன் வருகையால் மகிழாதபோது...

'நிர்மலா, நீ ஏன் இப்படி மாறிஞய்? மூன்று மாதங்கள் உன்னுடன் வாழ்ந்த வாழ்வின் நினைவுச்சுவடுகள் இன்னமும் என்மனதில் அழியாமல் இருக்கின்றன. நான்தான் அவசரப்பட்டு விட்டேனே? கலியாணமாகி இவ்வளவு விரைவில் பிரிந்து சென்றதால் தவறு செய்துவிட்டேனே?

''ஐந்தாண்டுகள் பிரிந்திருக்கிறன். இன்னும் இரண்டுநாள் பிரிந்திருக்கமாட்டேனு?- அப்படியா சொன்னுய்? இவற்றிற்கு என்ன அர்த்தம்? பிரிவின் ஏக்கமா? அல்லது அலட்சியமா?

கோண்டாவிலைக் கடந்து மினிவான் சென்றபோது பூபாலன் கேட்டான்'

''அண்ணை... முதலில் உங்க வீட்டிற்குத்தானே போறது?...''

சண்முகம் சிந்தனையறுந்து தம்பியைப் பார்த்தான். எங்கு போவது?

முதலில் யாரைப்பார்ப்பது? நிர்மலாவை, ரமணனை?

அவன் இதயத்தில் பிள்ளையின் வாஞ்சை எழுந்தது. அவன் எப்படியிருப்பான்எனப் பார்க்க நெஞ்சம் துடித்தது. நிர்மலாவின் அலட்சியம் அந்த ஆவலையடக்கி இதயத்தைப் பாரமாக்கியது.

அவள் விமான நிலையத்திற்கு வந்திருக்கலாம். ஐந்தாண்டுகளாகப் பிரிந்திருக்கின்ற கணவனைச் சந்திக்கும் ஆவல் அவளுக்கு இருக்கவில்லையே? பிறந்த நாளிலிருந்து தன் குழந்தையைப் பார்க்காத தந்தைக்கு மகனை உடன் காட்டும் விருப்பம் இருக்கவில்லையே?

அவன் வராமலே இருந்திருக்கலாம். குவைத்தில் தனிமையைத்தவிர வேறுகவலை அவனுக்கு இருக்கவில்லை'' இங்கு வருமுன்னரே நெஞ்சம் நிறையச் சுமையாக அழுத்தும் ஏமாற்றங்கள்.

''அம்மாவைமுதலில்பார்க்க வேண்டும். வீட்டிற்கு முதலில் போவம்'' என்முன் சண்முகம்.

அவர்களின் வீட்டு ஒழுங்கைக்குள் வான் நுழைந்தது. இது அவன்வீட்டு ஒழுங்கை தானு? கல்லும் முள்ளும் மணலுமாகக் கிடந்த ஒழுங்கை தார் வீதியாகக் கிடந்தது. ஒழுங்கையின் இருபக்கங்களும் கறையான் அரித்துக்கொட்டிய வேலிகள்... கிடுகுகளும் பனை ஓலைகளுமாகக் காட்சிதரும். அவற்றினைக் காணவில்லை. மதில்கள் எழுந்திருந்தன. மதில்களுக்கு மேலால் கல்வீடுகள் தெரிந்தன. இருளில் ஆழ்ந்து கிடக்கும் வீடுகளில் இன்று மின்னெளி சிந்தியதைக்கண்டான்.

பல வீடுகளுக்குமேல் பனையுயரத்தில் ரி. வி. அன்ரனுக்கள்.

ஐந்தாண்டுகளில் யாழ்ப்பாணத்தில் பலமாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன, கிடுகு வேலிகளுக்குள் முடங்கிக் கிடந்தபண்பாட்டுப் பெருமைகள், மாறிவிட்டனவோ?

''இது எங்கடை ஒழுங்கை தானே?...'' என்று ஒருகண வியப்புடன் சண்முகம் கேட்டான்.

''ஓம் அண்ணை...''

அவன் விடும் மாறித் தான் இருந்தது. பட்டகதிகால்களுடன் கறையான் அரித்தும் அரிக்காமலும் சிதிலமாகக் கிடைக்கும் கிடுகுவேலியிருந்த விடத்தில், வண்ண வேலைகள் செய்யப்பட்ட மதில் சுவர் பாம்பாக வளைந்துகிடந்தது. செத்தையாய்க் காணப்பட்ட படலையிருந்தவிடத்தில், இரண்டு பெரிய இரும்புக் கேற்றுக்கள் புதிதாகக் நின்றன.

பழைய வீடு அப்படியே இருக்க, அதன் அருகில் கம்பீரமாக எதிர்வீட்டிற்கு இணையாகப் புதிய கல்வீடு உயர்ந்திருந்தது, மின்ஒளியில் பிரகாசமாக இருந்தது. கூரையின் முகட்டில் அன்ரனு ஏரியல்.

மினிவான் வந்த சத்தம் கேட்டு, கிளி ஓடிவந்து கேற்றைத்திறந்தாள். வான் அப்படியே உள்ளே நுழைந்து போர்டிக்கோவில் ஏறிநின்றது. வாசலில் எல்லாரும் குழுமி நின்றிருந்தார்கள்.

சண்முகம் சற்று நேரம் பாச மழையில் நனைந்தான். அம்மா அவனைச் சிறு குழந்தைபோலக் கட்டிப்பிடித்து கன்னத்தில் முத்தமிட்டாள். எப்போதும் விலகியே இருக்கும் ஐயா கூட அவன் அருகில் வந்து முதுகில் தடவி, ''எப்படியடா தம்பி'' என்முர். கிளியும் செல்வமும் அவன் கைகளைப் பற்றிக் கொண்டார்கள். மூத்த தங்கை உமாவும் வந்திருந்தாள்.

சுயநலன்கள் என அவன் முடிவு கட்டியிருந்தமைக்காக வருந்தினுன்.

'அண்ணனிடம்தான் தமக்குத் தேவையான வற்றைக் கேட்பார்கள். வேறு யாரிடம் கேட்க முடியும்?'

பூபாலன் மினிவான் டிரைவரை இரவு தங்கிச் செல்லுமாறு அழைத்தான்.

இல்லை மாத்தயா......நான் விகாரையில் தங்கிவிட்டு, நாளைக்கு அந்தியில் கொழும்புக்கு ஆக்கள் எடுத்துக் கொண்டு போகப்போறன்; வாறன்.' என்று அவர்கள் கொடுத்த பணத்தையும் பெற்றுக்கொண்டு புறப்பட்டுவிட்டான். சண்முகம் அவனிடம் இனிப்புப் பண்டங்கள் நிறைந்த ஒரு பார்சலைக் கொடுத்தான்.

'உங்க குழந்தைகளுக்கு...''

'போமஸ்துதி, மாத்தயா...'

என்று நன்றியுடன் அவன் வாங்கிக்கொண்டான். 'மிச்சம் நன்றி...'

அவர்கள் கதை கதையாகச் சொன்னுர்கள். ஐந்தாண்டுக் கதைகள். அவன் அவற்றைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தான். மனதில் வெறுமை தேங்கிக் கிடந்தது. நிர்மலா...ரமணு...?

பக்கத்து வீட்டுச்செல்லப்பர் அவன் வந்த செய்தி அறிந்து ஓடோடி வந்தார்.

'தம்பி...... எப்ப வந்தது? இனி எப்ப போறது...?'

யாழ்ப்பாணத்து மனிதர்கள் எல்லாரையும் கேட்கின்ற முதல் கேள்வியைத்தான் செல்லப்பரும் கேட்டார். அவன் ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் ஊருக்கு வந்து உடைகளைக் கூட மாற்றவில்லை. எப்ப வந்தீர்? எப்ப போறீர்?

சம்பிரதாயமான கேள்வியா? அல்லது வந்த கையோடு ஓடிப்போ என்ற வழிகாட்டலா? எதுவாயினும் அவர் கேட்ட கேள்வி அவனுக்குப் பிடிக்கவில்லை.

'இனி வெளிநாட்டிற்குப் போவதாக உத்தேசமில்லை...'

செல்லப்பர் வியப்புடன் அவனைப் பார்த்தார்.

'இங்கே இருந்து உழைக்க முடியுமே...... வெளிநாட்டில் தான் அள்ளலாம்..'

'இங்க உழைக்க முடியாவிட்டாலும் வாழலாம் அம்மான். நீங்கள் என்ன கேள்வி கேக்கிறியள்...... இப்பத்தான் வந்திருகிறன்...எப்ப போகிருய் திரும்பி என்று கேக்கிறியள்.. இரக்கமில்லாத மனிசராக இருக்கிறியள்' என்று சண்முகம் எரிந்து விழுந்தான்.

'சரி...சரி... நீ வா தம்பி... உடுப்பை மாத்திட்டுச் சாப்பிடு...' என்று அம்மா அவசரமாகக் குறுக்கிட்டாள்.

செல்லப்பரின் முகம் சோர்ந்துவிட்டது.

சண்முகம் தாயை நிமிர்ந்து பார்த்தான்.

சற்று மௌனமாக இருந்தான்.

'தம்பி, சந்திக்குப் போய் ஒரு கார் பிடித்துக்கொண்டு வா...வீட்டுக்குப் போகவேண்டும்...'

அந்தவிடத்தில் மயான நிசப்தம் ஏனே குடிகொண்டது பூபாலன் சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

கிளி கொண்டுவந்து கொடுத்த கோப்பியை வாங்கிப் பருகினுன். மூக்குப் பேணிக்குப் பதிலாக கப் அன் சோசரில் கோப்பி தந்தாள். மாற்றங்கள்.

'நிர்மலா இங்க வாறதில்லையா அம்மா..?'

அம்மா கலக்கத்துடன் மகனைப் பார்த்தாள்,

'குழந்தையைக்கூட இங்க விடுகிறதில்லை...' என்றபடி அம்மா சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

'வீடு கட்டினதிலிருந்து அண்ணிக்கு எங்களுடன் கோவம்...' என்முள் கிளி.

'இதையெல்லாம் ஏன் நீங்கள் எனக்கு எழுதவில்லை...? என்று சண்முகம் சற்றுப் பலமாகக் கேட்டான். எவரும் எதுவும் பேசவில்லை.

வாசலில் கார் ஒன்று வந்து நிற்கின்ற சத்தம். அவன் எழுந்திருந்தான்.

வெளிக் கேற்றைத் திறந்து கொண்டு வந்தது-

நிர்மலா.

அவன் உள்ளம் ஒருகணம் மகிழ்வால் துடித்தது. அவள் முன்னரிலும் பார்க்க ஒரு சுற்றுப் பருத்திருந்தாள். அது அவளுக்கு அழகாகத்தான் இருந்தது.

'நிர்மலா... வா...' என்முன் சண்முகம் பாசத்துடன்.

அவள் எல்லாரையும் அடங்காச் சினத்துடன் பார்த்தாள். கண்கள் ஆத்திரத்தால் நீரைச் சொரிந்தன.

'இனியாவது என் புருஷனை என்னுடன் வாழவிடுகிறியளா?'

நிர்மலாவின் வார்த்தைகள் கொடூரமாக இறங்கின.

(வளரும்)

# காலக் கண்ணடி

எட்டுத் திசையும் நின்று புதினம்
எடுத்து வரு குது! — உண்மை
எடுத்து வருகுது!
'கட்டுப்பாடு' கொண்டு நல்ல
கடமை புரியுது — தினமும்
கடமை புரியுது!

நீதி இதுவே என்ற உண்மை
நிலையைக் கூறுது! — உலகின்
நிலையைக் கூறுது!
சாதி சமயச் சண்டையெல்லாம்
தார்த்து எறியுது — தினமும்
தகர்த்து எறியுது

அறிஞர் காணும் கனவையெல்லாம்
அள்ளிக் கொணருது — தினமும்
அள்ளிக் கொணருது!
வறுமை, சிறுமை, வஞ்சம், நஞ்சம்
வாட்டி வருகுது! — என்றும்
வாட்டி வருகுது!

கலையின் உயர் தைக் காட்டிக்காட்டிக்
கருத்தைக் கவருது! — காண்போர்
கருத்தைக் கவருது!
தலைமை தாங்கும் அறிவியலின்
தரத்தை உணர்த்துது! — உண்மைத்
தரத்தை உணர்த்துது!

மேற்கும் கிழக்கும் போகும் போக்கின்
மெய்மை காட்டுது! — தினமும்
மெய்மை காட்டுது!
வேற்றுமையுள் ஒற்றுமையை
மேவச் செய்யுது! — உண்மை
மேவச் செய்யுது!

காலையெழுந்து காணக் கிடைத்த
காலக்கண்ணுடி! — புதிய
காலக் கண்ணுடி!
சாலி உண்மை உணர்த்து செய்தித்
தாள் என்றுணருவோம் — 'செய்தித்
தாள்' என்றுணருவோம்.

வித்துவான்
சி. ஆறுமுகம்

# 30 லட்சம் மக்களுக்கு பார்வையளித்த பறக்கும் ஆஸ்பத்திரி

## கண்மாற்றுச் சிகிச்சைக்கு 'ஓர் ஓர்பிஸ்'

அமெரிக்க கண் ஆஸ்பத்திரி ஒன்று உலகெங்கும் பறந்து திரிந்து கண் நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், கண் பார்வையை இழந்தவர்களுக்கும் சிகிச்சை அளித்து மீண்டும் நல்ல கண் பார்வை கிடைக்கச்செய்யும் பணியை மேற்கொண்டுள்ளது.

ஒரு 'டிஸி-8' விமானமே இவ்வாறு பறக்கும் கண் ஆஸ்பத்திரியாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் ஓர்பிஸ் (Orbis). கிரேக்கச் சொல்லான ஓர்பிஸ் பூகோளம் என்று பொருள்படும்.

கண் வைத்தியத்துறைக் கல்வி போதிக்கக்கூடிய வசதிகள் அடங்கிய இந்த ஆஸ்பத்திரியில் 18 ஆசனங்களோடு கூடிய ஒரு வகுப்பறை, நோயாளரைப் பரிசோதிக்கும் அறை, சத்திர சிகிச்சைஅறை ஆகியன இருக்கின்றன.

கண் சத்திர சிகிச்சைக்கு வேண்டிய உபகரணங்கள் பலவும் சத்திர சிகிச்சை அறையில் உள்ளன. இந்த உபகரணங்களின் ஒரு பெரும் பகுதி அமெரிக்க உயர் தொழில் நுட்பக் கூட்டுத்தாபனங்களினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டவை. விமானம் பறக்கும்போது உண்டாகும் அதிர்வுகள், அசைவுகள் ஆகியவற்றால் பாதிப்படையாமல் நிலையாக இருக்கக் கூடியவிதத்தில் இந்த உபகரணங்கள் விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

கடந்த 1982 மார்ச் மாதம் முதல் பறக்கும் ஆஸ்பத்திரியான ''ஓர்பிஸ்'' கண் நோய் சம்பந்தமான வைத்தியர்களுக்குப் போதனை வழங்கும் ஒரு நிலையமாகப் பயன்பட்டுள்ளது. இலங்கை, ஜமேக்கா, பெரு, ஈக்குவாடோர், பனமா, கொலம்பியா, பிரிட்டன், மேற்கு ஜேர்மனி, துருக்கி, சீனா, பிலிப்பைன்ஸ் முதலான பல நாடுகளைச் சேர்ந்த வைத்தியர்களுக்கு பறக்கும் கண் ஆஸ்பத்திரியில் போதனை வழங்கப்பட்டது.

ஒரு குறிப்பிட்ட நாடு வேண்டுகோள் விடுத்தால், அல்லது அழைப்பு விடுத்தால் தான் விமான ஆஸ்பத்திரி வைத்தியர்கள், தாதிகள், தொழில்நுட்ப நிபுணர்கள், விமானிகள் ஆகியோருடன் அங்கு பறக்கும். ஒரு நாட்டுக்குப் போய்ச்சேர்ந்ததும், கண் சத்திர சிகிச்சை நிபுணர்கள், கண்நோய் சம்பந்தமான ஆராய்ச்சி நிபுணர்கள் ஆகியோர் விமான ஆஸ்பத்திரியில் பணிபுரியும் வைத்தியர்களுடன் இணைந்துகொள்ள அழைப்பு விடுக்கப்படுகிறது. இப்படியான இணைந்த பணி இரண்டு வார காலம்வரையில் நீடிக்கும். தகுந்த சிகிச்சை முறைகள், சத்திரசிச்சை நுட்பங்கள் என்பன அப்போது விளக்கப்படும். விமானம் தங்கியிருக்கும் நாட்டின் வைத்தியர்களுடன் அவைபற்றிக் கலந்து ஆலோசிக்கப்படும்.

### போதனையுடன் பார்வையை மீளப்பெறவும் உதவி

பறக்கும் கண் ஆஸ்பத்திரி போதனை வழங்குவதோடு கண் பார்வையை மீளப்பெற்றுக் கொடுக்கவும் உதவுகிறது.

இவ்வாறான ஓர் ஆஸ்பத்திரியை உருவாக்கும் திட்டம் பத்துவருடங்களுக்குமுன் டெக்ஸாஸில் உள்ள பேலர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கண் வைத்தியத்துறை ஆராய்ச்சியாளரான டேவிட் பேட்டன் என்பவரால் தயாரிக்கப்பட்டது. கண் சிகிச்சை தொடர்பாக வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த வைத்தியர்களிடையே கருத்துப் பரிமாற்றம் இடம்பெறவேண்டியதன் அவசியத்தை அவர் பல நாடுகளுக்கு மேற்கொண்ட பயணங்களின் போது உணர்ந்தார். அவர் வகுத்த திட்டத்தின் விளைவாகவே 'ஓர்பிஸ்' உருவாகியது.

அமெரிக்க கூட்டுத்தாபனங்களினதும், அமெரிக்க அரசாங்கத்தினதும் தனிநபர்களினதும் உதவியின் திரட்டுத்தான் ''ஓர்பிஸ்'' என்ற பறக்கும் ஆஸ்பத்திரியாக மாறி இருக்கிறது. யுனைட்டட் ஏயர்லைன்ஸ் நிறுவனம் கண் ஆஸ்பத்திரிக்கான விமானத்தை நன்கொடையாக வழங்கியது. வைத்திய பாவனைக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட வீடியோ கமராக்களை அமெரிக்க சொனி கோர்ப்பரேஷன் கொடுத்து உதவியது.

சத்திர சிகிச்சை அறையில் இருக்கும் சத்திர சிகிச்சை நிபுணருக்கும் விமானத்துக்கு அணித்தாக அமைந்த ஒரு கட்டடத்தில் இருக்கும் வைத்தியர்களுக்கும் இடையில் நேரடித் தொடர்பை ஏற்படுத்துவதற்கு ஓடியோ வீடியோ உபகரணங்கள் எனப்படும் கட்புலச் செவிப்புல உபகரணங்கள் உதவுகின்றன. வைத்தியர்களால் டெலிவிஷன் திரைகளில் அறுவைச் சிகிச்சையைக்காணமுடிகிறது.

### உதவி

நூற்றுக்கும் அதிகமான பிரதான கூட்டுத்தாபனங்கள் 'ஓர்பிஸ்' திட்டத்துக்கு உதவியுள்ளன. சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனம் சுமார் பத்துலட்சம் டாலர் உதவி வழங்கியிருக்கிறது.

''ஓர்பிஸ்'' நிலையத்தில் பணிபுரியும் வைதியர்கள் எல்லா வகையான கண் நோயாளர்களுக்கும் சிகிச்சை அளிக்கத்தயாராக இருக்கிறார்கள். ஒருவரின் கண்ணில் புகுந்து குழிபறிக்கும் ஒட்டுண்ணிப் புழுவை அகற்றவேண்டுமா? ஒரு நோயளியின் கண்ணை அகற்றிவிட்டு நல்ல கண் ஒன்றைப் பொருத்திவிட வேண்டுமா? எதைச் செய்ய வேண்டுமானாலும் அவர்கள் தயார்.

அண்மையில் 'ஓர்பிஸ்' சீனாவுக்குச் சென்றிருந்தபோது, ஒரு நோயாளிக்கு கண் ஒன்றைப் பொருத்திக் கண்பார்வைகிட்டச்செய்தது. 'ஓர்பிஸ்' வைத்திய நிபுணர்களின் அழைப்பை ஏற்று அவர்களுடன் சென்ற டெக்ஸாயைச் சேர்ந்த கண் வைத்திய நிபுணர் ஒருவர் இந்தப் பணியை வெற்றிகரமாகச் செய்து முடித்தார்.

### பார்வை இழப்பவர்கள் அதிகரிப்பு

கண்நோய்களும், கண்பார்வையை இழப்பவர்களின் எண்ணிக்கையும் உலகில் அதிகரித்து வருகிறது.

### தண்ணீரால் கண்நோய்

மூன்றாவது உலக நாடுகள் பலவற்றில் கண்நோய்கள் பெருகுவதற்கு அசுத்தமான தண்ணீர் காரணமாக இருக்கிறது. ஒட்டுண்ணிகள் உண்டாகின்றன.

உலகெங்கும் உள்ள கண் நோய் நிபுணர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி, புதிய அறிவு ஆகியன வற்றின் வாயிலாக ஐந்து வருடகாலத்தின் பின் முப்பது லட்சம் மக்களின் கண் பார்வையைக் காப்பதற்கு 'ஓர்பிஸ்' திட்டம் உதவியிருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**- அன்ரனி பெர்ணண்டோ -**

## நூல் மதிப்பீடு

## எவ் எக்ஸ் ஸியின் கட்டுரை நூல்

நூல்; இலக்கிய விமரிசனம் - பாடம்: பாடபேதம். ஆசிரியர்: வித்துவான் எவ். எக்ஸ். ஸி. நடராசா அவர்கள். மதிப்பிடுபவர்: பண்டிதர், வித்துவான் மு. கந்தையா.

ஏட்டில் எழுதப்பட்டுள்ள கந்தபுராணம் படிக்கப்பட்ட காலத்துச் சம்பவங்கள் சில, சுவையானவை. 'அந்த நெடுங்கிரி வாலோடும்' என்று புராணம் வாசிப்பவர் வாசிப்பர் அதென்ன! கிரிக்கும் (கிரி-மலை) வாலுண்டா எனக் கேட்போர் ஐயுறுவர். சற்றுச் சிரித்துவிட்டுப் பயன் சொல்பவர், அந்த நெடுங்கிரி வர வேண்டும், எனஒருகால் அதைத் திருத்திச் சொல்லிவிட்டுப் பிறகுபயன் சொல்வர். ஏட்டு நிலையில் இலக்கண இலக்கியங்கள் அணுகுந் துறையில் இருக்கக்கூடிய இக்கட்டுகள் இதுபோன்ற பலவாகும்.

இங்ஙனந் தடுமாறு நிலையிலிருந்து பெருமளவில் தப்பிப் பிழைக்கும் சலாக்கியம் நூற்பிரசுரப்பணி மூலந்தான் தமிழுக்கு வாய்த்திருக்கின்றது.

அங்ஙனம் நூல்கள் ஏட்டு நிலையிலிருந்து நூல் நிலைக்கு மாற்றலாகும் போது தமக்கிருந்த அல்லல் தொல்லைகளை யிட்டு அன்றைய பதிப்பாசிரியர்கள் கூறிய சோகக் கதைகள் பலப்பல. நூல் நிலைக்கு வந்தனவெல்லாம் முற்றமுடிய உண்மையான சுத்தமான பாடங்கள் எனக்கொள்ள இடமில்லையென்பது உண்மைமேல் உண்மை.

இந்த உண்மையின் அடிப்படையில் வித்துவான் எவ். எக்ஸ். ஸி. நடராசா 'இலக்கிய விமர்சனம்- பாடபேதம்' என்ற நூலினை வெளியிட்டுள்ளார். அவர்கள் ஒவ்வொரு நூலிலும் அவ்வப்போது வெளிவந்துள்ளன ஒவ்வொரு பதிப்பையும் முற்ற முடியப்படித்து, உற்று நோக்கி, ஊன்றியுணர்ந்து, அவற்றின் பாடபேதங்கள், உரை விகற்பங்கள் அனைத்தையும் ஒப்பு நோக்கித் தெரிந்தெடுத்து, ஒருங்கமைத்துத் தருவது இந்நூற் பண்பாயிருக்கிறது.

ஆசிரியர், நூலின் முதற்பகுதியில் பாடபேதங்கள். உரை வேறுபாடுகள் உருவாவதற்கு உடந்தையாயிருந்த பல்வேறு சூழ் நிலைகளையும் மிகத்தெளிவாக வகுத்துக்காட்டியுள்ளார். எழுதினவன் ஏட்டையும் பொருளுண்மையையும் கெடுத்ததுமல்லாது, மதிப்புக்குரிய நூலாசிரியரதும் உரையாசிரியரதும், மாண்பையே கெடுத்து விட்டிருக்கிறான் என்ற உண்மை அப்பகுதியைப் பார்க்கும் போது புலனாகிறது.

நூலின் இரண்டாவது பகுதி திறனாய்வு பற்றியது. திறனாய்வு என்ற பெயரில் இன்று நடக்கும் பணிக்கும் அன்றைய திறனாய்வு இடம் பெற்றிருந்த வகைக்குமிடையிலுள்ள மகத்தான வேறுபாட்டை இப்பகுதியில் ஆசிரியர் துலக்கும் விதம் சுவாரஸ்யமானது. இலக்கண உரையோ இலக்கிய உரையோ எந்தஉரையாயினும் அன்றைய உரையே திறனாய்வுத் துறையின் உயர்தரம் என்று ஆசிரியர் கூறுவது மிகப் பொருத்தமாகவே உள்ளது.

இப்பகுதியைத் தொடர்ந்து ஆசிரியரின் முயற்சி இரு பிரிவாக இடம் பெறுகின்றது. அவர் முதற் பிரிவில், பிரசித்தி பெற்ற பதிப்பாசிரியர்களாகிய நாவலர், தாமோதரம் பிள்ளை, சாமிநாதையர் என்போர், தத்தம் பதிப்புக்களில் விமரிசன (திறனாய்வு) சாதனமாகிய பாடபேதங்களைக் கையாண்டதிலுள்ள குணதோஷங்களை நூல் நூலாகத் தொட்டுக்காட்டிச் செல்கிறார்.

திருமுருகாற்றுப்படை 63 ஆவது அடியில் நாவலர் கொண்ட ''புலம் புரிந்துறையும்'' என்ற பாடம், சாமிநாதையர் கொண்ட 'புலம் பிரிந்துறையும்' என்ற பாடத்தை விஞ்சியுள்ள தன்மையையும், சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை 28 ஆம் செய்யுளில் நாவலர் கொண்ட 'கொடிறு முரித்தனன் கூறுளனல்லன்' என்ற பாடத்தை, திருப்பனந்தாள் மடத்துப் பதிப்பிலுள்ள, 'கொடிறு முரித்தன்ன கூன்தாள் அலவன்' என்ற பாடம் விஞ்சியுள்ள தன்மையையும், குறுந்தொகை 43 ஆம் செய்யுளைத் தாமோதரம்பிள்ளை பதிப்பித்ததைவிடச் சாமிநாதையர் திறமையாகப் பதிப்பித்திருப்பதையும் ஆசிரியர் குறித்துணர்த்தும் பாங்கு அவர் தம் நடுவு நிலைமைப் பண்புக்கு அரண் செய்கிறது.

இனி அடுத்த பிரிவில், சிந்தாமணி, தேவாரதிருவாசகங்கள் முதலான நூற்பதிப்புக்கள் தொடர்பாக இன்னும் திருத்தமடையவேண்டிய சில பகுதிகளை ஆசிரியர் குறிப்பிடுகிறார். சிந்தாமணியிலிருந்து காட்டப்பட்ட 658 ஆம் செய்

(12ம் பக்கம் பார்க்க)

# வெரித்தாஸ்

வெரித்தாஸ் வானொலித் தமிழ்ப்பணி ஏழு ஆண்டுகள் நிறைவெய்தி எட்டாவது ஆண்டில் காலடி எடுத்துவைத்திருக்கும் வேளையில் வெரித்தாஸ் வானொலியைப்பற்றியும் வெரித்தாஸ் தமிழ் ஒலிபரப்பைப்பற்றியும் அறியத் தருவது சாலப்பொருந்தும் என நினைக்கின்றேன்.

வெரித்தாஸ் தமிழ் ஒலிபரப்பு தனது பணியில் ஏழு ஆண்டுகளை முடித்துக் கொண்டு இம்மாதத்தோடு எட்டாவது ஆண்டினைத் தொடங்குகிறது.

வெரித்தாஸ் வானொலி, பிலிப்பைன்ஸ் நாட்டில் மணிலாப் பெருநகரில் கெஸோன் நகரில் பிலிப்பைன்ஸ் நாடாளுமன்றத்திற்குச் சற்றுத்தொலைவில் ஃபேர்வியூபார்க் என்னும் இடத்தில் அமைந்திருக்கிறது.

1969ம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல்நாள் இந்த நிலையம் தொடங்கப்பட்ட போதிலும் சில காரணங்களினால் தடைப்பட்டு 1973 செப்டெம்பர் 3ம் நாளிலிருந்தே முறையாக இயங்க ஆரம்பித்தது.

### வத்திக்கன் உதவுகிறது

ஆசியநாடுகளின் கத்தோலிக்கத் திருச்சபை ஆயர்கள் பேரவையின் சமூகத் தொடர்புக்குழு இந்த வானொலி நிலையத்திற்குப் பொறுப்பு ஏற்கிறது. இதற்குத் தேவையான உதவிகள் அனைத்தும் வத்திக்கனிலுள்ள மறைபரப்புச் செயலகத்திலிருந்து மேற்கு ஜெர்மனியிலுள்ள அறநிறுவனங்களாகிய ''மிஸ்ஸியோ'' ''மிஸரயூர்'' ஆகியவற்றிடமிருந்தும் வேறுசில அறநிறுவனங்களிடம் இருந்தும் கிடைக்கின்றன.

ஆசிய மக்களுக்கு அவர்களுடைய மொழியில் இயேசுக் கிறீஸ்துவின் நற்செய்திகளை அறிவிப்பது, முழு மனித வளர்ச்சிக்கு வேண்டிய பயன் மிக்க கருத்துக்களை அளிப்பது. வெரித்தாஸின் நோக்கங்களாகும்.

வெரித்தாஸ் - என்பதுஇலத்தீன் மொழிச் சொல். இதன் பொருள் 'உண்மை.'

உண்மை எங்கே இருந்தாலும் அதனை மகிழ்வுடன் ஏற்றுத் தனது ஒலிபரப்பில் பயன்படுத்துகின்றது. வெரித்தாஸ் வானொலி எந்தச் சமயத்திற்கும், எந்த அரசுக்கும் சொந்தமானது அல்ல.

### 14 மொழிகளில் ஒலிபரப்பு

இப்பொழுது பதினான்கு மொழிகளில் இந்த வானொலி நிலையம் தனது ஒலிபரப்பை நடத்துகின்றது. ஆங்கிலம், கொரியன், சீனம், ஜப்பானியம், வியட்நாமியம், தகாலோக், இந்தோனேஷியம், பர்மியம், கச்சின், கர்ரின், சிங்களம், வங்காளம் தெலுங்கு தமிழ் ஆகியவை இப்பொழுது ஒலிபரப்பில் இடம்பெற்றுள்ள மொழிகள்

இந்தி, உருது ஆகிய மொழிகளிலும் ஒலிபரப்புக்கள் நடைபெற வெரித்தாஸ் நிர்வாகம் முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்றது.

வெரித்தாஸ் வானொலி நிலையத்தின் இப்போதைய நிர்வாகத் தலைவர் அருட்பெருந்தகை டெட் புகாயின் நிகழ்ச்சிகளின் இயக்குநர் அருட்தந்தை அல்போன்ஸோ கர்ரின்யோ, நிகழ்ச்சிகளின் நிர்வாகி திரு. ஹாரிக்கேஸர்.

வெரித்தாஸிலிருந்து ஒலிபரப்பாகும் எந்த மொழியின் நிகழ்ச்சியும் வெரித்தாஸ் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியது. ஒவ்வொரு மொழிப் பிரிவிற்கும் ஒரு பொறுப்பாளரும் அவருக்கு

(10ம் பக்கம் பார்க்க)

**அரியாலையூர் உதயசந்திரன்**




[2]

அம்மாநான் ஓவியங்கள் தீட்டு கின்ற
அழகுவளர் தொழில்புரிவோன்! அதற்கே ஆக
இம்மாநி லம் எங்கும் சுற்றிப் பார்த்தே
இயற்கை யெழில் இருவிழியால் நுகர்தல் செய்வோன்!
இம்மாலே இவ்வழியால் வந்தவேளை
என்ஸ்கூட்டர் பழுதடைந்து போன தாலே
உம்வீடு வரநேர்ந்த தென்று சொன்னுன்!
உற்றவனை நோக்கியே அப்பெண் சொல்வாள்.

''ஒருதருக்கோ ஒருவரிங்கே உதவ என்றே
உவப்புடனே நமைஈசன் படைத்தான் நின்றன்
வரவுபற்றி மகிழ்கின்றேன் பல்லாண் டாக
வாதமெனும் கொடுநோயின் பிடிக்காளாகி
பெருமிடர்கள் அனுபவித்தே பாயின் மீது
கிடக்கின்றேன் என்மகட்குப் பார மாக
ஒருசிறுமி உழைத்தென்னைக் காக்கும் செய்கை
உள்ளமதைத் துன்புறுத்தும்'' என்றும் சொன்னுள்!

அவ்வேளை கயல்விழியாள் தேநீர் கொண்டே
அவ்விடத்தே வந்திட்டாள்! ஓவி யங்கள்
செவ்விதினே வரைகின்ற குமார் என்கின்ற
சீர்மிகுந்த கலைஞனுமே நோக்க லுற்றுன்!
இவ்வுலகின் அழகெல்லாம் ஒருங்கு சேர்ந்தே
இவளாக வந்ததுவோ? என்னும் வண்ணம்
கொவ்வையித ழாள் அங்கு கோலம் செய்தாள்!
கோடியாம் கற்பனைகள் அவனும் செய்தான்!

தூசுடனே கல்லுடைத்த அப்போ தும்தான்
சுடர்விட்டாள்! அழகுடனே வீடு வந்து
பேசுமொரு ஒப்பனைசெய் திப்போதும் தான்
பேரெழிலில் திகழ்கின்றுள் இந்தப் பாவை
நேசமுறு நகையினிலும் அழகே செய்வாள்]
நிலத்தினிலே சினந்தாலும் அழகே செய்வாள்!
ஆசையுடன் பார்க்கையிலும் அழகே செய்வாள்!
அதுதவிர்ந்தே அழுதாலும் அழகே செய்வாள்!

மணிமுடியில் இருந்தாலும் நிலத்தின் கண்ணே
வைத்துவிடப் பட்டாலும் ஒளிசெய் கின்ற
அணிவயிரம் தன்னியல்பிற் குறைதல் உண்டோ?
அதுபோல்தான் இவளுமென நினைத்துக் கொண்டான்!
பிணிவிளையப் பார்க்கின்ற இந்தப் பாவை
பின்மருந்தும் தருவாளோ என்றே எல்லாம்
அணிமார்பன் குமார்மனத்தே எண்ணும் நேரம்
அவள் தேநீர் அவன் கையிற் கொடுத்து நின்றுள்!

ஓவியத்தைத் தீட்டுகின்ற கலைஞர் யாரும்
ஓவியம்போல் இருப்பாரோ? பாவை யர்தம்
ஆவியினைக் கவர்கின்ற கலைகள் யாவும்
அவர்கற்றும் இருப்பாரோ? என்றே எல்லாம்
தேமதுர மொழிஉடையாள் மனத்தே எண்ணித்
தெய்வநகை செய்திட்டாள்! கணத்தின் பின்னே
பூமலரும் கொடியொன்றே அசைதல் போலப்
பொற்றெடியாள் கயல்விழியும் திரும்ப லானுள்!

பேசாது தேநீரைக் கொடுத்து விட்டுப்
பெண்ணழகு சமையலறை சென்ற வேளை
''பாசமுளாள் உம்புதல்வி'' என்றே அந்தப்
படம்வரையும் கலைஞனுமே கூறி விட்டுத்
தேசுமிகும் இக்கன்னி கல்லு டைக்கச்
செய்தவிதி யாதென நான் அறிய லாமோ?
மாசறியா நல்மனத்தீர் என்றன் கேள்வி
வருத்தத்தைத் தருமென்றுற் பொறுப்பீர் என்றுன்!

இக்கேள்வி கேட்டதுமே படுக்கை மீது
இடருற்ற மூதாட்டி தலையின் மீது
மிக்கதுயர் உடன் அடித்தே உள்ளம் நொந்து
விழியிரண்டும் நீர் சொரியத் துடித்தாள் ஆகி
இக்கேள்விநீ கேட்டதிலே குற்ற மில்லைச்
இயம்புகிறேன் எனக்கூறிச் சுவரின் மீது
தக்கமலர் வழிபாட்டை ஏற்றி ருந்த
தன்துணைவன் புகைப்படத்தைப் பார்க்க லானுள்.

அழுகின்ற மூதாட்டி தன்னைப் பார்த்தே
''அழாதீர்கள்! தாயேநான் குழப்பி விட்டேன்!
மழைசிறிது விட்டுளது என்றன் ஸ்கூட்டர்
வளவினுள்ளே நிற்கட்டும் நாளைக் காலை
பிழைத்திருத்தி எடுதேநான் கொள்ளு கின்றேன்
செல்வதற்கே உத்தரவு தருவீர்!'' என்றுன்
அழுதாள்கை தொழஅவனும் தொழு தானுகி
அவ்விடத்தாற் புறப்பட்டுப் படலை சேர்ந்தான்

திரும்பியவன் பார்க்கையிலே யன்ன லூடே
திகழ்கின்ற முழுநிலவைக் கண்ணுற் கண்டான்
விரும்பிஅதும் நகைத்திடவே அவனும் அன்பை
விளக்குகின்ற நகைபுரிந்து செல்ல லானுன்
பெருமழையும் காதல்களும் எப்போ தெங்கே
பொழியுமெனக் கூறுதலும் இயலுமாமோ
பருவத்தின் ஆட்சியினை மீறு வோர்கள்
பாரினிலே கோடியினுள் ஒருவர் அன்றே

(வளரும்)

# தமிழ் மொழியின் பண்பாடாக இருப்பது பக்தி

''அரிது அரிது மானிடராதல் அரிது; மானிடராயினுங் கூன் குருடு நீங்கிப் பிறத்தல் அரிது.'' என்பது ஔவையார் வாக்கு.

மனிதன் ஒருவனுக்குத்தான் பகுத்தறிவு உண்டு. ஐம்புல அறிவு உயிரினம் எல்லாவற்றுக்கும் உண்டு. தொட்டால் உணரும் அறிவு மரத்திற்கும் உண்டு. மக்கள் பண்பில்லாதவரை மரத்திற்கு உவமிக்கிறுர் வள்ளுவர்.

''அரம்போலுங் கூர்மையரேனும் மரம் போல்வர்
மக்கட்பண் பில்லாதவர்''

மனிதராகப் பிறந்தவருள் பண்புக்குணமே இல்லாதவர்கள், அரத்தைப்போலக் கூரிய அறிவுடையவர்களாக இருந்தாலும் அவர்கள் பிறர் துன்பங்களை உணர முடியாத மரத்துக்கே சமானமாவார்கள்.

அரம் என்பது தான் தேயாமல் பிறபொருளைத் தேய்த்துவிடக்கூடிய கூரிய பற்களையுடைய எஃகு ஆயுதம். அரம் போலும் கூர்மையர் என்பது அரத்தைப்போலத் தமக்கு ஒரு தீங்கின்றி பிறரை வென்றுவிடக்கூடிய கூர்மையான அறிவுடையவர்கள் என்பதாகும். மரம்போல்வர் என்பது மரத்தைப்போல் பிற உயிர்களின் துன்பங்களை உணராதவர்கள். உயிர்களுக்குள் ஓரறிவு, இரண்டறிவு, மூன்றறிவு, நான்கறிவு, ஐந்தறிவு என ஐந்து புலன்களின் அளவுக்குத் தக்கபடி உயிர்கள் வேறுபடுகின்றன. மரம் ஒரே அறிவுடையது. அது தன்னுடைய வளர்ச்சியையும் தளர்ச்சியையும் தவிர, மற்ற எந்தப் பொருளைப்பற்றியும் உணருந் தன்மையுள்ளதல்ல. மனிதன் ஐம்புல உணர்ச்சிகளோடு பகுத்தறிவு என்ற ஆருவது உணர்ச்சியுமுள்ளவன். அதனல்

## எம்மை இறைவன் எதற்காய்ப் படைத்தான்?

அவன்றான் பிற உயிரின் துன்பங்களை அதிகமாக உணருந் தன்மையுள்ளவன். பண்புடைமை என்பது பிறருடைய துன்பங்களை உணர்ந்து உதவுதல். அதனுற்றுன் அது மனிதப் பண்புகளில் சிறப்பாகக் கருதப்படுகிறது. உயிருள்ள ஜீவன்களில் மரம் ஒன்றுதான் தன்னைத்தவிர பிற எதையும் உணருந்தன்மையில்லாதது. அப்படிப் பிறருடைய துன்பங்களை ஒரு சிறிதும் உணராத மனிதர்கள், கூரிய அறிவுடையவர்கள் ஆனுலும் பிறருடைய துன்பங்களுக்கு இரக்கப்பட்டு உதவும் பண்புடைமை இல்லாதவர்கள், உயிரிருந்தும் உணருந்தன்மையில்லாத மரத்துக்கே சமானமாவார்கள்.

இப்படி மரம்போன்றவர்கள் பண்புக்குணமே இல்லாதவர்கள். இவர்கள் கூரிய அறிவிருந்தும் பிறருடைய துன்பங்களை உணராமல் அவர்களை அரம்போல் மேலும் துன்புறுத்துவார்கள். ஆனுல் பண்புக்குணம் உடையவர்களோ தமக்குத் துன்பம் செய்கிறவர்களுக்கும் இரங்குவார்கள். பிறரை அழித்தும் வாழ நினைப்பவன்- துரோகி. பிறரைப்பற்றி அக்கறையின்றி வாழ்பவன் - சுயநலக்காரன். பிறரும் வாழத் தானும் வாழ்பவன்- மனிதன். பிறர் வாழவே தான் வாழ்பவன் - புனிதன். பகைவர் வாழ தன்னை இழப்பவன்- தெய்விகன். மனிதன் ஒருவனுக்குத்தான் சிரிக்கும் சக்தி உண்டு. வள்ளுவர் 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று கூறுகின்றுர்.

மனிதன் ஒருவனுக்கே சிந்திக்கும் சக்தியும் பேசும் சக்தியும் உண்டு. சிந்தனையால் இறை தியானமும் பேச்சால் இறைவன் புகழ் பாடலும் நிகழவேண்டும். இறைவனுக்குத் தன் புகழைக் கேட்டலில் ஒரு விருப்பு. அதுவும் தமிழ் மொழியில் தனித்துவமான ஒரு விருப்பு. ''முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்பவன்.'' சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட உடனே சுந்தரர் மனம் நெகிழ்ந்து தான் செய்யவேண்டுவதியாது? எனக் கேட்கின்றுர்.

நா. முத்தையா
ஆசிரியர், 'ஆத்மஜோதி'

''அர்ச்சனை பாட்டேயாதலின், சொற்றமிழ் பாடுகென்றுர் தூமறை பாடும் வாயார்'' என்று சேக்கிழார்பெருமான் பாடுகின்றுர்.

பதினுருயிரம் திருப்புகழ் பாடிய அருணகிரியாருக்கு இன்னும் பாடவேண்டும் இன்னும் பாடவேண்டும் என்று நாவு தினவு எடுத்ததாம். நெஞ்சக்கனகல்லு உருகுவதற்காகக் கந்தரனுபூதி பாடத் தொடங்கிய அருணகிரியார் தொடக்கத்திலேயே ''பாடும் பணியே பணியா அருள்வாய்'' என்று வேண்டுதல் செய்கின்றுர். தமிழ் என்ற சொல்லுக்கே இனிமை என்று பொருள் உண்டு. அதனல் தமிழிலே பாடும் பாட்டைக் கேட்க இறைவனுக்குப் பெரிதும் விருப்பு உண்டு.

பொன்னை நெருப்பினில் பொலிவேற வாட்டிடும் பொற்கொல்லனைப்போலச் சீவனைப் புவிமாயைதனிலே வாட்டி மாற்றேற்றுகின்றுன் இறைவன். அடியார்களைச் சோதிப்பதிலே இறைவனுக்கு ஒரு தனி இன்பம். அதனுல்தான் அவர்களிடமிருந்து இனிய உருக்கமான பாடல்களைக் கேட்க முடிந்தது. சுந்தரர் சத்தியம் தவறியபோது அவரது கண்களை மறைக்கின்றுன்இறைவன். கண்கள் மறைந்தபோது சுந்தரர் துன்பத்தின் எல்லையில் இவரலாது பிரானுர் இலையோ என்றும் ஏங்குகின்றுர். ஈற்றில் மனமுருகிப் பாடுகின்றுர். பாட்டுக்கிரங்கிய பெருமான் ஊன்றுகோல் அளிக்கிறுன். மேலும் பாடவைத்து ஒரு கண்ணை அளிக்கிறுன். இப்படியெல்லாம் அடியார்களைப் பாடவைத்தலில் இறைவனுக்கோர் தனி இன்பம். இதனுல் திருமூலர்

''என்னை நன்றுக இறைவன்
படைத்தனன்
தன்னை நன்றுகத் தமிழ்
செய்யுமாறே''

என்று கூறுகின்றுர். தமிழ்ச் சமூகத்தின் பண்பாடாகத் தருமம் இருப்பதுபோல தமிழ் மொழியின் பண்பாடாக இருப்பது பக்தியாகும். தமிழில் பக்தி நூல்கள் இருப்பதுபோல் வேறு எந்த மொழியிலும் இல்லையாகும். உலகத்திலேயே முதன்முதல் தோன்றிய நூல் இருக்குவேதம் என்பது ஆராய்ச்சியாளர் முடிபு. அந்த வேதத்தை ஓதினுல் மனமுருகிக் கண்ணீர் வடித்தவர்கள் யாரும் இலர். ஆனுல் திருவாசகத்தை ஒருமுறை ஓதினுல் தொடுமணற்கேணியில் நீர் சுரப்பதுபோலக் கண்களில் இருந்து ஆனந்த பாஷ்பம் பொழிவதைக்காணலாம்.

''மெய்தான் அரும்பி
விதிர்விதிர்த்துன் விரையார்
கழற்கு என்
கைதான் தலைவைத்து
கண்ணீர் ததும்பி வெதும்பி
உள்ளம்
பொய்தான் தவிர்ந்து
உன்னைப்போற்றி சயசய
வென்னும்
கைதான் நெகிழவிடேன்
உடையாய் என்னைக்
கண்டுகொள்ளே''

என்று உள்ளம் உருகிப்பாடுகின்றுர் மணிவாசகர். இதனுல்தான் ''திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்ற பழமொழி வழங்குகின்றது.

''நினைந்து நினைந்து
உணர்ந்து உணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந்து
அன்பே நிறைந்து நிறைந்து
ஊற்றெழுங் கண்ணீர தனுல்
உடம்பு நனைந்து நனைந்து''

என்றுபாடுகின்றுர் வள்ளலார். தமிழ் மொழியியிலே மாத்திரம்தான் உள்ளத்தையுருக்கவல்ல பன்னிரு திருமுறைகள் உள்ளன.

சிவபெருமானை இலகுவில் அடைவதற்குத் தமிழ் மொழியிருக்க முன்னைத்தவம் சற்றுமில்லாதவர் பின்னைப் பிறப்புகளில் பிறந்துபிறந்து உழலுவது எவ்வளவு பேதைமை? தமிழ் பரப்பியவர் திருஞானசம்பந்தர்; தமிழ் உகந்தவர் சிவபெருமான்.

''நாளுமின் னிசையாற்
றமிழ்பரப்பு
ஞான சம்பந்தனுக் குலகவர்
முன்
தாளமீந்தவன் பாடலுக்
கிரங்குந்
தன்மையாளன்''

என்று சுந்தரர் பாடுகின்றுர். சம்பந்தருடைய செந்தமிழ்ப்பாடல் என்னென்ன அற்புதங்களையெல்லாம் செய்துள்ளது என்பதைப் பின்வரும் பாடல் மூலம் அறியலாம்

புனலி லேடெதிர்
போகெனப் போகுமே
புத்த னுர்தலை தத்தெனத்
தத்துமே
கனலி லேடிடப் பச்சென்
றிருக்குமே
க்தவு மாமறைக் காட்டி
லடைக்குமே
பனையி லாண்பனை பெண்
பனை யாக்குமே
பழைய வென்புபொற்
பாவைய தாக்குமே
சினவ ராவிடந் தீர்க்கெனத்
தீர்க்குமே
செய்ய சம்பந்தர் செந்
தமிழ்ப்பாடலே.

இவற்றையெல்லாம் உள்ளீடாகக்கொண்டு திருமூலர் பின்வரும் பாடலைப் பாடுகின்றுர்:

''பின்னைநின் றென்னே
பிறவி பெறுவது

(10ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் வாடகைக்கு வீடு தேடுகிறீர்களா?

''மண்ணுக் கீடுபொன் கேட்டால்
வலுவில் மனிதர் என் செய்வார்?
திண்ணமாக இவ் வழக்கு'
தீராவழக்கே ஆகுமன்றோ'

நாடற்றவர் பிரச்சனை போன்று தான் வீடற்றவர் பிரச்சனையும் இன்று உருவாகிப் படுமோசமான நிலைக்கு வளர்ந்து விட்டது.

நிலம் பெருகாமலிருப்பதும் சனம் பெருருகிக்கொண்டிருருப்பதுவும் இதற்கு ஒரு முக்கிய காரணம் என்பதை எல்லோருமே தெரிந்திருக்கின்றனர்.

சுயநலங்களும், சரியான திட்டங்களில்லாததும் மற்றக் காரணங்களில் முக்கியமாகக் கருதலாம்.

''அடுத்தவருடம் ஜனவரி முதலாம் திகதி இந்த நாட்டின் வீடமைப்புச் சரித்திரத்தில் புதிய யுகம் உருவாகப் போகின்றது'' என்று பிரதமர் உறுதியளித்துள்ளார். அத்துடன் பத்துலட்சம் வீடுகள் வீடற்றவர்களுக்குக் கட்டப்படவிருப்பதாகவும் பிரதமர் நம்பிக்கை வாக்குறுதியளித்துள்ளார்.

இந்தச் செய்தி பசியால் காய்ந்த வயிற்றில் பசும்பால் ஊற்றியது போலவே இருக்கின்றது. ''இதில் யாழ்ப்பாணத்துக்கு எத்தனை வீடுகள்?''

இங்கு நிரந்தர விலாசமற்றுக் குழந்தை குட்டிகளை வீட்டுக்கு வீடாகச் சுமந்து கொண்டு தெருத் தெருவாக வீடுதேடித்திரியும் சொந்தவீடு வாசலற்றவர்களின் ஏக்கம் கலந்த கேள்வி இதுதான்.

இப்போது யாழ்ப்பாணத்தில் யாரிடமாவது சென்று வீடொன்று வாடகைக்கு எடுத்துத் தருகின்றீர்களா என்று கேட்டுப்பாருங்கள்.

''உஸ்... அந்தக் கதையை மட்டும் கேளாதீங்கள்'' என்றே நிச்சயமாகப் பதில் வரும்.

இந்தவகையில் அடங்காத மற்றவர்கள் எங்கேபோவது?

நடுத்தரவகுப்பினரும் அதற்குக் கீழ்மட்டத்தினரும் வீடு வாடகைக்குத் தேடும் படலத்தில் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை பலத்த சோதனைக்குள்ளாகின்றார்கள்.

சுங்கப்பகுதியினர் கேட்கும் கேள்விகளைப்போல் வீட்டுச் சொந்தக்காரர்களின் அடுக்கடுக்கான தீவிரகேள்விகளுக்கு அவர்கள் பதில் சொல்லியாக வேண்டியிருக்கிறது.

இந்தக் கண்டிஷன்களுக்குள் நெரிபட்டே அவர்கள் வாடகைக்கு வீட்டைத் தேடிக் கொள்ள வேண்டிய மிக்க பரிதாபகரமான தொரு நிலை.

இத்தகைய வாடகை வீடுகளில் குடியிருப்பவர் தனது தனிமனித சுதந்திரத்தை எவ்வளவு தூரம் அடக்கிக் கொள்ளவேண்டும் என்பது வெளியே சொல்லிகொள்ளமுடிவதில்லை.

### அந்தக் கதையை மட்டும் பேசாதீர்கள்!

ஜூலை கலவரங்களின் பின் இங்கு இந்தநிலை படுமோசமாகியேவிட்டது என்பது பகிரங்க உண்மை.

வீடுகளற்ற நிலையில் ஒரு சிறிய வீட்டில் மூன்று நான்கு குடும்பங்கள் மூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றன.

ஜூலையின் பெருமூச்சுக்கள் இன்னும்இங்கு ஓயவே இல்லை.

''எங்கே செல்வது?''

யாழ்ப்பாணத்தில் வீடுகள் சொந்தமாக இல்லாதவர்களின் பெரியகேள்வி இது தான்.

வல்லமையுள்ளவர்கள், வசதியுள்ளவர்கள் ஆயிரக்கணக்கில் 'அட்வான்ஸ்' கொடுத்து நூற்றுக் கணக்கில் வாடகை கொடுத்து ஒருவாறு வீடு எடுத்துக் கொள்கின்றார்கள்,

யாழ்ப்பாணத்தில் எவ்வளவோ வெற்றுக் காணிகள் கிடக்கின்றன. எவ்வளவோ பெரிய வீடுகள் கட்டப்பட்டும் வருகின்றன. ஆனால் காணிகளின் விலை ஏழைகள் எட்டித் தொடமுடியாத அளவுக்கு எங்கோ போய்விட்டது.

யாழ்ப்பாணத்தில் வீடுகளற்று அவதிப்படுபவர்களின் தெருவில் நிற்பவர்களின் எண்ணிக்கையைக்கணக்கிட்டால், தொகை பயங்கரமாகவே இருக்கும்.

ஆளுக்கொரு வீடு-யாழ்ப்பாணத்தில் சாத்தியமா? நிறைவேறுமா?

அடிமட்டத்தில் கிடக்கும் மக்களுக்கு அத்திவாரமிடப் பட்ட நம்பிக்கையான பதில் தேவைப்படுகிறது.

க. கணேசலிங்கம்

## உங்கள் கையெழுத்து உங்கள் உள்ளத்தைப் படம்பிடிக்கும் கண்ணாடி!

எமது ஐந்து விரல்கள் எப்படி ஓரேமாதிரி அமைவதில்லையோ அப்படி எமது கையெழுத்தும் ஒருமாதிரி அமைவதில்லை. இடப்பக்கம், வலப்பக்கம் சரித்து எழுதுகிறார்கள். சிலர் பெரிய எழுத்தில் எழுதுவார்கள். சிலர் சிறிது சிறிதாக எழுதுகின்றார்கள். இன்னும் சிலர் எழுதுக்களை நிமிர்த்தி எழுதுவர், தொடுத்து எழுதுவர் சிலர். இடம் விட்டுஎழுதுவர் சிலர்.

இவ்வாறாக ஒவ்வொருவரது கையெழுத்து அமைப்பைக் கொண்டு அவர்களது தலையெழுத்தை நிர்ணயிக்கக் கூடியாதாக இருப்பதாக உளவியல் அறிஞர்கள் கூறுகின்றார்கள். அவர்கள் சொல்வதை இங்கு கவனிப்போம்.

இடது பக்கம் சரித்து எழுதுவோர்:

இவர்கள் எப்பொழுதும் தாம் உண்டுதம் வேலை உண்டு என வாழ்பவர்கள். இன்னொருவரைச் சந்திப்பதையோ அல்லது நண்பர்களுடன் இன்பமாகப் பொழுது போக்குவதைரோ விரும்பமாட்டார்கள்.

வலதுபக்கம் சரித்து எழுதுவோர்:

எல்லோரது மனதையும் எளிதில் கவரக் கூடியவர்கள். சரளமாகவும் நகைச்சுவையாகவும் கதைத்துப் பல நண்பர்களையும் சேர்த்துக் கொண்டு இன்பமாக இருப்பார்கள். இவர்கள் இடது பக்கம் எழுதும் பழக்கமுடையவர்களுக்கு நேர்மாறானவர்கள்.

தொடுத்து இடம் விட்டெழுதுவோர்:

தாங்கள் செய்யும் தொழிலில் விசுவாசம் கொண்டவர்கள். 'தன் கையேதனக்குதவி' என்ற கொள்கையில், எதனையும் தனித்து நின்று நிறைவேற்றும் வல்லமை கொண்டவர்கள்.

நிமிர்த்தி எழுதுவோர்:

எப்பிரச்சினையில் ஈடுபட்டாலும் சமாளித்து நடக்கக் கூடியவர்கள். தமது சொந்தக் காலில் நின்றே எதனையும் சாதிக்க வேண்டுமென்ற பிடிவாதம் கொண்ட இவர்கள் காரியத்தை வெற்றியுடன் நிறைவேற்றும் பழக்கமுடையவர்கள்.

சிறிய எழுத்தில் எழுதுவோர்:

கற்பனைகள் நிறைந்த இவர்கள் நிறைந்த அறிவு கொண்டவர்கள். கதாசிரியராகவும், கவிஞர்களாகவும் விளங்குபவர்கள் இச்சிறிய எழுத்துக் காரர்கள்தான்.

பெரிய எழுத்தில் எழுதுவோர்:

தாராள மனப் பான்மையை இவர்களிடம் எதிர் பார்க்கலாம்' சில சந்தர்ப்பங்களில் தற்பெருமை கொண்டவர்களாகக் காணப்படுவார். இவர்களை இலகுவில் புரிந்து கொள்ள முடியாது.

இரா. உதயகுமார்

## நம்மை இறைவன்

(9ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னைநன் றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ் செய்யுமாறே''

அயல் வழக்கின் துறைவெல்லும் அசைவில் செழுந்தமிழ் வழக்கே திருவடியுணர்வைக் கூட்டுவிக்கும் அருள்வழக்காகும். அத்தமிழ் வழங்கும் நாடே சிவனடிசேர்ப்பிக்கும் நற்றவம் புரிதற்கேற்றபழ நாடாகும். தேவரும் முத்தி பெறுதற்கு பூவுலகத்திற்கு வந்து தவம் செய்ய வேண்டும். பூவுலகத்திலும் எந்தநாடுபொருத்தமானது என்றால் தென்னாடுடைய சிவன் என்று எந்நாட்டவரும் போற்றும் தமிழ் நாடாகும். தேவர்களின் பிரம முகூர்த்தமாகிய மார்கழி மாதத்தில் தமிழ் நாட்டில் வீடுதோறும் அழகிய கோலம்; தெருக்கள் தோறும் திருவெம்பாவை திருப்பாவைப் பஜனைகள்; கோயில்கள் தோறும் விசேட ஆராதனைகளும் திருவாதவூர்ப்புராணம் படித்து பயன்சொல்லும் நிகழ்ச்சியும் நடைபெறும். இதனைநினைந்தே மணிவாசகப்பெருமான் தேவர்கள் பூமியில் பிறந்து தவம் செய்யாமல் அவமே காலம் கழிப்பதாக ஏங்குகிறார்கள். என்று ஒரு திருவாசகத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''புவனியில் போய்ப்பிறவாமையில் நாள் நாம்
அவமே போக்குகின்றோம்'
இந்தப்பூமி
சிவனுய்யக்கொள்கின்ற
ஆறு''

இந்நாட்டகத்துத் தோன்றி முன்னமே நற்றவத்தினை முயன்று செய்கிலாதவர் பின்னும் பிறப்பெடுத்துத் துன்புறுவர். என்னே அவர்தம் பேதைமை? சிவபெருமான் என்னை நன்றாகப்படைத்து அருளினன் தன்னை ஏனையார் திரிபின்றி உள்ளவாறுணர்ந்து உயர்தற்குக்கருவியாகிய செந்தமிழ்த் திருமுறையினை ஓதிவழிபடுதல் வேண்டும் எனத் திருவுளங் கொண்டனன். சிவன் அத்தகைய தமிழ் அறிவு நூலை அடியேனைக் கொண்டுபாடுவிக்கவும்' எண்ணினன். அங்ஙனமே என்னைத் 'தன்னை நன்றாகத் தமிழ்செய்யுமாறு' இருத்தியருளினன்.

## வெரித்தாஸ்


8ம் பக்கத் தொடர்ச்சி

உதவியாளர்களும் பணியாற்றுகின்றனர்.

1976 நவம்பர் முதல்நாளில் இருந்து வெரித்தாஸில் தமிழ் ஒலிபரப்பு நிரந்தரமாகியது. தமிழ்ப்பணித் தயாரிப்பாளராக எம். ஏ. சுவாமி பொறுப்பேற்றார். அவருக்குப் பக்கபலமாக இவரது மகன் செல்வன் இரபி, செல்விகள் புளோராராணி, மாகிரட்செலின் ஆகியோர் இந்த ஒலிபரப்பை நடத்துகின்றார்கள்.


வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப்பணியை உலகின் பல் வேறு நாடுகளில் பரந்து வாழும் தமிழர் கேட்டுவருகின்றார்கள்.

இலங்கை நேரப்படி தினமும் காலை 7 மணிமுதல் 7-30 மணி வரையும் சிற்றலை (SW) வரிசையில் 16, 19 ஆகிய மீற்றர்களில் ஏதாவது ஒன்றில் கேட்கலாம். இரவு ஒலிபரப்பை தினமும் 7-30 மணியிலிருந்து 8 மணிவரையும் சிற்றலை வரிசையில் 19, 25, 31 ஆகிய மீற்றர்களில் கேட்கலாம்.

கண்கவர் மரத்தளபாடங்கள், பிரம்புத்தளபாடங்கள்
ஸ்ரீல் தளபாடங்கள் (ஆர்பிக்கோ) முதலியவற்றிக்கு
யாழ் நகரில் பிரபல்யம்மிக்க ஸ்தாபனம்!

* LONG LIFE
* BEAUTIFUL DESIGNS
* VARIETY OF CHOICE
FREE DELIVERY WITHIN 3 MILES RADIUS




டில்கா பேணிச்சர் பலஸ்
DILKA FURNITURE PALACE 234,236, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.
போன்: 24186

செற்றிகள் ரூபா 4700/- முதல் - அலுமாரிகள் 3500/- முதல் - கபினற்றுகள் 950/- முதல்

தமிழ் தந்த தாதாக்கள் - 2

# தேசியம் மணக்கும் பண்டைத் தமிழ்ப் பாக்கள்

இலங்கைத் தமிழ்ப் புலவர்கள் எங்கே தோன்றி, எங்கே வாழ்ந்து எதைப்பற்றிப் பாடினாலும் இணைந்து வாழும் தேசியக் கட்டுக் கோப்பை அதிகமாகப் பாடியுள்ளார்கள். குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்னும் நானிலங்களையும் அவர்கள் ஒருங்கமைத்துப் பாடியபோது, நல்லியல்பிழந்த பாலை நிலத்தையும் மறக்கவில்லை.

தமிழில் தேசியம் மணக்கும் பாடல்கள் மிகப் பலவாகும். தேசிய மனப்பான்மையிருந்தமையால்தான் இலங்கையில் தெற்கு வடக்காகவும், மேற்குக் கிழக்காகவும் சைவமும் தமிழும் செழித்து வளர்ந்தன. தமிழர் வளர்த்த அழகுக் கலைகளான கட்டடக் கலை, ஓவியக் கலை, சிற்பக் கலை முதலியன நாடெங்கும் பரந்து படிந்துள்ளன, அன்றி ஆட்சியியல் என்னும் அரசியற் கலை நுணுக்கமும் நாடெங்கும் பரவி நிலவியுள்ளது. நாட்டில் வழங்கும் இரு மொழிகளிலும் தமிழ்ச் சொற்கள் நிறையவுண்டு.

மேற்குத் தேயத்தில் நோர்மன் மன்னனுய உவில்லியம் இங்கிலாந்து நாட்டைக் கைப்பற்றி அரசு நிறுவுவதற்கு முன்னரே சோழப் பேரரசனுன இராசராசன் இலங்கை முழுவதையும் ஒரு மாகாணமாக்கிச் சோழமண்டலத்தோடு இணைத்திருந்தான். பொலநறுவையென்னும் நகரம் பெரும் பொலிவோடு சனநாதமங்கலம் எனப் பெயர் பெற்றிருந்தது. அங்கே எட்டுச் சிவன் கோயில்கள் எழில் பெற எழுந்திருந்தன.

சோழர் செல்வாக்குக் குன்றியபின் வந்த பராக்கிரமபாகு மன்னன், தமிழ் நாட்டில் பாண்டிய மன்னனோடு மணவுறவு பூண்டு பெருமையுற்ற காலத்தில் பெருந்தொகையான தமிழர் பொலநறுவை, தம்பதெனியா முதலாய இடங்களில் வாழ்ந்தனர்.

முன்னர் கடல் சூழ் இலங்கைக் கயபாகு வேந்தன் எனச் சிலப்பதிகாரத்தில் புகழ் பெற்ற இரண்டாம் கயபாகு கண்ணகிக்குச் சிலையெடுத்ததால், பத்தினி வழிபாடு இலங்கையெங்கும் பரவிப் பலவிடங்களில் அம்மன் கோயில்கள் எழுந்தன. பத்தினி வழிபாடு தேசிய மனப்பான்மையை வளர்த்தது.

இலங்கையில் எழுந்த கண்ணகி வழக்குரை காவியம் இரண்டாயிரத்து இருநூறு பாடல்கள்வரை அகவல், வெண்பா, சிந்து முதலிய யாப்புக்களாலானது. கண்ணகி வழக்குரைபோல திருக்கரசைப் புராணமும் தேசியம் பேசும் பிரபந்தமாகும்.

இலங்கை வளத்துக்கு இன்றியமையாதபெருநதியாயுள்ள மகாவலி நதி சிங்கள நாட்டையும் தமிழ் நாட்டையும் இணைத்தவண்ணம் ஓடிக்கொண்டிருக்கிறது. நாட்டு வளம் பாடும் தமிழ்ப் புலவர்கள் சிங்கமும் எருதும் ஒரு துறையில் நீரருந்தும் என்றும், கிளியும் பருந்தும் ஒரு கூட்டில் வாழும் என்றும், தேனும் பழச்சாறும் ஆறுகப் பரந்தலைக்கும் என்றும் பாடுவர்.

**க. சி. குலரத்தினம்**

திருக்கரசைப் புராணமுடையார் நாட்டின் செல்வப் பெரும்பேறு பாடும்போது இங்கே பலவிதமான முத்துக்களின் ஈட்டத்தைக் குறித்துப் பாடுவர்.

தண்ணமர் சாலி
முத்தும்,
தடங்கடல் இப்பி
முத்தும்
வண்ண வொண் பணில
முத்தும்
வரையரு வோல முத்தும்
கண்ணமர் கரும்பின்
முத்தும்
ககனமஞ் சீன்ற
முத்தும்
வெண்ணில வில்லாப்
போது
மிகு நிலாக் கொழிக்கு
மன்றே.

இவ்வாறு நிலாவில்லாத வேளையில் பலவகையான முத்துக்கள் ஒளிகாலும் என்று பாடிய புலவர், தமக்குப்பின் கதிரைமலைப்பள்ளுப்பாடியபுலவருக்கு வழிகாட்டியும் இருந்தார். கதிரைமலைப்பள்ளுடையார், சூரியன் மேற்றிசையில் மறைய மகாவலிகங்கை மணிகளை உருட்டி வந்து ஒளியூட்டும் என்று பாடியுள்ளார்.

''அணியிளங் கதிர்
ஆயிரமுள்ள
வருக்கன் போய்க்
குடபாலிடைமேவ
மணி கொணர்ந்து மணி
விளக்கேற்றிடு
மாவலிகங்கை
நாடெங்கள் நாடே''

## ஹேலியின் வால்வெள்ளி (HALEEY'S COMET)

75 அல்லது 76 ஆண்டுகளுக்கு ஒரு முறை தென்படும் ஹேலியின் வால்வெள்ளி 1986 இல் மீண்டும் தோற்றவுள்ளது. தற்பொழுது சனிக்கிரகத்திற்கு அண்மையில் பூமியை நோக்கி வந்துகொண்டிருக்கும் இவ்வால் வெள்ளி 1986 ஜனவரி முதல் ஏப்ரல் வரை பூமியிலுள்ள மக்களின் வெற்றுக் கண்களுக்குத் தென்படும். 1985 நவம்பர் முதல் 1986 ஜூன் வரை தொலைநோக்கியின் உதவியுடன் இதனைப் பார்வையிடலாம்.

1531, 1607, 1682, 1759, 1835, 1910 ஆகிய ஆண்டுகளில் இது தென்பட்டுள்ளது.

(ஆதாரம்: ரீடர்ஸ்-டைஜெஸ்ட் செப்டெம்பர் 1983.)

தொகுப்பு;
**வ. மகாதேவன்**

## மிக உயர்ந்த மலைஉச்சி

உலகிலே அதியுயர்ந்த 29,028 அடி உயரமுள்ள இமய மலைத் தொடரிலுள்ள 'எவரெஸ்ட்' சிகரத்திலும் பார்க்க சுமார் 3000 அடிவரை கூடுதலான உயரமுள்ள ஒரு மலைச் சிகரம் சீனுவின் ஆட்சிக்குட்பட்ட திபேத்து நாட்டைச் சேர்ந்த இமய மலைத் தொடரில் காணப்படுவதாக ஒரு சந்தேகம் கிளப்பப்பட்டுள்ளது. இந்திய நில அளவைத் திணைக்களத்தினுல் 1852 இல் 16 ஆம் இலக்கச் சிகரம் என குறிக்கப்பட்ட இச்சிகரம் சீனரினுல் 'ஆன்மே மாசின்' (Aanme-machin) எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளதாம். இதன் உயரம் சரியாக அளவிடப்பட வேண்டியுள்ளது. 1925 இல் விமானமார்க்கமாகச் சென்ற ஓர் இராணுவ வீரரும் இச்சிகரம்பற்றி கூறியிருந்தாராம். அவ்வீரர் காலமானபடியால் உயரத்தை அளவீடு செய்தல் நிறைவேறவில்லையாம்.

(ஆதாரம்: சுரேஷ் கோப்பிரா என்பவர் 'இந்துஸ்தான் டைம்ஸ்' இதழில் எழுதிய கட்டுரை.)

போர்வீரனின் உடலில் பாய்ந்த அம்பு

# புதிய மருத்துவசகாப்தத்தின் ஆரம்பம்

எங்கும் நிறைந்த, உலகளாவிய யின் (YIN), யாங் (YANG) என்பனவற்றின் அடிப்படையில் அண்டத்திற்கு விளக்கமளிக்க முற்படும் சீன சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டவையே பாரம்பரிய மருத்துவத்தின் கோட்பாடுகளும் ஆகும். இந்தச் சித்தாந்தத்தின்படி, அண்டத்தில் எப்போதும் இசைவான சக்திகளுக்கும் முரணுன சக்திகளுக்கும் இடையே தொடர்ச்சியான போராட்டம் இருந்து வருகிறது. மனிதன் அண்டத்தின் ஒரு அங்கமாக இருந்து வருவதால், அண்டத்தின்மீது செயற்படுகின்ற சகல நியதிகளும் மனிதனுக்கும் பொருந்தும். அவனது உடல் நலமும் இந்தச் சக்திகளுக்கு இடையிலான ஏற்றத் தாழ்வுகளைப் பொறுத்தே நிர்ணயிக்கப்படுகிறது. அடிப்படையில், உடல் நலத்திற்கும் பிணிக்கும் இடையிலான ஒரு சீர்த் திடநிலை (HOMEOS ASIS) அல்லது ஒழுங்காக்கும் கோட்பாடே இது. உடல்நலம் மிக்க நிலையில் உடலில் யின் - யாங் இரண்டும் சம நிலையில் உள்ளன. இவ்வேளைகளில் உடலின் கால்வாய்களுக்கூடாகப் பாய்கின்ற (சீன மொழியில் 'சீ' என்று அழைக்கப்படுகின்ற) உயிராதார சக்தி (VITAL ENERGY) இயல்பான நிலையில் உள்ளது. யின் அல்லது யாங் தமது இயல்பான அளவுகளைவிடக் கூடி அல்லது குறைந்தால், இந்த உயிராதார சக்தியின்சம நிலையும் சீர் குலைந்து, அதன் விளைவாக பிணி ஏற்படுகிறது.

''ஹூவாங் டீ நேய்ஜிங்'' நூலின் இரண்டாம் பாகமான ''லிங் ஷூ'' உடலிலுள்ள அக்குபங்ச்சர் கால்வாய்கள், புள்ளிகள்பற்றி பெருமளவில் குறிப்பிடுகிறது, அக்குபங்ச்சர் மூலம் குணமாக்கக் கூடிய நோய்களைப்பற்றியும், ஊசித் துளையீடு செய்யக்கூடிய பல்வேறு முறைகளைப்பற்றியும் இது விரிவாக வர்ணிக்கிறது.

சீனுவில் அக்குபங்ச்சர் முறை 5000 ஆண்டுகளுக்குமேல் பின்பற்றப்பட்டு வந்தமைக்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. ஆரம்ப காலங்களில் கல்லிலிருந்து செதுக்கப்பட்ட ஊசிகளே பாவிக்கப்பட்டுவந்தன. காலஞ் செல்லச் செல்ல, எலும்பு, மூங்கில் என்பனவற்றிலிருந்தும் ஊசிகள் செய்யப்படலாயின. ''ஹூவாங் டீ நேய்ஜிங்'' தொகுக்கப்பட்ட காலத்தில் உலோகத்திலான ஊசிகள் பாவிப்பிற்கு வந்துவிட்டன.

### வினை - விளைவு உறவு

அக்குபங்ச்சர் சிகிச்சைமுறை கண்டுபிடிக்கப்பட்டது எப்படி என்பதுபற்றி சுவையான ஒரு கதை சொல்லப்படுகிறது. ஒரு போர் வீரனின் உடலில் பாய்ந்த அம்பினை அகற்றிய பிற்பாடு, அவனது அம்படிபட்ட காயம் ஆறியதோடுமட்டுமல்லாது, அவனது உடலின் பிறிதொரு பகுதியில் இருந்த-காயத்தோடு எதுவித தொடர்புமே இல்லாத - நீண்ட நாளைய நோய் ஒன்றும் குணமானது கண்டுபிடிக்கப்பட்டதாம்

இது ஒரு புனை கதையாக இருக்கக்கூடும். ஆனுல், வருடாதிவருட காலமாக, கூர் நோக்குடைய மருத்துவர்கள், ஊசித் துளையீடு செய்த புள்ளிக்கும் அது குணப்படுத்திய நோய்க்கும் இடையே ஒரு ''வினை-விளைவு உறவை'' வரையறுத்து வந்துள்ளனர் என்பது துலாம்பரமாகத் தெரிகிறது. இவ்வாருகத் கண்டு பிடிக்கப்பட்ட புள்ளிகளின் தொகுதி விவரவிளக்கப் படங்களாக உருவாக்கப்பட்டன. துளையீட்டின் அளவோ ஆழமோ முக்கியமல்ல, அக்குபங்ச்சர்புள்ளியின் இருப்பிடத்தை மிகச்சரியாகக் கணித்து, அவ்விடத்தில் துளையீடு செய்வதே முக்கியம் என்பதும் அனுபவரீதியாக உணரப்பட்டிருக்கலாம். ஒத்த பிணி போக்கும் பண்புகளை உடைய புள்ளிகளை ஒன்றோடு ஒன்று இணைப்பதன் மூலம் கால்வாய்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

**டாக்டர் க. இந்திரகுமார்**
சர்வதேச லேசர் சிகிச்சை சங்கத்தின் நண்பர்
சர்வதேச காந்த சிகிச்சை சங்கத்தின் நண்பர்

19ம் நூற்றுண்டு வரைக்கும் பாரம்பரிய மருத்துவம் சீன மக்களுக்கு சீரிய சேவை ஆற்றியது. 1839 முதல் 1842 வரை நடைபெற்ற முதலாவது ஒபியம் யுத்தத்தை அடுத்து பிரிட்டிஷார் சீனு வந்தபோது, மேற்கத்தியமருத்துவ முறைகளும் முதன் முதலாக சீனுவிற்கு வந்தன.

ஒரு யுத்தத்தை அடுத்து மேற்கத்தியமருத்துவ முறை சீனுவிற்கு வந்ததாலோ என்னவோ, மக்கள் அதனை ஒரு வித அவநம்பிக்கையுடன் அணுக ஆரம்பித்தனர். சக்கரவர்த்திகளின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின், 1911ல் ஜனுதிபதி சன்- யட்-ஸென் தலைமையில் ஒரு புதிய குடியரசு நிறுவப்பட்டது - நீடித்த உள்நாட்டு யுத்தத்தைத் தொடர்ந்து, 1927ல் குவோமின்தாங் கட்சியின் தலைவரான சியாங்கைஷேக் நாட்டின் ஜனுதிபதியாகப் பதவியேற்ருர். குவோமின்தாங் கட்சியினருக்கு பாரம்பரிய மருத்துவத்தில் அவ்வளவு நம்பிக்கை இருக்கவில்லை. அதனை விஞ்ஞானரீதியற்ற ஒரு மோசடி மருத்துவம் என்று அவர்கள் நிராகரித்தனர் - பாரம்பரிய மருத்துவத்தைத் தடைசெய்யச் சட்டமியற்ற சியாங்கைஷேக் முன்வந்தபோதிலும், மக்களின் தீவிர எதிர்ப்பினை அடுத்து இம் முயற்சியைக் கைவிட வேண்டிவந்தது.

**அக்குபங்ச்சர் அன்றும் இன்றும் 2**

### மரபுவழிச் செல்வங்கள் பேணிப் பாதுகாப்பு

1949ல் சியாங்கைஷேக்கின் அரசு கவிழ்க்கப்பட்டதை அடுத்து, மாவோஸே துங்கின் மக்கள் குடியரசு நிறுவப்பட்

(12ம் பக்கம் பார்க்க)

## எழுதுவதற்கு வார்த்தைகள் வராதபோது...

உலகப் பெரு எழுத்தாளர் பெர்ஞட்ஷா எழுதுவதற்கு வார்த்தைகள் வராவிட்டால் ஓடிப்போய் பஸ்ஸில் தொற்றிக் கொள்வார்.

பிரெஞ்சு எழுத்தாளர் அலெக்சாண்டர்மெல் எழுதுவதற்கு வார்த்தைகள் வராவிட்டால் நீலப் பேனுவையும் பச்சைத் தாளையும் எடுத்துக் கொள்வார்.

எமிலேஸ் லோரன் என்ற எழுத்தாளருக்கு வார்த்தைகள் வராவிட்டால் இருட்டறையில் போய் ஒளிந்து கொள்வார்.

எஸ். கே. துரை



பிரயாணச் சீட்டுக்களை
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

# ஒரு டெலிபோன் உருவாகிறது

நாளாந்த வாழ்வில் தொலைபேசி முக்கிய இடத்தை பெற்று வருகின்றது, செய்திப் பரிவர்த்தனையில் முதன்மை பெறுவது தொலைபேசி. 1847ம் ஆண்டுமுதல் தொலைபேசி பாவனையிலுள்ளது. அலெக்ஸாண்டர் கிராம்பெல் முதல்முதலில் தொலைபேசியை அறிமுகம் செய்தார். 1876ம் ஆண்டு பாவனைக்கு வந்த தொலைபேசியை ஏளனம் செய்த மக்கள் பிரேசில் இளவரசர், 'இது பேசும் கருவி' யென அறிவித்ததைத் தொடர்ந்து பிரபல்யம் பெற்றது. அன்றுமுதல் இன்றுவரை எல்லோர்க்கும் என்மீது கொள்ளை ஆசை.

அன்பை வளர்ப்பதற்கு அலுவல்களைக் கவனிப்பதற்கு செய்தியை அறிவிப்பதற்கும் ஏன் எல்லா விடயங்களுக்கும் தொலைபேசி உதவுகின்றது. இன்று நொடிப்பொழுதில் தொலைபேசியினுள் யாருடனும் தொடர்பு கொண்டுவிடலாம் என்றே கூறலாம்.

உலகநாடுகளில் தொலைபேசிப் பரிவர்த்தனையில் அமெரிக்கா முதன்மை பெற்றுள்ளது. லண்டனில் அமைக்கப்பட்டுள்ள நுண்அலை கோபுரம் உலகிலேயே சிறந்தது. இக்கோபுரத்தின் உதவியால், 105 நாடுகளுக்கு தொலைபேசி தொடர்புகளுண்டு. இதன் மூலம் 17,000,000 தொலைபேசி பரிவர்த்தனைகள் செயல்படுகின்றன. வருடத்துக்கு 20,000,000,000 தொலைபேசி தகவல் தொடர்புகளை இது நிறைவேற்றி வருகின்றது. இக்கோபுரம் 620 அடி உயரமுள்ளது. இதுமட்டுமல்லாமல் 50 தொலைக்காட்சி நிலையங்களுடனும் இணைந்து செயல்படுகின்றது.

வளர்முக நாடுகளில் தொலைபேசி சேவைகள், நேரத்தை அறிவிப்பதற்கு, காலைமாற்றத்தைத் தெரிவிப்பதற்குப் படுக்கையறை கதை சொல்வதற்கு விளையாட்டுச் செய்திகளைத் தெரிவிப்பதற்கு வீட்டுப்பாவனைப் பொருட்களைக் கொடுத்துதவுதற்குக் குறிப்பிட்ட எண்ணைச் சுழற்றியதும் செயல்படுகின்றன.

தெலைபேசிக்குக் குறியீட்டு அகராதியென்றும் உள்ளது. இது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

A- Alfred, B- Benjamin,
C- Charlie, D- David,
E- Edward, F- Erederick,
G- George,- H Harry,
I- Isaad, J- Jack, K- King,
L- London, M- Marry,
N- Nellie, O- Oliver.
P- Peter, Q- Queen,
R- Robert, S- Samuel
T- Tommy, U- Uncle
V- Victor, W- William.
X- Xray, Y- Yellow
Z- Zebra.

இதன்மூலம் செய்தியனுப்புகின்றனர்.

செல்வி மீரா கனகசபாபதி

## நன்றி மறவாத இடையன்

இங்கிலாந்தில் ஓர் ஆற்றங்கரையில் ஆடுகள் மேய்த்துக் கொண்டிருந்தான் ஒரு சிறுவன். அவன் சில நிமிட நேரம் ஆற்றில் கல்லெறிந்து விளையாடினன். விளையாடிய போது ஆற்றில் விழுந்துதுன்பப்பட்டான்.

அந்தநேரம் அவ்வழியாலே சென்ற போர்வீரன் ஒருவன், ஆற்றிற் குதித்து அச்சிறுவனைக் காப்பற்றினன். சிறுவன் நன்றி கூறிவிட்டுத் தனக்கு உதவி செய்தவரின் பெயர், இருப்பிடம் எல்லாம் அறிந்துகொண்டான். வருடங்கள் கழிந்தன.

பல வருடங்களின் பின் பிரித்தானிய நாட்டின் புகழ் பெற்ற வின்சன் சேர்ச்சில் என்ற பிரதமமந்திரியார் நோயுற்றுப் படுக்கையிற்கிடந்தார். அவரைப் பார்ப்பதற்குப் புகழ் பெற்றவைத்திய நிபுணர் ஒருவர்வந்தார்

வைத்தியர் நோயாளியை வணங்கி, ''ஐயா உங்களுக்கு நான் புதியதொரு ஊசிமருந்து பாய்ச்சப்போகிறேன். இதனல் உங்கள் நோய் குணமடைவது நிச்சயம். இதனை நான் அண்மையிற் கண்டுபிடித்தேன்'' என்றார். சேர்ச்சில் பூரண குணமடைந்தார். வைத்தியரிடம் அவருடைய மருந்துச் செலவு எவ்வளவு என்று கேட்டார். ''பணமா? தாங்கள் என்னை ஆற்ருேட்டத்திலிருந்து காத்து வாழவைத்தீர்களே! என்பெயர் அலெச்சாண்டர் பிளமிங்'' என்ருர்.

நன்றி: 'மில்க்வைற்'




## திருவுடைத் தீபச்சோதி

வெளியதனில் தீபத்தின் சாயல் காட்டி
வியப்புடைய இறைவன்றன் நாமம் போற்றும்
ஒளியதனை உள்ளமதில் உணர வைத்தார்
உயர்வுடைய ஞானமதும் தீபச் சோதி
அளியினெடு அறம்மிகுந்த செய்கை தானே
அணியுலகை வாழ்விக்கும் அரிய சோதி
தெளிவுடைய மனத்தினேர் அறிவிற் சேரும்
திருவுடை மங்களமாம் சோதி தானே

வ. குகசர்மா

## கார்த்திகைப் பேரொளியே!

கார்த்திகைப் பேரொளி எம்
கவலையைத் தீருமையே
வார்த்தையில் சொல்ல வொண்ணு
வருத்தங்கள் வாட்டுதையே
கீர்த்திமிகப் பெரியாய்
கிழக்கினில் ஞாயிறெப்பாய்
சீர்த்தியும் சிறப்பு மெல்லாம்
சிதைந்து நாம் வாடுகின்றோம்
நேர்த்தியாய் வாழ்வதற்கோர்
நிலையின்றித் தவிக்கின்றோம் நாம்
கார்த்திகைப் பேரொளி எம்
கவலையைத் தீர்த்தருளே.

முருக. வே. பரமநாதன்

## எவ். எக்ஸ். ஸி.

(8- பக்கத் தொடர்ச்சி)

யுளில் வரும் 'சாரீர வீணை' செய்தி சுவாரஸ்யமானது. சாரீர வீணை என்பது 'சாரீரவீனே' என்றுதான் இருத்தல்வேண்டும் என்பதனை ஆசிரியர் தக்க சான்றுகள் காட்டித் தருக்கரீதியாக நிறுவியிருப்பது அவர்தம் விவேகத்துடிப்பை எடுத்துக் காட்டுகின்றது. இதுவும் இப்பகுதியில் இடம்பெறும் ஏனையவும் ஆசிரியரின் ஆக்கத் திறனுக்கு அத்தாட்சியாகின்றன.

இவ்வகையில் இந்நூலாசிரியர் பண்டை ஆசிரியர்களின் திறனய்வியற்கை இருந்தவாற்றைத் தெரித்துக்காட்டுதற்கு மேலாகத் தமது சொந்தத் திறனய்வு நலம் இருந்தவாற்றையும் இந்நூலால் இனிது விளக்கியுள்ளார். ஆர்வமுள்ளோர், தாம்தாமும் இத்தகைய திறனய்வில் தலைப்பட்டுத் தமிழின்பஞ்செழிக்கச் செய்வதற்கு இந்நூல் நல்ல முன்மாதிரியாகத் திகழுமென்பது ஒருசிறிதும் மிகையாகாது.

## போர்வீரனின்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

டது. அவர்கள் பதவிக்கு வந்ததை அடுத்து, 1950ல் நடைபெற்ற முதலாவது உடல் நலவியல் மகாநாட்டில், பாரம்பரிய சிகிச்சை முறைகளை உள்ளடக்கிய, புதிய மருத்துவக் கோட்பாடுகள் பிரகடனப் படுத்தப்பட்டன. தேசிய மரபுவழிச் செல்வங்கள் பேணிப்பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற அரசின்கொள்கை இதற்கு ஒரு காரணமாகும். அன்று சீனவில் நிலவிய மருத்துவர்கள் தட்டுப்பாடு, மருத்துவ வசதிகள் போதாமை போன்ற நிலைகளை சமாளிப்பதற்கு வேறு வழிகள் இன்மையால், செயல்முறைசார்ந்த ஒரு வழி இது என்ற ரீதியிலும் இக்கொள்கை அமுல் செய்யப்பட்டிருக்கலாம். அன்றைய சீனவின் 65 கோடி மக்களுக்கு சேவை செய்ய மேற்கத்திய மருத்துவத்தில் தகைமை பெற்றோர் 10,000 பேர் மட்டுமே இருந்தனர். இந்தப் பற்ருக்குறையைச் சமாளிக்க பொதுச்சுகாதார சேவையினுள் பாரம்பரியமருத்துவத் தொழில் புரிந்தோர் ஐந்து இலட்சம்பேர் அனுமதிக்கப்பட்டனர்.

## குயில் மாமி!

கவிஞர் வே. குமாரசாமி

மாமி குயில் மாமி
மாந்தளிரைக் கோத மாமி குயில் மாமி
மாமரத்தில் வா நீ

புள்ளிக் குயில்மாமி
புதிய பாட்டுப் பாடு
பிள்ளை எல்லாம்
கூவப் பின் தொடர்ந்து கூவு

கூ கூ எனக்
கூவிக் கூப்பிடுவதாரை?
கூ கூ
என நாங்கள்
கூவக் கூவும் மாமி

கரிய குயில் மாமி
காதினிக்கக் கூவு
கருமைக் குயில் மாமி உன்
கண்சிவந்த தென்ன?

மக்கள் சொல்வதைக் கேளுங்கள்....



"பெயார் பிரான்ட்
குடும்பத் தேவைகள்
அனைத்திற்கும் உகந்தது...
உங்கள் பணத்திற்கு
ஒப்பற்ற பெறுமதி தருவது.
குடும்பத்திலுள்ள
அனைவருக்கும் சத்துமிக்க
பசுப்பாலை வழங்க
நான் தேடி வாங்குவது
பெயார் பிரான்ட்"




400 கிராம் ரூ. 20.80
250 கிராம் ரூ. 14.50
பெயார் பிரான்ட்
ஆடைநீக்காத பால் மா
Grant K & E 5135

# இவ்வாரம் எப்படி?

## மேஷம்

களவுக்கிடமுண்டு. கவனம் வேண்டும் தனிவழிப்பயணம் தவிர்க்கின் நன்று. பொறுமை நன்மை தரும். புதினமான வரவு புன்னகை தரும். இருப்பிட மாற்றம் திருப்தியைத் தரும். பெரியோர் உறவு பெருமை தரும். தொழில்விடயம் சிறக்கும்.

## ரிஷபம்

பிள்ளைகள் தொல்லை கவலையைத் தரும். பிறருடன்பகைத்துக் கொள்ளவும் நேரிடும். குடும்பத்திலும் சிறிய பூசல் வீசும். வெளியிடத் தொடர்புகளில் அமைதி வேண்டும். உள்ளப்படுதாவில் உவகைக் கூத்து.

## மிதுனம்

பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர். குடும்பத்தில் சுப கருமங்கள் இடம்பெறும் கைத்தொழில் புரிவோர் விடயத்தில் நல்லதொரு வருவாயுண்டு எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும் பணம் பல வழிகளிலும் செலவாகும் உமது நடவடிக்கைகளை எதிரிகள் வேவு பார்ப்பர்.

## கடகம்

சுற்றுடலில் உங்கள் செல்வாக்கு வளரும். வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் அதிக கவனம் செலுத்துவீர் ஆத்திரப்படுவதன்மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழப்பர் செல்வாக்குப் பாதிக்கப்படலாம் அவதானம் நன்று.

## சிம்மம்

எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படும் சிலர் வாழ்க்கையில் கடன்தொல்லை அதிகரிக்கும் பிரிவின் தாக்குதல் வேதனையைத் தரும் தொழில் துறையில் பின்தங்க நேரிடும் முத்தான சந்திப்பொன்று கிடைக்கும் முதியவர் ஒருவரின் ஆதரவும்உண்டு

## கன்னி

பிள்ளைப்பாசம் உள்ளத்தில் தலைதூக்கும் சமயோசித நடவடிக்கையின்மூலம் எதையும் வெற்றி காண முடியும். கருடப் பார்வை உங்களை வட்டமிடும் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவர் வெற்றி உமக்கு விரைந்துவரும்.

## துலாம்

குடும்பத்தில் சிறு பிணி தலைதூக்கும் கடமையில் அதிக கவனம் செலுத்தவும் வாகனச் சாரதிகள் அதிக கவனம் மக்கள் மகிழ்ச்சி திருப்தியைத் தரும் தாய்வழி மூலம் தனலாபமும் உண்டு அறிஞர்களின் தொடர்பும் கிட்டும்.

## விருச்சிகம்

காதலர்களுக்குக் கனிவான வாரம் சிலரின் திருமணங்களும் ஈடேறலாம் தூரதேச வாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தலாம் விபத்துக்களுக்கும் இடமுண்டு தெளிந்த மனம் தெய்வ சிந்தை தேடியது கிடைக்கும் அமைதியுடன் ஆனந்த வாழ்வுமுண்டு.

## தனுசு

கெட்டபெயர் கிட்டவுண்டு

(14ம் பக்கம் பார்க்க)

திருமதி.க.வேலுப்பிள்ளை


## நவீன உல்லாச குடிசைகள்

### எல்லாம் உங்களுக்காகவே

நீலக்கடல் ஓரத்திலே டாம்பீகமுறையில் உங்கள் உள்ளத்திற்கு உவகை தரும் வகையில் உருவாக்கப்பட்ட புதுமையான அனுபவத்தையும் தருவது ஹாபர் வியூ ஹோட்டலேயாகும்.

- 60 ROOMS BUILT CHALET STYLE WITH A/C OR FANS WITH ALL MODERN AMENITIES.
  60 அறைகள் உப்பரிகை விதமாக கட்டப்பட்டவை குளிரூட்டப்பட்ட அல்லது மின்விசிறிகள் பொருத்தப்பட்ட எல்லாவித வசதிகளுடன் நிறைந்ததாய் அமையப்பெற்றது.
- VAST BANQUET HALL FOR WEDDINGS RECEPTIONS AND OTHER FUNCTIONS.
  கலியாணம், விருந்துபசாரம் அல்லது பொதுக்கூடல் நிகழ்ச்சியினைக் கொண்டாட வசதியாய் அமைந்த களியாட்டு மண்டபமுண்டு.
- THE MAIN RESTAURANT SERVES SOME OF THE FINEST FOOD YOU'VE EVER TASTED.
  பிரதான சிற்றுண்டிச் சாலையில் எப்பொழுதும் பெற்றிராத இன்சுவைப் பதார்த்தங்களை பரிமாறிக்கொள்ளலாம்.
- TWO WELL STOCKED BARS WITH YOUR FAVOURITE DRINKS.
  நீங்கள் நன்றே நயக்கும் நல்லினப் பானங்களை என்றும் குறையாது வழங்கும் இரு மதுபான சாலைகளுண்டு.
- EVERY SATURDAY NIGHT DISCOTHEQUE—NO COVER CHARGE.
  ஒவ்வொரு சனிக்கிழமையும் ''டிஸ்கோ'' நடனவிருந்து - பிரவேசம் இலவசம்.
- SOON BOAT RIDES FROM PRIVATE HOTEL PIER.
  மிகு விரைவில் எமது ஹோட்டலின் பிரத்தியேக இறங்குதுறையிலிருந்து படகுச் சவாரிகள்.

A/c Room - Rs. 250/- per Double

FOR SRI LANKANS AND FOREIGN RESIDENTS IN SRI LANKA

RESERVATIONS—

**Harbour View Hotel**

Keerimalai Road, Kankesanturai, Sri Lanka.

Telegrams : ANCHOR Kankesanturai. Telephone ; 22605 Jaffna

Another Hotel Managed By : AITKEN SPENCE AND CO., LTD.
Lloyds Building, Sir Baron Jayatilaka Mawatha,
COLOMBO - 1. Tel : 27861 - 8, 547161.

வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூங்கா உல்லாச பயணிகள் ஹோட்டல்

காங்கேசன்துறை

**ஹாபர் வியூ ஹோட்டல்**

THE ONE AND ONLY GARDEN RESORT HOTEL IN THE NORTH


# வாசகர் பேனுவிலிருந்து

(3ம் பக்கத் தொடர்ச்சி)

### ஏ. ரி. பொன்னுத்துரை

வாரமலர் கண்டேன்; இதழ் கடையில் புன்முறுவல்; உள்ளத்தில் ஒரு துள்ளல். கண் இழந்தான் பெற்றல்' போன்ற புளகிப்பு. அனைத்து அம்சங்களிலும் ஏதோ ஒரு ஈர்ப்புண்டு.

'அரங்கம்' நிகழ்வுகள் விமர்சனங்கள் மாதம் இருமுறையாவது வருவது நல்லது.

### தமிழ்ப்பிரியா

ஓ! இன்னமும் அந்தப் பரவசம் நெஞ்சை நிறைத்துக் கொண்டுதானிருக்கிறது. 6-11-83-ல் மீண்டும் மலர்ந்து மணம் பரப்ப ஆரம்பித்திருக்கிற 'ஈழநாடு வாரமலர்' தந்த மகிழ்வைத்தான் சொல்கிறேன். 31-5-81-ல் கடைசியாகத் தரிசனம் தந்த 'ஈழநாடு' வாரமலர் .....நீண்ட இடைவெளியில்-வாசகர்களின் ஆவலைத் தூண்டித் தூண்டித் தணித்துவிட்டு - 2 வருடம் 5 மாதம் 5 நாட்களை நகர்த்திவிட்டு - மீண்டும் தரிசனம் தந்திருப்பதைப் பார்த்ததும் உண்மையில் மனம் ஒரு நிமிஷம் ஆனந்த நர்த்தனமே ஆடியது. தொடர்ந்தும் வாரமலரின் மணத்தை நுகரக் காத்திருக்கின்ருேம். வாழ்த்துக்கள் தமிழ்ப்பிரியா.

### எஸ். திருச்செல்வம்

இரண்டரை ஆண்டு இடைவெளிக்குப் பின்னர், மீண்டும் புதுப் பொலிவுடன் வெளியான 'ஈழநாடு' வாரமலரைப் பார்த்தும், படித்தும் மகிழ்ச்சியடைந்தேன். சிறுகதை, கட்டுரை, கவிதை, தொடர் கதை என்பன சித்திரங்களுடன் மலர் வெளிவந்துள்ளது சிறப்புக்குரியது. எனினும் சிறு சிறு சம்பவங்களின் தொகுப்பு (கலம்-பத்தி எழுத்துகள்) அதிகமாக இருப்பது நல்லதல்ல. மேலும் பல இலக்கிய விடயங்கள் கட்டுரைகளாக இடம்பெறவேண்டும்.

பத்தாண்டு விழாவில் பல இலக்கியப் போட்டிகளை நடத்திய 'ஈழநாடு' வெள்ளி விழா ஆண்டில், வாரமலர் வெளியீட்டுடன் ஒட்டி இலக்கியப் போட்டிகளை நடத்தக்கூடாதா?

செயலாளர்,
'கலை இலக்கிய பத்திரிகை- நண்பர்கள்',
கொழும்பு.

### யாழூர்துரை

மூன்ருண்டு இடைவெளியின் பின்னர் 'ஈழநாடு' வாரமலர் தமிழர் கரங்களில் மலர்ந்து மணம் வீசிய மாண்பினைக் கண்டோம். மற்றைய பத்திரிகைகளை மிஞ்சுமளவிற்கு விடயதானங்களுடன் வண்ண மலராக வெளியிடப்பட்டிருந்தது, மனமாரப் பாராட்டுகிருேம்.

சமூகத்தில் தங்களைத் தாங்களே பிரதிநிதிகளாக நினைத்துச் செயல்படுபவர்களின் கட்டுரைகளைப் பிரசுரித்து வாசகர்களுக்குப் புரியாமல் திணறவைக்கும் கைங்கரியத்தை தாங்கள் அறவே ஒதுக்கவேண்டும். இன்று சமகால சம்பவங்களை ஒட்டிய கவிதை, கட்டுரை, கதை, பிற துணுக்குகள், அடிமட்ட மனித வர்க்கத்தின் அன்ருட வாழ்க்கைச் சூழ்நிலை இப்படியான விடயங்களே மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற்றுக்கொண்டு வருகின்றன. வாழ்க தங்கள் பணி.

### நாலியூர் - நாவுக்கரசன்

## வாரமலர் வாழ்க

எல்லார் நாடும் வார மலர் எங்கும் பூத்துப் பொலிகிறது!
நல்லார் பலரின் கருத்தையெலாம் ஞாயிறில் சுமந்துவருகிறது
பல்லார் அறியச் செந்தமிழில் பல்சுவை, கவிதை, கட்டுரைகள்!
இல்லம் தோறும் எடுத்துவரும் 'ஈழநாடு' மலர் வாழ்க.

# சிறு கதை

5ம் பக்கத் தொடர்ச்சி

நிறைவுறுகின்றது. நாளை பாரதியார் நூல்கள்பற்றிய ஆராய்ச்சி தொடரும்... வணக்கம்.''

ஒருமித்த கைதட்டல்கள். இவற்றுடன் அந்த அழுகுரல்கள் சங்கமிக்கின்றன.

இப்பொழுது காய்ந்த சருகு ஒலி மிகைப்படக் கேட்டது. ஊனமுற்ற இருவரும் நினைவிழந்த உடலைச் சுமந்து வந்தனர். பாரதி விழாவிற்கு ஒட்டிய சுவரொட்டியைக் கிழித்து கீழே போட்டனர். கண்ணப்பனுக்கு அருகில் அவளைக் கிடத்திஞர்கள்.

'இனி ஒரு விதி செய்வோம்-நாடகம்' மூடி மறைக்கப்பட்டது.

கூட்டம் முடிவடைந்து புற்றீசல்கள்போல மக்கள் வெள்ளம் வெளியேறியது. கைராசி அறிவும் தெளிவும் பெற்ற அக்கூட்டத்தினிடையே நெளிந்து சுழியோடி ஒருவாறு கார் ஒன்று வருவதைக் கண்டான். ஒரே ஒரு கையால் அதனை மறித்து, அதற்குள்ளிருந்த சொற்பொழிவாளரிடம் மன்ருடினுன், சொற்பொழிவாளர் சிரித்தார்.

ஐயாவுக்கு இன்னும் நாலு கூட்டம் இருக்குதுங்க... வேறை... சொற்பொழிவாளருக்குக் காற்று வீசிக் கொண்டிருந்தவர் கூறிஞர். 'விர்' எனக் கிளம்பியது ஞானம் பெற்ற கார். 'படீர்' என்று கண்ணுடி நொறுங்கிய சத்தம். குனிந்து கல்லொன்றை எடுத்துக் கார் மீது எறிந்துவிட்டுத் திரும்பி ஓடினுன் கைராசி.

''இப்ப என்ன கண்ணு செய்கிறது. ஆசுப்பத்திரிக்குப் போகவேணும்... சரவணன் உன்னட்டை ஏதாவது...''

சரவணனின் காற்சட்டைப்பை கிழிந்து உரித்தகோழி போலத்தொங்கியது.

''கண்ணு உன்னட்டை...''

''என்ரை காசுப்போணியை யாரோ விழாவுக்குக் காட்டிறதுக்காகத் தூக்கிக் கொண்டு போய்விட்டாங்க'' - காசுடன் பேணியையும் இழந்ததையிட்டு அவனுக்குப் பெருந்துக்கம்.

''என்னட்டைப் பத்தொன்பது சதமிருக்கு...'' - இது சரவணன்.

இருபத்தைந்து சதத்திற்கு ஒரு போர் நிகழுகையில்...

''உங்கைபாரடா' இண்டைக்கு விசர்ப்பொன்னி... கண்ணப்பனுக்குப் பக்கத்திலை படுத்திருக்கிருளடா...'

இரண்டு பேர் - உலகம் புரிந்தவர்கள் சொல்ல - விசிலடி தொடர்ந்தது.

[யாவும்கற்பனை]

# வளைகுடா: 250,000 பேரை இரையெடுத்த யுத்தம் இன்னும் தொடர்கிறது!

வளைகுடாயுத்தத்தை நிறுத்துமாறு ஐ. நா. விடுத்தகோரிக்கையை ஈரான் நிராகரித்ததைத் தொடர்ந்து, ஏற்கனவே இருதரப்பிலிருந்தும் 250.000 உயிர்களை இரையெடுத்த மூன்றாண்டு கால ஈராக்-ஈரானியயுத்தம் இப்போதைக்கு முடிவுறும் சாத்தியப்பாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

இரு வாரங்களுக்கு முன்னர்தான் தொடுத்த கர்ணகடூரமான தாக்குதல்களின்போது கணிசமான அளவு ஈரானியப் பிரதேசங்களைப்பற்றிக் கொள்ளுவதில் ஈராக் வெற்றி பெற்றது. ஆனாலும், ஈராக்கை 'மெதுவாக ரத்தஞ்சிந்தவைக்கும்' ஈரானின் போர்த்தந்திரம் ஈராக்கின் படைபலத்தை 'உறிஞ்சிக்' கொள்ளுவதில் வெற்றி பெறவே செய்திருக்கிறது என்பதும் உண்மையே.

ஆயத்துல்லா கொமெய்னியின் தீவிர இஸ்லாமியப் புரட்சியலை தமது நாடுகளையும் தழுவிக் கொள்ளுவதைத் தவிர்க்கின்ற ஒரே நோக்குடன் ஈராக்கின் யுத்த முஸ்தீபுகளுக்கு வளைகுடா நாடுகள் செய்து வந்த உதவிகளை அரைப்பங்கால் வெட்டியுள்ளன. கடந்தஆண்டு ஈராக்கின் எண்ணை மத்தியதரைக்கடற் பிரதேசத்துக்குச் செல்லும் பிரதான எண்ணெய்க்குழாய் வரிசைக்குச் சிரியா பூட்டுப் போட்டது. இன்று ஈராக்கின் எண்ணெய் ஏற்றுமதி துருக்கி வாயிலாக மத்தியதரைக் கடற் பிரதேசத்துக்குச் செல்லுகின்ற ஒரே ஒரு மார்கத்தில் தான் தங்கியுள்ளது.

தனது மனிதவளத்தையும், நிதிவளத்தையும் நாள்தோறும் 'கரைத்துக்' கொள்ள வேண்டியுள்ள ஒரு சூழலில், கூடிய விரைவில் யுத்தத்தை முடிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஈராக்கிற்கு ஏற்பட்டுள்ளது. ஈரானின் தேசிய வருவாய்க்குப் பிரதான ஆதாரமாயுள்ள எண்ணைத்தாங்கிகள் மீதும் தொழிலகங்கள் மீதும் 'மரண அடி' ஒன்றினை தொடுப்பதன் மூலமே ஈரானையுத் தழுனையில் பணியவைக்கலாம் என பாக்தாத்திட்டமிடுகிறது. அது இத்திட்டத்தைப் பகிரங்கமாகவும் வெளியிட்டுள்ளது. வளைகுடாவிலிருந்து வருகின்ற எண்ணையில் பெரிதும் தங்கியிருக்கும் மேற்குலகில் ஈராக்கின் இந்த முஸ்தீபு பெரும் பீதியை உண்டு பண்ணியுள்ளது. ஈராக்கின் இத்தகைய முஸ்தீபுகளை மேற்கு நாடுகள், குறிப்பாக, அமெரிக்கா சகித்துக்கொண்டிருக்குமா?

## உலக அரங்கு

பெரி. சன்

இதே வேளை ஈராக்கிற்கு பிரான்ஸ் சுப்பர் எட்டென்டர்ட் போர் விமானங்களை வழங்க இணங்கியிருப்பது ஈராக்கின் இப்புதியதாக்குதல் முஸ்தீபுகளுக்கு ஊக்கமளிப்பதாகவும் இருக்கின்றது. ஈராக்கின் இவ்வாறான நடவடிக்கைகளுக்குப் பதிலடியாக ஹோர்மஸ் நீரிணைவாயிலான போக்குவரத்தைத் தடைசெய்யப் போவதாக ஈரான் எச்சரித்துள்ளது. மேற்குலகிலுக்கான எண்ணை சப்ளைகளில் 20 சதவிதமானவை இந்நீரிணை வாயிலாகவே செல்கின்றன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. தனது எண்ணை ஏற்றுமதிக்கு ஈரான் தடங்கல்களை ஏற்படுத்துகின்ற பட்சத்தில் ஹோர்ஸ் தீவிலுள்ள எண்ணெய் கேத்திரத்தை அழித்துவிடப் போவதாகவும் ஈராக் பயமுறுத்தியுள்ளது. இந் நிலையில் வளைகுடாயுத்தம் புதிய பரிமாணங்களைப் பெறும் அபாயம் உருவாகியுள்ளது.

ஈராக்கிற்குப் புதிய போர் விமானங்களை வழங்குவதில் தாமதத்தைக் கடைப்பிடிக்குமாறு பிரான்ஸிடம் அதன் மேற்குலக நேச நாடுகள் வலியுறுத்தியுள்ளன. இதே வேளையில். வளைகுடாப் பிரதேசத்தில் ஒரு யுத்தசூன்ய மண்டலத்தை உருவாக்குவது பற்றிய ஆலோசனையை அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் கூட்டாக முன்வைத்துள்ளன. பிரான்ஸின் முன் முயற்சியின் பேரில் உருவான இந்த ஆலோசனையை தெஹிரானும் பாக்தாத்தும் எவ்வளவு தூரத்துக்குச் செவிமடுக்கும் என்பது தெரியாது.

ஸதாம் ஹூஸெய்னுக்கும் கொமெய்னிக்கு மிடையிலான 'கௌரவப் பிரச்னை'யாக மாறியுள்ள இந்த நீடித்த யுத்தம், பரஸ்பரம் இருநாடுகளுக்கும் இன்னும் எத்தனை நாளுக்குத்தான் கட்டுப்படியாகும் என்பது ஒருபுறமிருகக், இது ஏற்கனவே மேற்காசியாவில் நிலவிவரும் பதற்றநிலை முனைப்படையவும் பிரச்னைகள் மேலும் சிக்கலடையவும் வழிகோலுவதாயுள்ளது.


சாயி ரெலி ரேப்

புதிய யுக்திகளுடன்
புதுமையான (STEREO) படப்பிடிப்பு
புத்தம் புதிய வீடியோ சாதனங்களுடன் உங்கள்
வைபவங்களுக்கு வருகைதந்து உரியமுறையில் வீடியோ
படப்பிடிப்புச் செய்பவர்கள்.

சாயி ரெலி ரேப்

★ திருவிழாக்கள் ★ திருமண வைபவங்கள் ★ கும்பாபிஷேகங்கள்
★ குடிபுகு வைபவங்கள் ★ இசை விழாக்கள் ★ அரங்கேற்றங்கள்
இதுபோன்ற அனைத்து வைபவங்களையும் இயற்கை வர்ணக்கலரில்
எழில்மிகு காட்சிகளுடன் ஏற்றமுறையில்
வீடியோ படப்பிடிப்புச் செய்து கொள்ள
சாயி ரெலி ரேப் தொலைபேசி: 23759

விபரங்களுக்கு:
ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ்
141, ஆஸ்பத்திரி வீதி,
நவீனசந்தை
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22660

குறிப்பு: கேக் தயாரிப்பதற்கான சகல பொருட்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.


## கடல் கடந்த தமிழ்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற பெயர் யாழ்ப்பாணத்தில் இப்பொழுதும் வழங்கி வருவதாகும்.

### சங்ககாலச் சொற்பிரயோகம்

சங்ககாலச் சொற்களிற் சில இந்தக்காலத்திலும் யாழ்ப்பாணத்தில் கல்வித் தேர்ச்சியில்லாத சாதாரண மக்களின் பேச்சுவழக்கில் இருக்கின்றன. 'ஐது' என்பது சங்கஇலக்கியச் சொல்லாகும். யாழ்ப்பாணத்தில் காய்கறித் தோட்டங்களில் வேலை செய்வோர் பயிர்களை ஐதாகநடு என்று சொல்வார்கள். ஐது சிறிது அகன்றுள்ளனவற்றைக் குறிக்கும் சொல்லாக இங்கு வழங்கப்படுகிறது. 'அதர்' என்ற சொல் வெட்டப்பட்ட குறுகிய வழியைக் குறிக்கும் பொருளில் சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் அதர் வெட்டுதல் என்பது சாதாரணப் பேச்சுவழக்கில் உள்ளது. 'நொது மலாளர்' என்ற பிரயோகம் புறநானூற்றில் வருகின்றது. இரண்டு பக்கங்களிலும் சாராமல் இருப்பவரை அவர் நொதுமலில் இருக்கிறார் என்று யாழ்ப்பாணத்து மக்கள் கூறுவார்கள். நிரை (வரிசை), முகில் (மேகம்), திரை(அலை)போன்ற சொற்கள் யாழ்ப்பாணத்தில் சாதாரண பேச்சுவழக்கில் இருக்கின்றன.

தென்னிந்தியாவில் இச்சொற்களின் பொருளைத் தமிழிற் பாண்டித்தியம் பெற்றவர்களே அறிவார்கள்.

மிகப் பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் பெண்குழந்தையை மகனே என்று அழைக்கும் வழக்கத்தைக் குறிக்கும் ஒரு சூத்திரம் உண்டு.

### யாழ்ப்பாணத்தில் சங்ககாலத்திலேயே தமிழ் மக்கள் வாழ்ந்தனர்

இவ் வழக்கம் தென்னிதிந்யாவில் அறவே மறைந்தொழிந்து போயினும் யாழ்ப்பாணத்தில் இன்றும் நிலவுகின்றது.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் சங்ககாலத்திலே (17ம் நூற்றாண்டுகளுக்கு முன்) நிலை பெற்றிருந்தனர் என்று பல காரணங்களால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

### தமிழ்ச் சங்கம்

யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி ஆரம்பித்த பிறகு பல தமிழ் நூல்கள் தோன்றலாயின. இம் மன்னர்கள் 14ஆம் நூற்றாண்டில் இலங்கை முழுவதிலும் ஆதிக்கம் பெற்று விளங்கினார்கள் இந்தப்பரம் பரையினர் யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ் சங்கத்தை நிறுவினார்கள். பாண்டிய மண்டலத்தினின்றும் சோழ மண்டலத்தினின்றும் தேடிக்கொண்டு வரப்பட்ட அரிய ஓலைச் சுவடிகளை இவர்கள் ஒரு நூல் நிலையத்தில் சேமித்து வைத்தார்கள். இவர்களிற் சிலர் தமிழிற் பாண்டித்தியம் பெற்றவர்களயிருத்தார்கள்.

தெக்கிணகைலாச புராணம் என்ற கவி நயம்மிக்க நூல் ஓர் ஆரியச் சக்கரவர்த்தியினால் இயற்றப்பட்டதாகச்சொல்லப்படுகிறது. 14ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் செகராசசேகரமாலை என்ற ஒருசோதிட நூல் இயற்றப்பட்டது. இதிலுள்ள சிறப்புப் பாயிரத்தினின்று ஆராச்சியாளர்கள் இதன் காலத்தை வரையறுத்துள்ளார்கள். இக்காலத்தில் சரசோதி மாலை என்ற இன்னொரு சோதிட நூலும் வெளிவந்தது. செகராசசேகரம், பரராசசேகரம் என்ற விரிவான வைத்திய நூல்களும் ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தில் இயற்றியதாகும். இங்கு குறிக்கப்பட்ட சோதிட நூல்களும் வைத்திய நூல்களும் இனிய செய்யுள் நடையில் அமைந்துள்ளன.

### கைலாய மாலை

யாழ்ப்பாணத்தின் பூர்விகச் சரித்திரத்தையும் முதல் ஆரியச்சக்கரவர்த்தி பாண்டிய நாட்டினின்று யாழ்ப்பாணத்தில் ஆட்சிபுரிய வந்த வரலாற்றையும் கூறும் கைலாயமாலை என்ற செய்யுள் நூலும் ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தில் தோன்றியவையாகும். இம் மன்னர் பரம்பரையைச் சேர்ந்த அரசகேசரி என்ற புலவர் வடமொழி இரகு வமிசத்தைத் தழுவி ஒரு சிறந்த செந்தமிழ் காவியத்தை இயற்றினார். பலவகை சுவைகள் பொதிந்த இந்தக் காவியம் யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தமிழ் மொழி அடைந்திருந்த உன்னத நிலையைக் காட்டும் பேரிலக்கியமாக விளங்குகிறது. 16ம் நூற்றாண்டுக்குப் பிறகு ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி முடிவடைந்தது-யாழ்ப்பாணம் போர்த்துக்கேயர் வசத்தில் வந்த காலத்தில் தமிழ்வளர்ச்சி தடைப்பட்டது.

(இன்னும் வளரும்)

## சிரியுங்கள்

மகன்! அப்பா, பாலைவனத்தை எப்படிச் சோலைவனமாக்குவது?

தந்தை; ப்பூ... இது தெரியாதா? பாவன்னாவை சோவன்னாவாக மாற்றிவிட்டால் போச்சுது

- கா. யோ. கிரிதரன்

## இவ்வாரம் எப்படி?

(13ம் பக்கத் தொடர்ச்சி)

எட்டிப் போவதில் நட்டமடையலாம் தேடிவரும்தென்றல் படுகுழி பக்கத்தில்உண்டு பகைவரின் கைவரிசை பல வழிகளிலும் தென்படும்.

### மகரம்

பிதாவழிச் சுகம் பெரியோர்களின் புகழ்ச்சியுண்டு. தென்றலும் தீயாக மாறும் உணவு விடயத்தில் கவனம் செலுத்தவும் மனதினில் இனிமை கருமத்தில் ஆர்வம் பிறக்கும்.

### கும்பம்

வாழ்வுப் பாதையில் வளமான திருப்பம் மேலலிகாரிகளின் சிறப்பு உண்டு பெரியவர் ஒழிவரின் வருகை கிடைக்கும் நட்டப்படுத்த கெட்ட சகாக்கள் வட்டமிடுவர் திட்டம் போட்டே அடுத்துக் கெடுப்பவர் அவதானம் வேண்டும்.

### மீனம்

பலவழிகளிலும் பணவரவுக்கு இடமுண்டு பிள்ளைகள் மூலம் பெருமையுமுண்டு. தொழில்துறையில் புதியவெற்றிகள் கிடைக்கும் மனம் போல் வாழ்வு வளரும் குடும்பத்தில் குதூகலம் தென்படும் மகிழ்ச்சியான வாரம்.

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
சிவகெங்கைச்சீமை

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
காசி யாத்திரை
25ந் திகதி முதல்
தினசரி 10-15, 1-15,
4-15, 7-15
மூன்றும் பிறை

சாந்தி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
ஊரும் உறவும்
(கலர்)

Rajah JAFFNA
Daily 10-30, 2-00, 4-30
7-00 and 9-30
The Fighters
(Color) (Adults only)
An action Karate Film
Full of Suspence and
Thrills

மனோகரா
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி — K. R. விஜயா
மாதவி, சுருளிராஜன்
ஸ்ரீபிரியா மற்றும் பலர்
நிறம்பட நடித்த
வர்ணப்படம்
சத்திய
சுந்தரம்

Regal Jaffna
Daily 10-30 a. m. 2-30
4-45, 7-00 only
CHARLES BRONSON..
TELEFON
From 22nd
Island
வெகுவிரைவில்
பயணங்கள்
முடிவதில்லை

வின்ஸர் [யாழ். நகர்]
தினசரி 10-30, 2-30, 6-15
கமல் - ரஜனி - ஜெமினி
ஸ்ரீபிரியா - ஜெயபாரதி
அலாவுதீனும்
அற்புத விளக்கும்
(கலர் - புதிய பிரதி)
விரைவில்!
ஆனந்த ராகம்

லிடோ (யாழ். நகர்)
தினசரி
9-30, 2-15, 6-30,
விடியும்வரை
காத்திரு
21-11-83 முதல்
ஒருதாய் மக்கள்

வெலிங்டன்
(யாழ். நகர்)
If I have seen it;
you better see it.
This is the film not
to be missed.
36th Chamber
of Shaoline
தினசரி 4 காட்சிகள்

## இன்று

[யாழ்ப்பாணம்]

நல்லூர் வண்ணை. அருள்மிகு வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் இன்று மாலை 6 00மணிக்கு சுமங்கலி பிரார்த்தனையும், திருவிளக்குப் பூஜையும் நிகழவுள்ளது.

## வேலணை வீதிகள் சீர்கேடு

(வேலணை)

வேலணை பெருந்தெருக்கள் திணைக்களத்தின் நிர்வாகத்திலுள்ள வீதிகளில் அநேகமானவை சீர்திருத்தப்படாமல் மோசமான நிலையில் காட்சியளிக்கின்றன.

இதுசம்பந்தமாக மேற்படி திணைக்களத்திற்கு பல தடவைகள் தெரிவித்தும் எதுவித பலன்களும் கிடைக்கவில்லை.

## லாபம்: 93 சதம் இழப்பு ரூ. 1000!

[யாழ்ப்பாணம்]

5 ரூ. 07சதத்திற்கு 250கிறும் விற்கவேண்டிய மைசூர்ப் பருப்பை 6 ரூபாவுக்குவிற்ற கடை உரிமையாளருக்கு 1,000 ரூபா அபராதமும் 4 கிழமை 5 வருஷத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் நீதிபதி விதித்துள்ளார்.

ஊர்காவற்றுறையிலுள்ள பிரபலமான கடை வியாபாரிக்கே இக்கதி நேர்ந்தது.

யாழ். விலைககட்டுப்பாட்டுப் பரிசோதகர் கே. இரத்தினம் இம்மோசடியைக் கண்டுபிடித்துச் சம்பத்தப்பட்ட கடை உரிமையாளர் மீது ஊர்காவற்றுறைநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

நீதிபதி பாலவடிவேல் கடை உரிமையாளருக்கு மேற்குறிப்பிட்ட அபராதம் விதித்தார்.

[மா]

ஹரன் (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-30, 6-30
நாகேஷ் - விஜயலலிதா
தேன் கிண்ணம்

## சட்ட விரோத சிப்பி அரிப்பு

(பண்டத்தரிப்பு)

நவாலிக் கிராமத்தின் தென் மேற்குபகுதிகளில் சட்டவிரோதமான முறையில் சிலர் சிப்பி அரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும், இவ்வாறு சிப்பிகள் அரித்து எடுத்து செல்லப்படுவதால் இப்பகுதியில் உள்ள கிணற்று நீர் உப்புத் தன்மையுடையதாக மாறும் அபாயம் ஏற்படும் என்றும், மேய்ச்சல் நிலமும், விவசாயமும் இதனுல் பெரிதும் பாதிக்கப்படும் என்றும் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு சிப்பிகள் சேகரிக்கப்படுவது 1979ம் ஆண்டின் கமநலச் சேவைகள் சட்டத்திற்குமுரணனது என்றுநவாலி பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு கௌரி காந்தன் இது பற்றி வெளியிட்டுள்ளதுண்டுப் பிரசுரம் ஒன்றில் தெரிவித்துள்ளார்

சிப்பி அரிப்பு நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுபற்றி வலி தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு அ. மகாதேவாவிற்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(வெ)

## பன்னவேலைக்குச் சார்வு இன்றி அகதிகள் அவதி

(சாவகச்சேரி)

கைதடி அகதிகள் முகாமில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பன்னவேலைப் பயிற்சி வகுப்பில் ஈடுபடும் பெண் பிள்ளைகளுக்கு உடனடியாகப் பனம் சார்வுகள் மிகவும் அவசியமாகத்தேவைப் படுகின்றதாம்.

பனம் சார்வுகள் வைத்திருப்போர், இவ்வகதிகளுக்கு உதவி புரியும்வண்ணம் வேண்டப்படுகின்றனர்கள்.

பனம்பொருள் அபிவிருத்திச் சபை' இம்முகாமிற்கு ஒரு பெண் போதனசிரியையை நியமனம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(அ)

சீன சஞ்சிகைகளும் மார்க்ஸிச நூல்களும்

நவ சீனவின் எல்லா சஞ்சிகைகளுக்கும் 1984-ம் ஆண்டுக்கான சந்தாக்கள் இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு சந்தாதாரருக்கும் அழகிய சீனக் கலண்டர் அன்பளிப்பு உண்டு. சந்தா விண்ணப்பப் படிவங்களுக்கும் மற்றும் மார்க்ஸிச நூல்கள், இலங்கை - இந்திய இலக்கியங்களுக்கும்.

தொடர்பு கொள்ளுங்கள்:-

யாழ். புத்தக நிலையம்,
[பெற்றேலியக் கூட்டுத்தாபன முன்பாக]
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9677

பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

பின்வரும் பாடங்களுக்கான அடுத்த பயிற்சியும் போதனைகளும் சனிக்கிழமை 3-12-83 ஆரம்பமாகின்றன.

1. கம்பியூட்டர் புறேகிறமிங் (3 பிரிவுகள்) செய்முறைப் பயிற்சி உட்பட புதிய அப்பிள் கம்பியூட்டரில் பயிற்சி அளிக்கப்படும் (6 மாத காலம்)
2. மோட்டார் மெக்கானிசம் (6 மாத காலம்)
3. மின்சார இணைப்புகள் (Electrical Wiring) (1 மாத காலம்)
4. பிளம்பிங் பைப் இணைப்புகள் (ஒரு மாத காலம்)
5. ஆங்கில வகுப்புகள்

விண்ணப்பங்கள் அலுவலக நேரங்களில் எமது நிறுவனத்தில் பெறப்படும் படிவங்களில் தயாரிக்கப்பட்டு 30-11-1983 அன்று அல்லது அதற்கு முன்கிடைக்கக் கூடியதாக:- பதிவாளர், பற்றீசியன், இன்ஸ்ரிரியூட்ஸ், 59, சென்பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

வரையறுக்கப்பட்ட இடங்கள் மட்டும் உள்ளதால் முதல்வரும் விண்ணப்பங்களுக்கே முன் உரிமை கொடுக்கப்படும்

பதிவாளர்,

10016

சமநீதி
தமிழ் அகதிகள்
மறுவாழ்வுத்
திட்டம்
டிசம்பர் 11
பாரதி நாளில்
ஆரம்பிக்கும்

சமநீதி இயக்கம் SAMANEETHI MOVEMENT

பாரதி அச்சகத்திற்கு

சகல வேலையாட்களும் உடன் தேவை!

1983 ஜூலை வன்செயல்களின்போது பாதிக்கப்பட்டு தமிழ் பிரதேசம் திரும்பியுள்ள தமிழ் அகதிகள் மாத்திரம் விண்ணப்பிக்குக.

விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டியது:-

பி. கே. பாலசுப்பிரமணியம்
தலைவர்,
சமநீதி தமிழ் அகதிகள் மறுவாழ்வுத் திட்டம்
சமநீதி இயக்கம்
61/1, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
10009

காணிகள் விற்பனைக்கு

இராச வீதி, தோப்பு, அச்சுவேலியிலும், சிவகுல வீதி, உரும்பிராய் தெற்கிலும் வீடு, தொழிற்சாலை முதலியன கட்டுவதற்கும், தோட்டம் செய்வதற்கும் ஏற்ற காணிகள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-

க. கனகரத்தினம்,
84, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். 10005

## ஆறுவது நினைவஞ்சலி



திருமதி
செல்வநாச்சி செல்வரத்தினம்

எம்மை ஆறாத்துயரிலாழ்த்தி மீளாத் துயில் கொண்ட எமது அன்புத் தெய்வமே, கலங்கரை விளக்குப்போல எம் குடும்பத்திற்கு வழிகாட்டி ஏற்றந்தந்த எம் குடும்பத் தலைவி, நீர் எம்மை விட்டுப் பிரிந்து வானுறைந்தாலும் உம் நினைவு எம்மை விட்டு என்றும் நீங்காது. தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்
அன்புக் குடும்பத்தினர்

செல்வகிரி,
உடுப்பிட்டி,
20-11-83.

(9966)

ICMA & CHARTERED

Courses Commence:
I. C M A. MAY, '84

| | |
|---|---|
| WEEKDAY COURSE | |
| Section A | 25-11-83 |
| WEEKEND COURSES | |
| Section B | 26-11-83 |
| Prof. I | 26-11-83 |
| Prof. II | 26-11-83 |
| Chartered Prelim Nov. 84. (only Auditing and Statistics) | 10-12-83 |
| Chartered Licentiate : Already in progress | |
| I. A. A. and D. P. (only Data Processing) | 17-12-83 |
| London AEB (only Econs and Cey Adv Level ( Accounting ) (Eng. medium) | 25-11-83 |

Enrolment for single subject only in Statistics and O. P. for Section B of ICMA
S. Vanniasingham M. Sc (Econ) (Lond)
B. Com. (Lond
VAIRAVAR KADADCHAM
Palaly Road, Thirunelvely.
Jaffna. (Phone 24424) 9917

## சுனில்கவாஸ்கருக்கு எலிசபெத் மகாராணி கௌரவம்

புதுடில்லி, நவ. 19

இந்தியா வந்துள்ள பிரிட்டிஷ் அரச தம்பதிகள் மகாராணியார் எலிசபெத்தும், அவரது கணவர் இளவரசர் பிலிப்பும் இந்திய கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கரைச் சந்திக்க விருப்பந் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் திங்கட்கிழமை அரச தம்பதிகள் இந்திய முக்கியஸ்தர்களுக்கு விருந்துபசாரமொன்றை புதுடில்லியில் வழங்கவுள்ளனர். அதில் பங்குபற்றும்படியே அவர்கள் திரு. கவாஸ்கரை அழைத்துள்ளனர்.

அரசதம்பதிகள் கவாஸ்கரை அவர் அதிக டெஸ்ட் 'செஞ்சரி'களை எடுத்து முன்னாள்வீரர் பிரட்மனது சாதனையுடன் தமதுசாதனையை சரிசமப்படுத்தியதைகௌரவிக்கவேஅழைத்துள்ளதாகத் தெரிவித்தனர். இளவரசர் பிலிப் ஒரு கிரிக்கெட் ஆட்ட ரசிகர் என்பது குறிப்பிடத்தக்கது. [கி]

## இந்திராவுக்கு அறுபத்தேழு!

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்றுத்தமது 67வது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.

திருமதி இந்திராகாந்தியை தேகாரோக்கியத்துடன் பல்லாண்டு வாழ வாழ்த்தி இந்திய முப்படைகளின் தளபதிகளும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பிவைத்தனர்.

இந்திராவின் 67வது பிறந்த தினத்தையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனும் அவருக்கு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

[கி-வெ]

## தமிழ்நாடு சட்டசபை கூட்டத்தொடர் ஒத்திவைப்பு

சென்னை, நவ. 19

இம்மாதம் 8ம் திகதி ஆரம்பித்த தமிழ்நாடு சட்டசபைக் கூட்டத்தொடர் நேற்று முன்தினம் மறுதேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தொடரில் இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பான விவாதம், தமிழ்நாடு அமைச்சரவை மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதம் ஆகியன முக்கிய அம்சங்களாக இடம் பெற்றன. (சூ)

## முத்திரைக்குத் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் 100 ரூபா. 50 ரூபா, 25 ரூபா, 10 ரூபா முத்திரைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (மா)

## விசேட தொழிற்பயிற்சி

(சென்னை)

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட கலவரங்களினால் பாதிக்கப்பட்டு இந்தியா திரும்பியுள்ளவர்களின் பிள்ளைகளுக்கு விசேட தொழில் பயிற்சிகள் தமிழ்நாட்டில் வழங்கப்படவுள்ளது.

தமிழ்நாடு மறுவாழ்வுத் துறையினர் இவர்களுக்கு தையல், தச்சுத்தொழில் போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கவுள்ளனர். [சூ]

## சின்ன வெங்காயத்தின் விலை

(கொழும்பு)

டிசம்பர் மாதம் நடுப்பகுதி வரை சின்ன வெங்காயத்தின் விலை உயர்வாகவே காணப்படுமென்று விவசாய ஆராய்ச்சித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வருட இறுதியில் இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து அறுவடை செய்யப்படும் 40000 அந்தர் சின்ன வெங்காயம் பாவனைக்கு வந்ததும் இதன் விலைகள் குறைவடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது சின்ன வெங்காயத்தினை யாழ்ப்பாணம், புத்தளம் ஆகிய பகுதிகளே வழங்கிவருகின்றன. (சூ)

## பிறப்பு, இறப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாட்சிப் பத்திரங்கள் பெறுவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

இதனால் யாழ்ப்பாணமாவட்டத்திலுள்ளவர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் வேலை வாய்ப்புப் பெறுவதற்காக அண்மையில் பலர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்துக்கு விண்ணப்பித்திருந்தபோது, அவர்களின் பிறப்புப் பதிவு இல்லைஎன்றும் கொழும்பு தலைமைச்செயலகத்துக்கு பிறப்புப் பதிவுகோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் பதிவாளர் அறிவித்துள்ளார்.

பிறப்பு-இறப்பு விண்ணப்பதாரர்களின் பதிவுத் திகதியைத்தேடி, அடிக்கடி பதிவுப் புத்தகங்களைப் புரட்டுவதால் புத்தகங்களில் ஒற்றைகள் கிழிந்தும் சிதைந்தும்போவதாகவும், அப்புத்தகங்களை திரும்பவும் (பைன்ட்) கட்டாமல் விடுவதால் அப்படியே உருக்குலைந்து போவதாகவும் பதிவாளர் பகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் கவலையுடன் எடுத்துச் சொன்னார்.

பதிவுப் புத்தகங்களைக்கட்டுவதற்கு ஒரே ஒருஊழியர்தான் அமர்த்தப்பட்டிருக்கிறாராம்.

1942ம் 43, 46ம் ஆண்டுகளின் பதிவுப் புத்தகங்கள் அறவே பார்க்க முடியாத நிலையில் உள்ளதாகவும், 25ம் ஆண்டுக்கான உடுவில், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய இடங்ளின் பதிவுப் புத்தகங்களும் சேதமடைந்திருப்பதாகவும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் தெரிவித்தார்

1980, 82, 83ம் ஆண்டுக்களுக்கான பதிவுப் புத்தகங்களும் முதல்-கடைசி ஒற்றைகள் இல்லாத நிலையிலும் காணப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. (மா)

27—11—83

## ஈழநாடு வாரமலர்

வழமையான அம்சங்களுடன்,

- பாடசாலைக்கல்வியும் டியூட்டறிக் கல்வியும் ஒன்றிணைக்கப்படவேண்டுமா?
  — மாணிக்க இடைக்காடர்
- உலக அழிவு: விஞ்ஞானிகள் கூற்று பலிதமாகுமா?
  — வ. மகாதேவன்
- செயற்கை மழை பற்றிய சிந்தனை எப்போது உதித்தது?
  — அ. நடராசன்
- நமது குழந்தைகள் நமக்குப் பிரச்னையா?
  — பிலோ [illegible]சந்த்
- ஈ. கே. ஆர். கூற்றுக்கு எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் பதில்
- புதிய அம்சம்: விளையாட்டு

இன்னும் பல

## எதிர்நோக்கும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல் குழு டில்லியில் நேற்று மீண்டும் கூடி, புதிய யோசனைபற்றி ஆராய்ந்துள்ளனர். தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு, மாநிலசபைத் திட்டத்தை ஏற்கிற பட்சத்தில், தம்மை எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகளை ஆராய்ந்தனர். புதிய யோசனையில் சாதகமான ஒரு முடிவை எடுக்க முடியாத நிலையில் அரசியல் குழு தனது கூட்டத்தை முடித்துக்கொண்டிருப்பதாக அறியப்படுகிறது. ஆயினும் திரு. அமிர்தலிங்கம் இதுசம்பந்தமாக கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

திரு. அ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம், திரு. ஆர். சம்பந்தன், திரு. நீலன் திருச்செல்வம், திரு. வி. ஆனந்தசங்கரி, திரு- ரி. சிவசிதம்பரம், திரு. வி, யோகேஸ்வரன், திரு. கா. பொ. இரத்தினம் ஆகிய கூட்டணி பழைய எம். பிக்கள் டில்லியில் பார்த்தசாரதியுடன் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்கின்றனர்.

திரு தொண்டமானும் கூட்டணித் தலைவர்களுடன் பேசியுள்ளார்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நாளை 21-ந் திகதி டில்லி செல்கிறார். அவர் அங்கு பார்த்தசாரதியுடன் பேசுவார். அப்போது கூட்டணியினரின் முடிவை தெரிவிக்கவேண்டிய நிலையில் அவர் இருக்கிறார் இதனால் கூட்டணியினர் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டு, மாநிலசபைத் திட்டத்தை ஏற்பதா? இல்லையா? என்ற ஒரு முடிவெ நாளைக்குள் தெரிவிக்கவேண்டிய நிலைக்குள்ளாகிவிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அகண்ட நாம பஜனை

[புலோலி]

பருத்தித்துறை மந்திகை பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமித்தியில் கடந்த 12ம் திகதி தொடக்கம் மறுநாட் காலை 6 மணிவரை அகண்ட நாம பஜனை இடம்பெற்றது. சமித்தியின் தலைவரும் யாழ். பிரதம கல்வியதிகாரியுமான திரு வெ. சபாநாயகம் சர்வதர்ம கொடியை ஏற்றி பஜனையை ஆரம்பித்துவைத்தார். விசேட ஆராதனைகளும் இடம்பெற்றன.

## மட்டக்களப்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்த இந்த 10பேரும் பொலிசார் நடத்திய தேடுதலின் போது கைது செய்யப்பட்டார்கள் எனத்தெரிவிக்கப்பட்டது. இவர்கள் தங்கியிருந்த இரகசிய மறைவிடங்களிலிருந்து பல துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள், வெடிமருந்துகள் என்பன பெருமளவில் கைப்பற்றப்பட்டதாக அறிவித்தது.

விசேட பொலிஸ் பிரிவினர் இவர்களை விசாரணை செய்து வருவதாகவும் மேலும் தெரிவித்தது. (சூ)

## மரண அறிவித்தல்

### கதிரிப்பிள்ளை நாகரத்தினம்

(இளைப்பாறிய இ.போ.ச. வடபிராந்திய கட்டுப்பாட்டு முகாமை அதிகாரி)

தெல்லிப்பழை க. நாகரத்தினம் காலமாகிவிட்டார். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவகுமார் (பொறியியலாளர் சிங்கப்பூர்), சிவகுகன் (பொறியியலாளர் அமெரிக்கா), சிவசங்கர் ஆகியோரின் அருமைத் தந்தையும், இளைப்பாறிய தபாலதிபர் இராசரத்தினம் அவர்களின் அருமைச் சகோதரரும், பரமசிவம், பரஞ்சோதி, நாகேஸ்வரி, விவேகானந்தன், பரமேஸ்வரி பரஞ்சோதி ஆகியோரின் அருமை மைத்துனருமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 21-11-83 திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் தெல்லிப்பழையில் நடைபெறும். நண்பர்கள் உறவினர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

(10040) —பிரதான வீதி-தெல்லிப்பழை

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பு சின்னத்தங்கச்சி

நீராவியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்புவின் அருமை மனைவி சின்னத்தங்கச்சி காலமாகிவிட்டார். இவர் மனோன்மணி, கனகரத்தினம் (இளைப்பாறிய யாழ். அரசினர் வைத்தியசாலை), காலஞ்சென்ற தங்கம்மா, கனகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், நல்லையா, காலஞ்சென்ற செல்வநாயகம் (ஆசிரியர்), காலஞ்சென்ற நடராசா (ரதி வாட்ச் வேக்ஸ் அன்ட் ஸ்ரோர்ஸ், ஸ்ரான்லி பேணிசிங் பலஸ், ரி. வி. ரதி) சிவபாக்கியலட்சுமி ஆகியோரின் மாமியுமாவர். சற்குணானந்தன் (உரிமையாளர் டில்கா வாட்ச் வேக்ஸ், வீனஸ்) பஞ்சலிங்கம், சற்குணராணி, தயாபரன் (உரிமையாளர் நியூ வீனஸ்), கிருபானந்தன் (பிரான்ஸ்), திருக்கேதீஸ்வரன் (முகாமையாளர் டில்கா வாட்ச் வேக்ஸ்), நந்தினி, மனோகரன், கனகரஞ்சன் (கனடா) சிவரட்னம், கனகரஞ்சனி, கனகபாலன் (ரதி வாட்ச் வேக்ஸ்), கனகரமணி, டாக்டர் சிவஞானம் (லண்டன்) இராசரதி (லண்டன்), இராசகுலசிங்கம் (உரிமையாளர் ஸ்ரான்லி பேணிசிங் பலஸ்), இராசகுலேந்திரன், இராசசேகரன் (உரிமையாளர் ரதி வாட்ச் வேக்ஸ் அன்ட் ஸ்ரோர்ஸ்). இராசஸ்ரீதரன் உரிமையாளர் ரி. வி. ரதி) இராசசீலன் (மாணவன் யாழ். இந்துக்கல்லூரி), இராஜரஜனி ஆகியோரின் பேத்தியுமாவர். தர்ஷனி, ரேவதி, கார்த்திகா, சித்திரா, நாகவதனா, ஆரணன், ரேணுகா, சுகுந்தன், லவன் (லண்டன்), சேந்தன் (லண்டன்), ஆகியோரின் பூட்டியுமாவர்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 20-11-83 ஞாயிறு மாலை 2 மணியளவில் இல: 6, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் வீதியில் நிகழ்ந்து, தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். (10039)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தம்பி தையலம்மை

திருமதி சின்னம்தம்பி தையலம்மை சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அருமை மனைவியும், மயில்வாகனத்தின் அருமைச் சகோதரியும், தவமணியின் மைத்துனியும், தங்கராசா (ராஜா கூல் பார் உரிமையாளர்), பராசக்தி, தியாகராசா (ராஜா தியேட்டர் உரிமையாளர், S. T. R.) நித்தியலெட்சுமி, தனபாலசிங்கம் (காணி அலுவலகம் - துணுக்காய்), பத்மநாதன் (பிரான்ஸ்), தர்மராஜா ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற கோபாலபிள்ளை, சோமசுந்தரம் (ஒஸ்மானியா கல்லூரி), தங்கரத்தினம், சரஸ்வதி, சோதீஸ்வரி, ஜெயராணி (பிரான்ஸ்), நீலலோஜனி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கஸ்தூரியார் வீதி 477ம் இலக்க இல்லத்திலிருந்து ஞாயிற்றுக்கிழமை (20-11-83) மாலை 4-00 மணிக்கு இறுதிச் சடங்கிற்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 10041

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] மேற்கு வீதி, [illegible] இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389 —24126.